பக்குவமான கேள்விகளும்
பக்குவமான பதில்களும்

பக்தி வேதாந்த புத்தக நிறுவனம்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பக்குவமான கேள்விகளும் பக்குவமான பதில்களும்

(PERFECT QUESTIONS PERFECT ANSWERS)

தெய்வத்திரு
அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா
ஸ்தாபக ஆசாரியர்: அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம்

தமிழாக்கம்
ராமசுப்ரமணியம்

பக்திவேதாந்த புத்தக நிறுவனம்
(நியுயார்க்-லாஸ் ஏஞ்சல்ஸ் - லண்டன், மும்பை, சென்னை)

தலைப்பு : பக்குவமான கேள்விகளும்
பக்குவமான பதில்களும்

Title : Perfect Questions Perfect Answers

இப்புத்தகத்தைப் பற்றிய விஷயங்களில்
ஆர்வமுடையவர்கள் கீழ்க்கண்ட முகவரியோடு தொடர்பு
கொள்ளவும்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம்
ஹரே கிருஷ்ண வளாகம், பக்திவேதாந்த சுவாமி தெரு,
கிழக்கு கடற்கரை சாலை, ஈஞ்சம்பாக்கம், சென்னை - 600 041
✆: 2501 9147, 2501 9303

பக்திவேதாந்த புத்தக நிறுவனம்
33/9, அப்துல் அசீஸ் தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017
✆: 2435 4479

அல்லது
புத்தகத்தின் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ள **'இஸ்கான்'**
மையங்களை அணுகவும்.

அச்சிட்டது : மணி ஆப்செட், சென்னை - 5
தொலைபேசி : 28555 249, 28588 186

முதற் பதிப்பு - 2000 : 20000 பிரதிகள்
இரண்டாம் பதிப்பு - 2001 : 5000 பிரதிகள்
மூன்றாம் பதிப்பு - 2002 : 5000 பிரதிகள்
நான்காம் பதிப்பு - 2003 : 5000 பிரதிகள்
ஐந்தாம் பதிப்பு - 2004 : 5000 பிரதிகள்

பதிப்புரிமை

© 2000 பக்திவேதாந்த புத்தக நிறுவனம்

அறிமுகம்

இறைவன், ஆன்மீக வாழ்க்கை—இவையெல்லாம் நான் ஸ்ரீல பிரபுபாதாவை சந்திப்பதற்கு முன்பு ஏதோ தெளிவற்ற சொற்களாகவே எனக்குப் பட்டன. மத விஷயங்களில் எனக்கு எப்போதும் ஆர்வம் உண்டு. ஆனால், கிருஷ்ண உணர்வு பக்தர்களை சந்திப்பதற்கு முன்பு, ஆன்மீக வாழ்வைப் பற்றிப் பயன் தரும் வகையில் ஆய்வதற்குத் தேவையான கண்ணோட்டத்தை நான் பெற்றிருக்கவில்லை. படைப்புக் கர்த்தா என்று ஒருவர் உண்டு என்பது பொதுவாக யாரும் அறியக் கூடியது. ஆனால், கடவுள் யார்? நான் யார்? ஹீப்ரு பள்ளியில் நான் பயின்றிருந்தேன். கிழக்கு நாடுகளின் தத்துவ சாஸ்திரங்களைக் கற்றிருந்தேன். ஆனால், என் கேள்விக்குத் திருப்திகரமான பதில்கள் எனக்குக் கிடைத்ததில்லை.

1968ம் ஆண்டின் பிற்பகுதியில் நியூயார்க்கின கிரீன்விச் கிராமத்தில் ஹரே கிருஷ்ண மந்திரத்தை முதன் முறையாகச் செவியுற்றேன்.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே.

இந்த சங்கீர்த்தனம் என் உள்ளத்தைக் கவர்ந்தது. மனதுக்கு ஆறுதலாக இருந்தது. இந்த மந்திரம் என் மனதில் பதிந்துவிட்டது. அந்தப் பக்தர்களிடமிருந்து பத்திரிகை எதுவும் பெறாமல் போய்விட்டோமே யென்று வருந்தினேன். பிற்காலத்தில் எனக்கு விளக்கப்பட்டது போல், நாளடைவில் இறையன்பாகப் பரிணமிக்கக் கூடிய பரமான வித்து ஒன்று என்னுள் ஊன்றப்பட்டு விட்டது.

பல மாதங்களுக்குப் பிறகு 'ஹரே கிருஷ்ண' மந்திரம் பொறிக்கப்பட்ட அட்டையொன்று எனக்குக் கிடைத்தது. 'இறைவனின் இந்நாமங்களைத் துதிப்பாயாக! உன் வாழ்வு உன்னதமடையும்!' என்ற உறுதிமொழி அந்த அட்டையில் காணப்பட்டது. அப்படியே, அவ்வப்போது நானும் துதித்து வந்தேன். உண்மையிலேயே அந்த மந்திரம் எனக்கு மன அமைதியைக் கொடுத்ததை உணர்ந்தேன்.

கல்லூரியில் ரசாயனத்தில் இள-நிலை விஞ்ஞானப் பட்டம் பெற்ற பின் 1971ல் அமைதிப் படையில் **Peace Corps**

சேர்ந்து அறிவியல் ஆசிரியராகப் பணியாற்ற இந்தியாவுக்குப் போனேன். இந்தியாவில் 'ஹரே கிருஷ்ண' இயக்கம் பற்றி விசாரித்தேன் அந்த சங்கீர்த்தனத்தால் கவரப்பட்டேன்.

அதன் தத்துவம் எனக்குப் புதிராக இருந்தது. அந்த இயக்கம் எவ்வளவு நம்பகமானது என்று அறியவேண்டு மென்ற ஆவல் என்னுள் எழுந்தது. இந்தியாவுக்குச் செல்லு முன்பு நியூயார்க்கிலுள்ள கிருஷ்ணர் ஆலயத்துக்குப் பல முறை சென்றிருந்தேன். ஆனல், அங்கு நான கண்ட பக்தர்களின் கண்டிப்பான வாழ்க்கை முறையை மேற்கொள்ளும் எண்ணம் எனக்கு ஏற்படவில்லை.

இந்தியாவில் கிருஷ்ண உணர்வு பக்தர்களை அக்டோபர் 1971ல் அவர்கள் கல்கத்தாவில் நடத்திய விழா ஒன்றில் முதன் முறையாகச் சந்தித்தேன். யோக முறையின் நோக்கத்தையும் ஆன்மீக வாழ்வுபற்றி சிந்திக்க வேண்டியதன் அவசியம் பற்றி யும் அந்த பக்தர்கள் எனக்கு எடுத்துரைத்தார்கள். அப்போது தான் அவர்கள் மேற்கொண்டுள்ள வழிபாடுகளும், சடங்கு களும் சாரமற்றவையோ, வெறும் உணர்ச்சிகளின்பாற் பட் டவையோ அல்ல, மாருக, உண்மையான விவேகமான வாழ்க்கை முறை என்பதை உணரத்துவங்கினேன்.

என்ருலும் ஆரம்பத்தில் கிருஷ்ண உணர்வின் தத்துவத் தைப் புரிந்து கொள்வது எனக்கு மிகவும் கடினமாயிருந்தது. நான் பெற்றிருந்த மேல் நாட்டுப் பாரம்பரியம் என் முகத்தி லிருந்த மூக்கைப் போல் எனக்குத் தெளிவாகத் தெரிந்த விஷயங்களைக் கூட ஒப்புக்கொள்ள விடாமல் எத்தனையோ நுட்பமான வழிகளில் என்னைத் தடுத்தது. நல்ல வேளையாக அந்தப் பக்தர்கள் ஒரு சில அடிப்படை விரதங்களை மேற்கொள் வதன் நன்மையைப் பற்றி எனக்குச் சொல்லித்தந்திருந்தார் கள். அவற்றை அனுசரித்ததன பயனுக ஆன்மீக வாழ்வு பற்றிய பரிச்சயம் ஓரளவு எனக்குக் கிடைத்தது. ஆன்மீகம், தன்னைக் கடந்த நிலை, இவை பற்றிய என் கருத்துக்கள் உண்மையினின்று எவ்வளவு விலகியவை, பராபரியானவை என்பதை இப்போது நான் எண்ணிப் பார்க்க முடிகிறது. 1971 நவம்பரில் ஸ்ரீல பிரபுபாதா அவர்களை நான் சிறிது நேரம் சந்திக்க நேரிட்டது. அதற்குச் சிறிது பின்னர் நான் சைவ உணவு மட்டுமே உண்பதென முடிவெடுத்தேன். (சைவ

உணவை மேற்கொண்டது பற்றி நான் பெருமையுற்றிருந்தேன். புறாக்கள்கூட சைவ உணவைத் தான் சாப்பிடுகின்றன வென்பதை ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் பின்பு எனக்கு உணர்த்தினர்கள்)

1972 பிப்ரவரியில் கல்கத்தாவில் சில பக்தர்களைச் சந்தித்தேன். மாயாப்பூரில் நடைபெற விருந்த விழாவிற்கு வருமாறு அவர்கள் என்னை அழைத்தார்கள். கிருஷ்ணரின் அவதாரமெனக்கருதப்பட்ட சைதன்ய மகாப்பிரபுவின் மகிமையைக் கொண்டாடுவதற்காக அந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அச்சமயம் நான் நேப்பாளத்துக்குச் செல்லத் திட்டமிட்டுக் கொண்டிருந்தேன். ஆனல் இந்தியாவை விட்டுச் செல்ல அமைதிப்படை என்னை அனுமதிக்கவில்லை. எனவே நான் மாயாப்பூருக்குச் சென்றேன்.

அதிகபட்சம் இரண்டு நாட்களுக்கு மட்டுமே மாயாப்பூரில் தங்குவதென்ற உத்தேசத்தோடுதான் நான் புறப்பட்டேன். ஆனல், அங்கு நான் தங்கியதோ ஒரு வார காலம்.

அந்தத் தீவிலிருந்த பக்தனல்லாத மேல் நாட்டான் நான் ஒருவனே. ஆனல், பக்தர்களோடு அவர்களுடைய வாசஸ்தலத்திலேயே நான் இருந்ததால் கிருஷ்ண உணர்வைப் பற்றி நெருக்கமாகத் தெரிந்து கொள்ளும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

விழாவின் மூன்றுவது நாளன்று ஸ்ரீல பிரபுபாதா அவர்களைச் சந்திககும்படி நான் அழைக்கப்பட்டேன். செங்கல்லால் கட்டப்பட்டுக் கூரைவேய்ந்த ஒரு சிறு குடிசையில் அவர் வாழ்ந்திருந்தார். இரண்டு மூன்று எளிய தட்டுமுட்டுச் சாமான்களே அங்கு காணப்பட்டன. ஸ்ரீல பிரபுபாதா என்னை உட்காருமாறு பணித்து என் நலம் பற்றி விசாரித்த பின்னர், ஏதாவது கேள்விகளிருந்தால் கேட்கலாம் என்ருர். ஆன்மீக குருமார்களின் சிஷ்ய பரம்பரையில் வந்தவராகையால் என் கேள்விகளுக்கெல்லாம் அவர் விடையளிக்கக் கூடியவரென்று பக்தர்கள் எனக்கு விளக்கியிருந்தார்கள். உலக நடப்புக்களையெல்லாம் உண்மையிலேயே அவர் அறிந்தவரென்று நான் எண்ணினேன். நான் வியந்து பாராட்டிய பக்தர்கள் உறுதி கூறியிருந்ததை மனதில் கொண்டு கேள்விகள் கேட்க ஆரம்பித்தேன். என்னையறியாமலேயே நான் ஒரு

குருவிடம் போய்ச்சேர்ந்து, அதற்கென வகுக்கப்பட்டுள்ள முறையில். பணிவுடன் ஆன்மீக வாழ்வு பற்றிய கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தேன்.

ஸ்ரீல பிரபுபாதாவுக்கு என்னை மிகவும் பிடித்துப் போய் விட்டதாகத் தோன்றியது. அடுத்த பல நாட்களிலும் அவர் என் கேள்விகளுக்கெல்லாம் விடையிறுத்தார். என் கேள்விக ளெல்லாம் தர்க்க ரீதியிலேயே அமைந்திருந்தன. ஆனால் அவரோ, நான் என் வாழ்வை ஆன்மீகப் பாதையில் செலுத்த உதவும் வகையில் நேருக்கு நேரான விடைகளை அளித்தார். அவருடைய பதில்கள் வாதபூர்வமாகவும், விஞ்ஞான ரீதியி லும், திருப்திகரமாகவும், ஆச்சரியப்படத்தக்க வகையில் தெளி வாகவும் இருந்தன. ஸ்ரீல பிரபுபாதா வையும் அவருடைய பக்தர்களையும் சந்திப்பதற்கு முன்பு ஆன்மீக வாழ்வென்பது எனக்கு எப்போதும் இனம்புரியாத. தெளிவற்ற விஷயமாகவே இருந்து வந்தது. ஆனால் ஸ்ரீல பிரபுபாதவுடன் நடைபெற்ற சர்ச்சை உண்மையையொட்டியதாகவும், தெளிவானதாகவும், ஆர்வமூட்டுவதாகவும் அமைந்தது.

கிருஷ்ணர் — அதாவது, கடவுள் — உன்னதமான அனு பவிப்பாளர், உயர்ந்த நண்பர், உன்னதமான உரிமையாளர் என்பதை நான் உணர உதவும் வகையில், மிக்க பொறுமை யுடன் அவர் எனக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். கடவுளை அறிவதற்குக் கடவுள் உணர்வில் அக்கறை கொள்ள வேண்டுமென்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்தாலும் அதை ஒப்புக்கொள்ளாமல் எதிர்ப்புகளாகக் கூறிக்கொண்டு வந் தேன். ஆனால் ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் அயராது, அன் போடு, என்னை ஊக்குவிக்கும் வகையில் பேசினார்கள். என் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் திறன் எனக்கு இல்லாம லிருந்தும் ஸ்ரீலபிரபுபாதா என் ஒவ்வொரு கேள்வியையும் புரிந்துகொண்டு பக்குவமாக விடை தந்தார்கள்.

பாப் கோஹென்
ஆகஸ்ட் 14, 1974.

கவின் மிகு கிருஷ்ணர்

பிப்ரவரி 27, 1972

பாப் : விஞ்ஞானி என்பவர் யார்?

ஸ்ரீல பிரபுபாதா : உள்ளதை உள்ளபடி அறிந்தவர்.

பாப் : உள்ளதை உள்ளபடி அறிந்திருப்பதாக அவன் நினைக்கிறான்.

ஸ்ரீல : என்ன?

பாப் : உள்ளதை உள்ளபடி அறிந்திருப்பதாக அவன் நம்புகிறான்.

ஸ்ரீல பிரபு பாதா : அப்படியல்ல. அவன் அறிந்தவன் என்று கருதப்படுகிறான். விஷயங்களைப் பற்றிச் சரியாக அறிந்தவன் என்று எண்ணப் படுவதால்தான் நாம் விஞ்ஞானியை நாடுகிறோம். விஞ்ஞானியென்றால் உள்ளதை உள்ளபடி அறிந்தவன் என்று கொள்ள வேண்டும். கிருஷ்ணர் என்றால் 'வசீகரம் நிறைந்தவர்' என்று பொருள்.

பாப் : வசீகரம் நிறைந்தவர்.

ஸ்ரீல பிரபு பாதா : ஆம், கடவுள் வசீகரம் நிறைந்தவராக இல்லாவிடில் அவர் எப்படிக் கடவுளாக இருக்க முடியும்? ஒரு மனிதன் வசீகரம் மிக்கவனாக உள்ளபோது முக்கிய மானவனாகிறான். இல்லையா?

பாப் : ஆம்.

ஸ்ரீல பிரபு பாதா : எனவே கடவுள் கவர்ச்சிகரமானவராக எல்லோருக்கும் கவர்ச்சிகரமானவராக இருக்க வேண்டும். எனவே கடவுளுக்கு ஏதாவது பெயர் இருக்குமானால், அல்லது கடவுளுக்கு ஏதாவது பெயர் கொடுக்க விரும்பினால் ''கிருஷ்ணர்'' என்று கொடுக்கலாம்.

பாப் : ஆனால், ஏன் கிருஷ்ணர் என்ற பெயர் மட்டும்?

ஸ்ரீல பிரபு பாதா : ஏனென்றால், அவர் வசீகரம் நிறைந்தவராக இருக்கிறார். கிருஷ்ணர் என்றால் ''எல்லா வகைகளிலும் வசீகரமானவர்'' என்று பொருள்.

பாப் : ஓ, அப்படியா?

ஸ்ரீல பிரபுபாதா: ஆம். கடவுளுக்குப் பெயரில்லை. ஆனால், அவரின் தன்மைகளைப் பொருத்து அவருக்கு நாமங்களை நாம் தருகிறோம். ஒரு மனிதன் மிக அழகாக விருந்தால் அவனை நாம் ''சுந்தரம்'' என்று அழைக்கிறோம். ஒருவன் மிகுந்த புத்திசாலியாக இருந்தால் அவனை ''அறிவாளி'' என்கிறோம். எனவே, தன்மையைப் பொருத்துப் பெயர் அமைகிறது. கடவுள் எல்லா வகையிலும் வசீகரம் மிக்கவராக விருப்பதால் அவருக்குக் ''கிருஷ்ணர்'' என்ற பெயர் பொருந்தும். ''கிருஷ்ணர்'' என்றால் ''வசீகரம் நிறைந்தவர்'' என்று பொருள். எல்லா அம்சங்களும் இதில் அடங்கும்.

பாப்: ''எல்லா வல்லமையும் கொண்டவர்'' என்ற பொருளில் ஏன் ஒரு பெயர் இருக்கலாகாது?

ஸ்ரீல பிரபுபாதா: ஆம்... வல்லமை இல்லாவிடில் எப்படி வசீகரம் இருக்க முடியும்?

சியாமசுந்தர்: (ஒரு அமெரிக்க பக்தர், ஸ்ரீல பிரபுபாதாவின் செயலாளர்): அது எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியது.

ஸ்ரீல பிரபுபாதா: எல்லாவற்றையும். அவர் மிகுந்த அழகுள்ளவராக இருக்க வேண்டும். அவர் சிறந்த புத்திமானாக விளங்க வேண்டும், அவர் பலவானாகத் திகழ வேண்டும். புகழ் மிக்கவராகவும் இருக்க வேண்டும்.

பாப்: அவர் போக்கிரிகளுக்கும் வசீகரமாகத் தோன்றுகிறாரா?

ஸ்ரீல பிரபுபாதா: ஓ, நிச்சயம். அவரே பெரும் போக்கிரியாகவும் இருந்தார்.

பாப்: அதெப்படி?

ஸ்ரீல பிரபுபாதா: (சிரித்தபடி) ஏனென்றால் அவர் எப்போதும் கோபியரைச் சீண்டிக் கொண்டிருந்தார்.

பாப்: *சீண்டினாரா?*

ஸ்ரீல பிரபுபாதா: ஆம். *சில* வேளைகளில், ராதாராணி வெளியே போகும்போது கிருஷ்ணர் அவளைத் தாக்குவார். அவள் கீழே விழும் போது, ''கிருஷ்ணா, இப்படி என்னைத் தொல்லை செய்யாதே!'' என்பாள். இருவரும் கீழே விழு

வார்கள். சந்தர்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கிருஷ்ணர் அவளை முத்தமிடுவார். (சிரிக்கிறார்) அப்போது ராதாராணி மகிழ்ந்து போவாள். மேலெழுந்தவாரியாகக் கிருஷ்ணர் இப்படி போக்கிரித் தனமாக நடந்து கொள்வார். கிருஷ்ணரிடம் போக்கிரித்தனம் இல்லாவிடில் இந்த உலகில் போக்கிரித்தனம் எப்படி இருக்க முடியும்? கடவுள் பற்றிய நம் சூத்திரம் என்னவென்றால்: அவரே எல்லாவற்றின் தோற்றுவாய். கிருஷ்ணரிடம் போக்கிரித்தனம் இல்லாவிட்டால் அது எப்படி வெளித்தோன்ற முடியும்?— ஏனென்றால், அவரே எல்லாவற்றின் பிறப்பிடமாக விளங்குகிறார். ஆனால் அவரின் போக்கிரித்தனம் மிகவும் நேர்த்தியானதாக இருப்பதால் எல்லாரும் அவருடைய போக்கிரித்தனத்தைக் கொண்டாடுகிறார்கள்.

பாப்: அவ்வளவு நேர்த்தியாக இல்லாத போக்கிரிகளைப் பற்றி என்ன சொல்வது?

ஸ்ரீல பிரபுபாதா: போக்கிரித் தனம் நேர்த்தியான தல்ல. ஆனால் கிருஷ்ணர் பூரணமானவர். அவர் கடவுள். எனவே அவரது போக்கிரித்தனமும் நன்றானதே. கிருஷ்ணர் நன்மைகள் மிகுந்தவர். கடவுள் நல்லவர்.

பாப்: ஆமாம்.

ஸ்ரீல பிரபுபாதா: ஆகவே, அவர் போக்கிரியாகும் போது அதுவும் நன்மைக்கே. அதுவே கிருஷ்ணரின் சிறப்பு. போக்கிரித்தனம் நல்லதல்ல என்பது சரியே. ஆனால் கிருஷ்ணர் அதைக் கையாளும்போது அவர் பூரண நன்மையாளராகையால் அவரின் போக்கிரித்தனமும் நல்லதானதே. இதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

பாப்: கிருஷ்ணரை வசீகரமானவர் என்று கருதாதவர்களும் இருக்கிறார்களா?

ஸ்ரீல பிரபுபாதா: இல்லை. எல்லாருமே கிருஷ்ணரை வசீகரமானவராகவே காண்கிறார்கள். அவரால் வசீகரிக்கப்படாதவர்களுமுண்டோ? எங்கே, ஒரு உதாரணம் சொல்லுங்கள்: ''இன்ன மனிதனுக்கோ, இன்ன உயிரினத்துக்கோ கிருஷ்ணரைப் பிடிக்கவில்லை'' என்று எடுத்துக் காட்டுங்கள். அப்படிப்பட்ட ஒருவரைக் கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்.

பாப் : தவறு என்று தெரிந்திருந்தும்" அத்தகைய காரியங்களைச் செய்ய விரும்புபவர்கள், அதிகாரம், பணம், கௌரவம் இவற்றிற்காக...

ஸ்ரீல பிரபுபாதா : ஆம்.

பாப் : ... இவர்களுக்குக் கடவுள் விரும்பாதவராகத் தோன்றலாம் ஏனென்றால் கடவுளுணர்வு இவர்களில் குற்ற உணர்வைத் தோற்றுவிக்கும்.

ஸ்ரீல பிரபுபாதா : இல்லை கடவுளை அவன் அப்படி எண்ணுவதில்லை. அவன் அதிக பலம் பெறவே விரும்புகிறான். அதிகார பலம் மிக்கவனாகவோ, பணக்காரனாகவோ ஆக அவன் ஆசைப்படுகிறானல்லவா? ஆனால் கிருஷ்ணரைவிடச் செல்வம் மிக்கவர் எவருமில்லை. எனவே கிருஷ்ணரை அவன் விரும்பத்தக்கவராகவே நினைக்கிறான்.

பாப் : செல்வத்தை விரும்புபவன் கிருஷ்ணரைப் பிரார்த்தித்தால் அவனுக்குச் செல்வமெல்லாம் கிடைக்குமா?

ஸ்ரீல பிரபுபாதா : ஓ, நிச்சயமாக.

பாப் : இந்த முறையை அனுசரிப்பதால் மட்டும் அவன் செல்வந்தனாக ஆக முடியுமா?

ஸ்ரீல பிரபுபாதா , ஆம், ஏனென்றால் கிருஷ்ணர் சகல சக்திகளும் வாய்ந்தவர். செல்வம் வேண்டுமென்று கிருஷ்ணரிடம் பிரார்த்தித்தால், கிருஷ்ணர் உங்களைச் செல்வந்தராக ஆக்குவார்.

பாப் : துர்ச்செயல்களில் ஈடுபட்டிருப்பவன் பணம் வேண்டுமென்று பிரார்த்தித்தால் அவனுக்கும் கூட செல்வம் கிட்டுமா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். கிருஷ்ணரிடம் பிரார்த்திப்பது துர்ச்செயல் அல்ல.

பாப் : அது சரி.

ஸ்ரீல பிரபுபாதா : (உள்ளூரச் சிரித்தபடி) எப்படியோ கிருஷ்ணரை நோக்கி அவன் பிரார்த்திக்கிறான். எனவே அவனைக் கெட்டவனென்று சொல்வதற்கில்லை.

பாப் : ஆம்.

ஸ்ரீல பிரபுபாதா : பகவத் கீதையில் கிருஷ்ணர் கூறுகிறார் "அபிசேத் ஸுதுராசாரோ பஜதே மாமனன்யபாக்". நீங்கள் இதைப் படித்திருக்கிறீர்களா?

பாப் : ஆம். அதன் சம்ஸ்கிருதம் எனக்குத் தெரியாது. ஆனால் ஆங்கிலத்தில் சொல்லியிருப்பது புரிகிறது.

ஸ்ரீல பிரபுபாதா : ஹாம்.

பாப் : "Even if the most evil man prays to Me..." (மிகவும் மோசமான முறையில் செயலாற்றுபவனும் கூட என்னைப் பிரார்த்தித்தால்...)

ஸ்ரீல பிரபுபாதா : ஆம்.

பாப் : "... he will be elevated" அவன் உயர்த்தப்படுவான்).

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். கிருஷ்ணரை நோக்கிப் பிரார்த்திக்க துவங்கியவுடன், அது தீங்கற்றதாகிவிடும். எனவே அவர் எல்லாரையும் ஆகர்ஷிக்கிறார். பூரண உண்மை, அதாவது பரமபுருஷனை முழுமுதற் கடவுள் எல்லா இன்பங்களின் இருப்பிடம என்று வேதங்களில் கூறப்பட்டுள்ளது. "ரஸோ வை ஸ:" ஒவ்வொருவரும் யாரையாவது அடைய விழைகின்றனர். ஏனென்றால் அதில் ஒரு விதமான கனிவை அவர்கள் அனுபவிக்கிறார்கள்.

பாப் : மன்னிக்கவும்?

ஸ்ரீல பிரபுபாதா : ஏதோ ஒருவித கனிவு. ஒருவன் மது அருந்துகிறானென்றால், ஏன் அருந்துகிறான்? அப்படிக் குடிப்பதில் அவன் ஏதோ கனிவை அனுபவிக்கிறான். ஒருவன் பண ஆசை பிடித்தவனாயிருக்கிறானென்றால், பணத்தைச் சேர்த்து வைப்பதில் அவன் ஏதோ கனிவை உணர்கிறான்.

பாப் : கனிவு (Mellow) என்றால் என்ன?

ஸ்ரீல பிரபுபாதா : (சியாமசுந்தரிடம்) Mellow என்பதை எப்படி விளக்கலாம்?

சியாமசுந்தர் : சுவை, சுகம்.

பாப் : சரி.

ஸ்ரீல பிரபுபாதா : சுகம் தரும் சுவை. எனவே, "ரஸோ வை ஸ:" என்று வேதம் சொல்கிறது. "Mellow" என்பதன் சரியான மொழி பெயர்ப்பு "ரஸம்". (சியாம சுந்தரின் மனைவி மாலதி ஒரு தட்டில் உணவு எடுத்துக்கொண்டு உள்ளே வருகிறாள்.) என்ன அது?

மாலதி : கத்தரிக்காய் வறுவல்.

ஸ்ரீல பிரபுபாதா : ஓ, மிகவும் கவர்ச்சியானது! (சிரிக்கிறார்)

சியாமசுந்தர் ; கிருஷ்ணர் விஞ்ஞானிகளுள் மிக சிறந்தவரென்பது எதனால்?

ஸ்ரீல பிரபுபாதா : ஏனென்றால் அவர் எல்லாம் அறிந்தவர். விஞ்ஞானி குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப் பற்றிய முழுமையான அறிவு கொண்டவன். கிருஷ்ணர் ஒரு விஞ்ஞானி. ஏனென்றால் அவர் எல்லாம் (முழுமையாக) அறிந்தவர்.

பாப் : நானும் தற்போது விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியனாகத்தானிருக்கிறேன்.

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். கற்பிக்கிறீர்கள். ஆனால் முழுமையான அறிவில்லாமல் எப்படிக் கற்பிக்க முடியும்? இதுவே நம் கேள்வி.

பாப் : முழுமையான அறிவில்லாவிட்டாலும் கூட ஒருவர் கற்பிக்கலாம்...

ஸ்ரீல பிரபுபாதா : அது ஏமாற்றுவதாகும். கற்பிப்பதல்ல; ஏமாற்றுவது. விஞ்ஞானிகள் சொல்வதுபோல் : ஒரு துண்டம் ஏற்பட்டது... சிருஷ்டிகள் தோன்றின— இப்படியிருக்கலாம்... அப்படியிருக்கலாம்— என்றெல்லாம் அவர்கள் சொல்வது வெறும் ஏமாற்றில்லாமல் வேறென்ன? அது கற்பிப்பதல்ல, வெறும் ஏமாற்றுவது!

பாப் : இன்று காலையில் தாங்கள் சொன்னது, ருசிகரமாக இருந்தது; அதை நான் மீண்டும் சொல்கிறேன். நான் அற்புதங்கள் செய்து காட்டுவதைப் பற்றிக் கேள்வி கேட்டேன். அதற்குத் தாங்கள், அற்புதங்களை நம்புபவன் முட்டாள் என்று சொன்னீர்கள். வயதில் பெரியவன் மேஜையைத் தூக்குவது குழந்தைக்கு அதிசயமாகப்படும் அல்லது, ரசவாதி ஒருவன் அமிலம் ஒன்றையும் வேறு அடிப்படைப் பொருளையும் கலக்கும்போது உண்டாகும் புகையோ, வெடிச்சத்தமோ, அது பற்றிய அறிவில்லாதவனுக்கு அற்புதச் செயலாகத் தோன்றும். எதற்கும் செயல்முறை ஒன்றுண்டு. செயல் முறையைப் பற்றித் தெரியாதபோது அற்புதமென்று எண்ண நேரிடுகிறது. ஆகவே, முட்டாள்களே அற்புதங்களை நம்புவார்கள். நான் சொல்வதில் தவறிருந்தால் திருத்துங்கள்.

ஸ்ரீல பிரபுபாதா : ஆம், ஆம்.

பாப் : ஏசு வந்தபோது மக்கள் அறியாதவர்களாக இருந்தார்கள்; எனவே அற்புதங்களின் உதவி தேவைப்பட்டது. என்று தாங்கள் சொன்னீர்கள். அப்படிப்பட்ட கருத்தைத் தான் தாங்கள் சொன்னீர்களென எண்ணுகிறேன்.

ஸ்ரீல பிரபுபாதா : ஆம்! அற்புதங்கள் அறிவில்லாதவர்களுக்குத்தான்.

பாப் : இந்தியாவில் இப்படி அற்புதங்கள் நிகழ்த்துபவர்கள் இருப்பதாகச் சொல்லப்படுவதால் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன்.

ஸ்ரீல பிரபுபாதா ; கிருஷ்ணரே அற்புதங்கள் நிதழ்த்துபவர்களிலெல்லாம் சிறந்தவர்.

பாப் : ஆம்.

ஸ்ரீல பிரபுபாதா : அப்படிச் சொன்னவர் குந்தி...

பாப் : முழுமையான அறிவில்லாமல் நான் சில விஷயங்களைக் கற்பிககக் கூடாதா? உதாரணமாக...

ஸ்ரீல பிரபுபாதா ; உங்களுக்குத் தெரிந்தவரையில் சொல்லித் தரலாம்.

பாப் : ஆனல், எனக்குத் தெரிந்ததற்கு மேல் நான் கற்பிக்க முற்படக் கூடாது,

ஸ்ரீல பிரபுபாதா : அப்படிச் செய்வது ஏமாற்றுவதாகும்.

சியாமசுந்தர் : வேறு விதமாகச் சொன்னல், அறைகுறை அறிவோடு உண்மையைக் கற்பிக்க முடியாது.

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். அது எந்த மனிதனுக்கும் சாத்தியமில்லை. மனிதனின் உணர்வுகள் நிறைவு பெருதவை. எனவே நிறைவான அறிவை அவனல் எப்படிப் போதிக்க இயலும்? சூரியனை ஒரு தட்டுப்போல் காண்பதாக வைத்துக் கொள்வோம். சூரியனை அணுகுவதற்கான சாதனம் உங்களிடமில்லை. டெலஸ்கோப் வழியாக சூரியனைப் பார்க்கலாம். அப்படி இப்படி என்றெல்லாம் சொன்னல், அந்த சாதனங்களும் உங்களால் செய்யப்பட்டவையே. நீங்கள் குறைவற்றவர்களல்ல. எனவே நீங்கள் செய்த யந்திரம் எப்படிக் குறைவற்றதாக இருக்க முடியும்; எனவே, சூரியனைப் பற்றிய உங்கள் அறிவு குறைவுள்ள

தாகதாவிருக்கும். ஆகையால், முழுமையான அறிவு இருந்தாலொழிய சூரியனைப் பற்றிக் கற்பிக்காதீர்கள். அது ஏமாற்றுவதாகும்.

பாப்: சூரியன் 93,000,000 மைல்களுக்கப்பால் இருப்பதாகக் கருதப்படுகிறது, என்று கற்பிப்பதானால்?

ஸ்ரீல பிரபுபாதா: 'கருதப் படுகிறது' என்று சொல்வது விஞ்ஞான ரீதியிலான கூற்றாகாது.

பாப்: அப்படியானால், அனேகமாக விஞ்ஞானம் எல்லாமே விஞ்ஞானமாக ஆகாது, என்றுதான் சொல்லவேண்டும்.

ஸ்ரீல பிரபுபாதா: அதுதான் விஷயம்!

பாப்: விஞ்ஞானமெல்லாமே ஏதாவதொரு அனுமானத்தின் அடிப்படையில் தான் அமைந்திருக்கிறது.

ஸ்ரீல பிரபுபாதா: ஆம். அவர்கள் கற்பிப்பதில் குறைபாடுகள் இருக்கின்றன, சந்திரனைப் பற்றி அவர்கள் விளம்பரப் படுத்திக் கொள்வதுபோல். அவர்களுடைய அறிவு முழுமையானதென்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

பாப்: இல்லை.

ஸ்ரீல பிரபுபாதா: பிறகு?

பாப்: சமுதாயத்தில் ஆசிரியர்களின் சரியான கடமையென்ன? ஒரு விஞ்ஞான ஆசிரியர் இருக்கிறார்; வகுப்பறையில் அவர் செய்ய வேண்டியதென்ன?

ஸ்ரீல பிரபுபாதா: வகுப்பறை? நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் கிருஷ்ணரைப் பற்றிக் கற்பிப்பதே.

பாப்: அவர் 'கற்பிக்கக் கூடாதது...

ஸ்ரீல பிரபுபாதா: இல்லை. கிருஷ்ணரைப் பற்றிக் கற்பிப்பதே எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகும். கிருஷ்ணரை அறிவதே அவரின் நோக்கமாக இருக்கவேண்டும்.

பாப்: ஒரு விஞ்ஞான ஆசிரியர் அமிலத்தையும் ஆல்கலியையும் கலக்கும் விஞ்ஞானத்தையும் கிருஷ்ணனைப் பொருளாகக் கொண்ட இந்த விதமான விஞ்ஞானத்தையும் ஒரே சமயத்தில் போதிக்க முடியுமா?

ஸ்ரீல பிரபுபாதா: அதெப்படி முடியும்?

பாப்: நீங்கள் — ஒருவர் விஞ்ஞானம் கற்கும்போது இயற்கையின் பொதுவான போக்குகளைக் கண்டறிகிறார்.

இயற்கையின் இந்தப் பொதுவான தன்மைகள், கட்டுப் படுத்தும் ஒரு சக்தி இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

ஸ்ரீல பிரபுபாதா : அதை நான் அன்றொரு தினம் விளக்கிக் கொண்டிருந்தேன். ரசாயனவாதி ஒருவரை ஹைட்ரஜனும் பிராணவாயுவும் ரசாயன விதிகளின்படி இணையும் போது நீர் உருவாகிறதல்லவா என்று கேட்டேன்.

பாப் : உண்மைதான்.

ஸ்ரீல பிரபுபாதா : அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலும் பஸிபிக் மகா சமுத்திரத்திலும், மாபெரும் அளவில் நீர் இருக்கிறது. இதற்கு எவ்வளவு ரசாயனங்கள் தேவைப் பட்டிருக்கும்?

பாப் : எவ்வளவா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம், எத்தனை டன்கள்?

பாப் : ஏகப்பட்டது.

ஸ்ரீல பிரபுபாதா : அதை அளித்தது யார்?

பாப் : இதைக் கடவுள் அளித்திருக்கிறுர்.

ஸ்ரீல பிரபுபாதா : யாரோ ஒருவர் அளித்திருக்க வேண்டும்.

பாப் : ஆம்.

ஸ்ரீல பிரபுபாதா : இது விஞ்ஞானம். இப்படி நீங்கள் போதிக் கலாம்.

பாப் : அமிலத்தையும், ஆல்கலியையும் சேர்த்தால் நடுநிலைப் பொருளொன்று ஏற்படுகிறதென்று சொல்லித்தர வேண்டியது அவசியந்தானு?

ஸ்ரீல பிரபுபாதா : அதே, எத்தனையோ பொங்குதல்கள் உள்ளன, இதை உண்டாக்குபவர் யார்? இதற்கான அமிலத் தையும் ஆல்கலியையும் தருவது யார்?
(நீண்ட இடைவெளி)

பாப் : எனவே, நீருக்குத் தேவையானவை எங்கிருந்து வருகின்றனவோ, அங்கிருந்தே இவையும் வருகின்றன.

ஸ்ரீல பிரபிபாதா : ஆம். ஹைட்ரஜன், பிராணவாயு இல்லாமல் நீர் உற்பத்தியாகாது. அட்லாண்டிக், பசிபிக் மட்டுமல்ல. கோடிக் கணக்கில் கோள்கள், அட்லாண்டிக், பசிபிக் சமுத்திரங்கள். இப்படியொரு விஸ்தாரம். இவ்வளவு நீரை ஹைட்ரஜன் மற்றும் பிராண வாயுவைக்

கொண்டு யார் சிருஷ்டித்தது? அவை எப்படிக் கொண்டு வரப்பட்டன? இதுவே எமது கேள்வி. யாரோ இதைத் தந்திருக்க வேண்டும். இல்லாவிடில் அவை எப்படி உண்டாகியிருக்க முடியும்?

பாப்: ஆனால் ஹைட்ரஜன் மற்றும் பிராணவாயுவைக் கொண்டு நீர் எப்படி உண்டாக்கப்படுகிறது, என்றும் சொல்லித்தர வேண்டுமா? அவற்றை எப்படி ஒன்றுபடுத்துவது — இதுவும் கற்பிக்கப்பட வேண்டுமா? அதாவது, பிராணவாயு, ஹைட்ரஜன் இவற்றை ஒன்றாக எரித்து...

ஸ்ரீல பிரபுபாதா: அது இரண்டாம் பட்சம்தான். அப்படிக் கடினமானதென்றல்ல. மாலதி இந்தப் பூரியைச் செய்திருப்பது போலத்தான். மாவு இருக்கிறது, நெய் இருக்கிறது, இவற்றை வைத்துப் பூரி செய்துவிட்டாள். ஆனால் மாவும் நெய்யும் இருந்தாலொழிய பூரி தயாராகும் வாய்ப்பு ஏது? பகவத் கீதையில் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது: ''நீர், மண், காற்று, நெருப்பு — இவை எனது சக்திகள்.'' உங்கள உடல் என்னவென்று எண்ணுகிறீர்கள்? இந்த பூதவுடல் — அதுவே உங்கள் சக்தி. இது உங்களுக்குத் தெரியுமா? உங்கள் சக்தியிலிருந்து உங்கள் உடல் உண்டாக்கப் பட்டிருக்கிறது. உதாரணமாக, நான் இப்போது சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்.

பாப்: ஆம்.

ஸ்ரீல பிரபுபாதா: இப்படியாக நான் சிறிது சக்தியை உண்டு பண்ணுவதால் என் உடல் பரிபாலிக்கப்படுகிறது.

பாப்: ஓ, சரி.

ஸ்ரீல பிரபுபாதா: எனவே, உங்கள் உடல் உங்கள் சக்தியிலிருந்து விளைகிறது.

பாப்: ஆனால் உணவில் சூரியனிடமிருந்து பெற்ற சக்தி உள்ளது.

ஸ்ரீல பிரபுபாதா: ஒரு உதாரணம் சொல்கிறேன். உணவை ஜீரணித்து நான் சிறிது சக்தியை உண்டாக்குகிறேன்; அது என் உடலைப் பாதுகாக்கிறது. உங்களுக்குக் கிடைக்கும் சக்தி சீரானதாக இல்லாவிடில், உங்கள் உடல் பலவீனமடைகிறது, நோய்வாய்ப்படுகிறது. உங்கள் உடல் உங்கள் சக்தியினாலேயே உண்டாக்கப்படுகிறது.

அதுபோலவே பிரபஞ்சமெனும் இந்த மாபெரும் உடல் கிருஷ்ணரின் சக்தியாலானது. அதை எப்படி நீங்கள் மறுக்க முடியும்? உங்கள் உடல் உங்கள் சக்தியிலிருந்து உண்டாகியிருப்பது போல், பிரபஞ்சமாகிய உடலும் யாரோ ஒருவருடைய சக்தியிலிருந்து உண்டாகியிருக்க வேண்டும். அவரே கிருஷ்ணர். (நீண்ட இடைவெளி)

பாப் : இதைப் புரிந்து கொள்வதற்கு நான் இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

ஸ்ரீல பிரபு பாதா : இதில் புரிந்து கொள்வதற்கு என்ன இருக்கிறது? இது உண்மை (சிரிக்கிறார்) உங்கள் முடி தினமும் வளர்வதில்லையா? ஏன்? ஏனென்றால், உங்களிடம் கொஞ்சம் சக்தியிருக்கிறது

பாப் : என் உணவிலிருந்து எனக்குக் கிடைக்கும் சக்தி.

ஸ்ரீல பிரபுபாதா : ஏதோ ஒரு வகையில் அந்த சக்தியை நீங்கள் பெற்றுவிட்டீர்கள் அந்த சக்தியின் மூலம் உங்கள் முடி வளர்கிறது. ஆக, உங்கள் உடல் உங்கள் சக்தியால் உண்டாக்கப்படுவதானால் அது போலவே, பிரபஞ்சமாகிய இந்த மாபெரும் தோற்றமும் முழுவதும் கடவுளின் சக்தியினால் உருவானது இது உண்மை. அது உங்கள் சக்தியல்ல.

பாப் : ஆம். இப்போது தெரிகிறது.

ஒரு பக்தர் : பிரபஞ்சத்திலுள்ள கோள்களெல்லாம் சூரியனின் சக்தியல்லவா? சூரிய சக்தியிலிருந்து உண்டாகியவையல்லவா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். ஆனால் சூரியனை உண்டாக்கியவர் யார்? அது கிருஷ்ணரின் சக்தி. அது வெப்பமாகையால், ''பூமிர் ஆபோ நலோ வாயு'' (வெப்பம்—அது எனது சக்தி) என்று கிருஷ்ணர் சொல்கிறார். கிருஷ்ணரின் வெப்பம் தரும் சக்தியின் பிரதிநிதி சூரியன். அது உங்கள் சக்தியல்ல. ''சூரியனை நான் உண்டாக்கினேன்'' என்று நீங்கள் சொல்ல முடியாது. அதை யாராவது செய்திருக்க வேண்டும். தான் செய்ததாகக் கிருஷ்ணர் சொல்கிறார். நாம் கிருஷ்ணரை நம்புகிறோம். எனவே நாம் கிருஷ்ணவர்கள்.

பாப் : கிருஷ்ணவர்கள்?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். நம் அறிவு முழுமையானது. வெப்பம் கிருஷ்ணரின் சக்தியென்று நான் சொன்னால் நீங்கள் அதை மறுக்க முடியாது; ஏனென்றால் அது உங்கள் சக்தி யல்ல. உங்கள் உடலில் ஓரளவு வெப்பமிருக்கிறது. அதுபோலவே (சூரியனின்) வெப்பம் யாரோ ஒருவரது சக்தி. அந்த ஒருவர் யார்? அவர் கிருஷ்ணர் ஆம் இது என் சக்தி'' என்று கிருஷ்ணர் கூறுகிறார். எனவே, என் அறிவு முழுமையானது. விஞ்ஞானிகளிலெல்லாம் சிறந்த வரின் கூற்றை நான் ஏற்றுக் கொண்டிருப்பதால் நான் விஞ்ஞானிகளில் சிறந்தவன். சொந்த முறையில் நான் முட்டாளாக இருக்கலாம், ஆனால் என் அறிவைத் தலை சிறந்த விஞ்ஞானியிடமிருந்து பெற்றிருப்பதால் நான் தலை சிறந்த விஞ்ஞானியாகிறேன். எனக்கு இதில் சிரம மெதுவுமில்லை.

பாப் : மன்னிக்கவும்?

ஸ்ரீல பிரபுபாதா : தலைசிறந்த விஞ்ஞானியாவதில் எனக்கு சிரமமொன்றுமில்லை; ஏனென்றால் தலை சிறந்த விஞ்ஞானி யிடமிருந்து நான் அறிவைப் பெறுகிறேன். (நீண்ட இடைவெளி) 'இந்த மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாய வெளி, மனம், புத்தி, நானெனும் உணர்வு, இவை எனது எட்டு பிரிக்கப்பட்ட சக்திகள்.''

பாப் : அவை பிரிக்கப்பட்ட சக்திகளா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். இந்தப் பாலைப்போல் பால் என்ப தென்ன? பசுவினின்று பிரிக்கப்பட்ட சக்தி. (வியப் படைந்த சியாம சுந்தரும் பாபும் விஷயம் புரிந்ததும் சிரிக் கிறார்கள்) இல்லையா? அது பசுவினின்று பிரிக்கப்பட்ட சக்தியின் தோற்றம்.

சியாம சுந்தர் : ஒரு உப-உற்பத்திப் பொருளைப் போலவா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம்.

பாப் : கிருஷ்ணரிடமிருந்து இப்படி சக்தி பிரிக்கப்படுவதன் முக்கியத்துவமென்ன?

ஸ்ரீல பிரபுபாதா: ''பிரிக்கப்படுவது'' என்றால், பால் பசுவின் உடலிலிருந்து உண்டாக்கப்பட்டது; ஆனால் அது பசுவல்ல. அதுதான் பிரிக்கப்படுதல்.

பாப்: இந்த உலகம், மற்றெல்லாம், கிருஷ்ணரிலிருந்து பிறந்தவை, ஆனால் அது கிருஷ்ணரல்ல. அப்படித்தானே?

ஸ்ரீல பிரபுபாதா: அது கிருஷ்ணரல்ல. அல்லது, கிருஷ்ணராகவும், கிருஷ்ணரல்லாமலிருக்கிறது. ஆகவே நமது தத்துவம். ஒன்றாயும் ஆனால் வேறாயும் இருப்பது. அவை கிருஷ்ணரிடமிருந்து வேறு பட்டவையாகச் சொல்ல முடியாது, ஏனென்றால் கிருஷ்ணரில்லாமல் அவை இருக்க முடியாது. அதே சமயத்தில், ''அப்படியானால் நான் தண்ணீரை வழிபடலாமே, கிருஷ்ணரை ஏன் வணங்க வேண்டும்?'' என்று நீங்கள் சொல்ல முடியாது. இயற்கையை வழிபடுபவர்கள், எல்லாம் இறைவன் என்பதால் நாங்கள் செய்வதும் இறைவணக்கமே என்று சொல்கிறார்கள். இது மாயாவாதத் தத்துவம்- எல்லாம் இறைவனிடமிருந்து வந்துள்ளதால் எல்லாம் இறைவன் என்ற தத்துவம். ஆனால் நமது தத்துவம்: எல்லாம் இறைவன், ஆனால் இறைவனல்ல, என்பது.

பாப்: அப்படியானால், கடவுள் என்பது தான் என்ன? இவ்வுலகில் கடவுளாக இருப்பது ஏதாவது உண்டா?

ஸ்ரீல பிரபுபாதா; ஆம். ஏனென்றால், எல்லாமே கடவுளின் சக்தியினாலானது. ஆனாலும், எதையாவது வழிபடுவது கடவுளை வழிபடுவதாகாது.

பாப்: அப்படியானால் மாயை அல்லாதது எது?

ஸ்ரீல பிரபுபாதா: மாயை என்றால் சக்தி என்று பொருள்.

பாப்: சக்தியென்றா பொருள்?

ஸ்ரீல பிரபுபாதா: ஆம். மாயை அறிவற்றவர்களே சக்தியையே அதை உள்ளடக்கிய மூலம் பொருளாகக் கருதுகிறார்கள். மாயை சூரிய ஒளியைப் போன்றது. சூரிய ஒளி சூரியனின் சக்தி. ஆனால் சூரிய ஒளி உங்கள் அறைக்குள் வருகிறதென்றால் உங்கள் அறைக்குள் சூரியன் வந்து விட்டதாகச் சொல்ல முடியாது. சூரியனே உங்கள் அறைக்குள் வந்து விட்டால் உங்கள் அறை, நீங்கள்,

எல்லாமே தீய்ந்து போகும். உடனேயே எல்லாம் முடிந்து விடும். சூரியன் உங்கள் அறைக்குள் வந்துவிட்டதென்று புரிவதற்குக் கூட உங்களுக்கும் அவகாசம் இருக்காது. இல்லையா?

பாப் : அது சரிதான்.

ஸ்ரீல பிரபுபாதா : ஆனால், சூரிய ஒளி சூரியனல்ல என்று சொல்ல முடியாது. சூரியனில்லாமல் சூரிய ஒளி ஏது? எனவே சூரிய ஒளி சூரியனல்லவென்று சொல்ல முடியாது ஆனால் அதே சமயத்தில் அது சூரியனல்ல. அது சூரியனாயிருக்கிறது, சூரியன் அல்லாமலுமிருக்கிறது. இதுவே எங்கள் தத்துவம். ''அசிந்த்யா பேதாபேத்''- எண்ணிப் பார்க்க முடியாதது. ஜட நிலையில் ஒரே சமயத்தில் ஒரு பொருளை இருப்பதாகவும் இல்லாததாகவும் கருத முடியாது. அப்படி ஒரு நிலையை எண்ணிப் பார்க்க இயலாது அதுவே எண்ணிப் பார்க்க இயலாத சக்தி. எல்லாமே கிருஷ்ணரின் சக்தியாக விருப்பதால், எந்த சக்தியிலும் கிருஷ்ணர் தம்மை வெளிப்படுத்தலாம். எனவே, ஏதாவது ஒன்றினால் ஆக்கப்பட்ட உருவைக் கிருஷ்ணர் என்று நாம் வழிபடும்போது- உதாரணமாக, மண், நீர், அல்லது அது போன்ற ஏதாவதொன்று - அது கிருஷ்ணரே. கிருஷ்ணரல்லவென்று சொல்ல முடியாது. ஆலயத்திலிருக்கும் உலோகத்தாலான கிருஷ்ண உருவத்தை நாம் வழிபடும் போது அவர் கிருஷ்ணர் இது உண்மை. ஏனென்றால், உலோகம் கிருஷ்ணரின் ஒரு சக்தி, எனவே அது (உலோகத்தாலான உருவம்) கிருஷ்ணரினின்றும் வேறுபட்டதல்ல. தன்னைத் தன் சக்தியில் முழுமையாகக் காட்ட வல்ல வன்மை படைத்தவர் கிருஷ்ணர். ஆகையால், உருவத்தின் மூலமான தெய்வ வழிபாடு உண்மையான கடவுளை வழிபடாததாகாது. உண்மையில் அது கடவுளை வழிபடுவதேயாகும், அதற்கான வழிமுறை உங்களுக்குத் தெரிந்திருந்தால்.

பாப் : வழிமுறை தெரிந்திருந்தால் உருவம் கிருஷ்ணராகிறது என்பதா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆவதல்ல. அதுவே கிருஷ்ணர்.

பாப்: உருவமே கிருஷ்ணர், ஆனால் வழிமுறை தெரிந்திருந்தால் மட்டுமே. அப்படியா?

ஸ்ரீல பிரபுபாதா: ஆம். இந்த மின்சாரக் கம்பி போல்-இது மின் சக்தி. வழிமுறை தெரிந்தவர் இதினின்று மின் சக்தியைப் பெறலாம்.

சியாம சுந்தர்: இல்லாவிடில் இது வெறும் கம்பியே.

ஸ்ரீல பிரபுபாதா: கம்பி மட்டுமே.

பாப்: ஆக, நான் கிருஷ்ணரின் சிலையொன்றை உருவாக்கினால், அது கிருஷ்ணரல்ல, அதற்கான வழிமுறை...

ஸ்ரீல பிரபுபாதா: அது கிருஷ்ணரே. ஆனால், அது கிருஷ்ணரென்று அறிவதற்கான வழிமுறை உங்களுக்குத் தெரிய வேண்டும். அது கிருஷ்ணரே.

பாப்: அது வெறும் மண்ணும் சேறுமல்ல.

ஸ்ரீல பிரபுபாதா: இல்லை. கிருஷ்ணரில்லாமல் மண்ணுக்குத் தனியான இருப்பு இல்லை, ''என் சக்தி'' என்று கிருஷ்ணர் கூறுகிறார். சக்தியை சக்தி மூலத்திலிருந்து பிரிக்க முடியாது. அது சாத்தியமல்ல. நெருப்பிலிருந்து வெப்பத்தைப் பிரிக்க முடியாது. ஆனால் நெருப்பு வெப்பத்தினின்று வேறுபட்டது; வெப்பம் நெருப்பிலிருந்து வேறுபட்டது. வெப்பம் பெறுவது நெருப்பைத் தொடுவதாகாது. வெப்பம் தரும்போதும் நெருப்பு தன் தனித்தன்மையைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. அதுபோலவே கிருஷ்ணன் தமது பல்வேறான சக்திகளால் எல்லாவற்றையும் உண்டாக்கினாலும் அவர் கிருஷ்ணராகவே தொடர்ந்து இருக்கிறார். கிருஷ்ணர் எல்லாமாக விருந்தால் கிருஷ்ணரின் தனித்தன்மை போய்விடுகிறதென்று மாயாவாதிகள் எண்ணுகிறார்கள். அது ஜடவாதமாகும். உதாரணமாக இந்தப் பாலைக் கொஞ்சம் கொஞ்சமாக குடித்து அது தீர்ந்துபோகும்போது என் வயிற்றுக்குள் போயிருக்கிறது. கிருஷ்ணர் அப்படியல்ல. அவர் சர்வ வல்லமை படைத்தவர். அவரது சக்தியை நாம் தொடர்ந்து பயன் படுத்துகிறோம்; என்றாலும் அவர் அங்கேயே (அப்படியே) இருக்கிறார், பல குழந்தைகளைப் பெற்ற ஒருவன் அப்படியே தனி மனிதனாக இருப்பது போல். இது ஒரு பண்பற்ற உதாரணம். பல குழந்தை

களைப் பெற்றுவிட்டதால் அவன் கதை முடிந்ததென்பதல்ல. அதுபோலவேதான் எண்ணற்ற மக்களின் தந்தையான கடவுள்—கிருஷ்ணர்.

''பூர்ணஸ்ய பூர்ணம் ஆதாய
பூர்ணம் ஏவாவசிஷ்யதே.''

''அவன் பூர்ணமான முழுமையானகையால் அவனின்று முழுமையான பல தனிப்பொருட்கள் தோன்றினலும் அவன் முழுமையான மீதியாகவே விளங்குகிருன்.'' இதுவே கிருஷ்ண உணர்வு. கிருஷ்ணர் என்றும் குறைபாதவர். கிருஷ்ணர் அவ்வளவு வன்மை மிக்கவர். எனவே அவர் எல்லா வசீகரங்களும் நிறைந்தவர். இது கிருஷ்ண சக்தியின் ஒரு அம்சத்தின் வெளிப்பாடேயாகும். இதேபோல் அவரிடம் அளவற்ற சக்திகள் நிரம்பியிருக்கின்றன. கிருஷ்ண சக்தியைப் பற்றிய இந்த ஆய்வு அதன் ஒரு அம்சத்தைப் பற்றியதே. இப்படிக் கிருஷ்ணரைப் பற்றி ஆய்வு நடத்திக்கொண்டே போனல் அதுவே கிருஷ்ண உணர்வாகும். ''இருக்கலாம்'', ''இல்லாமலிருக்கலாம்'' என்று கூறும் போலி விவகாரமல்ல. கிருஷ்ண உணர்வு பூர்ணமானது. நிச்சயமாய் அது இருக்கிறது.

சியாமசுந்தர் : இந்த ஆய்வு என்றும் முடிவடைவதில்லே.

ஸ்ரீல பிரபுபாதா : இல்லே. அது எப்படி முடிவடையும்? கிருஷ்ணரின் சக்தி எல்லேயற்றது.

வேதப் பண்பு : வர்ணாஸ்ரம தர்மம்

(பிப்ரவரி 28, 1972)

பாப் : பாலுறவு பற்றி பக்தர்களின் எண்ணங்களை நான் கேட்டறிந்திருக்கிறேன். அவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்களின்படி என்னால் நடக்க முடியுமென்று தோன்றவில்லை. இந்தக் கோடைக்காலத்தின் இறுதியில் நான் விவாகம் செய்துகொள்ள விருக்கிறேன்.

ஸ்ரீல பிரபுபாதா : ஹ...ம்?

பாப் : நான் இந்தக் கோடையின் இறுதியில், ஆகஸ்ட் அல்லது செப்டம்பரில், அமெரிக்காவுக்குத் திரும்பியபின் விவாகம் செய்து கொள்ளலாமென்றிருக்கிறேன். பக்தர்கள் சொல்வதுபடிப் பார்த்தால் கிரஹஸ்தர்கள் மட்டுமே குழந்தை பெற்றுக்கொள்வதற்காகப் பாலுறவு கொள்ளலாம். அப்படி ஒரு நிலையை நான் ஒப்புக்கொள்வதற்கில்லை. இவ்வுலக வாழ்வில் ஒருவர் எப்படிப் பட்ட பாலுறவு வாழ்க்கையை மேற்கொள்ளலாம்?

ஸ்ரீல பிரபுபாதா : வேதக் கொள்கையின்படி பாலுறவை அறவே நீக்கவேண்டும். ஜட நிலையின் கட்டுப்பாடுகளிலிருந்து முற்றிலுமாக விடுதலை பெறுவதே வேதக் கொள்கையின் முழு நோக்கம். புலன் இன்ப இச்சைகள் பலவிதமானவை. அவற்றுள் பாலுறவு தலையாயது. பாகவதம் கூறுகிறது: 'பும்ஸ: ஸ்திரியா மிதுனீ—பாவம் ஏதம்'' ஆணிடம் பெண்ணும் பெண்ணிடம் ஆணும் ஆசை கொண்டுள்ளனர். இது மனித சமுதாயத்தில் மட்டுமல்ல, பிராணிவர்க்கத்திலும் காணப்படுகிறது. அந்த ஆசை பௌதிக வாழ்வின் அடிப்படைத் தத்துவமாகும். எனவே, பெண் ஆணின் துணையை நாடுகிறாள், அதற்காக ஏங்குகிறாள். ஆணும் பெண்ணை விரும்புகிறான்; அவளின் உறவுக்காகப் பேராவல் கொள்கிறான். எல்லா இலக்கியங்களும், நாவல்களும், திரைப்படங்களும், ஏன், சாதாரண விளம்பரங்களும்கூட ஆண்—பெண் உறவிலுள்ள இன்பத்தை மையமாகக் கொண்டிருப்பதைக்

காணலாம். தையற்கடையில்கூட ஏதாவதொரு ஆண்-பெண் பொம்மை வைத்திருக்கிறார்கள்.

''ப்ரவ்ருத்திர் ஏஷா பூதானாய்
நிவ்ருத்திஸ்து மஹாபலாம்.''

இந்தப் பிணைப்பு ஏற்கனவே ஏற்பட்டுள்ளது.

பாப் : ஆண்—பெண் பிணைப்பு?

ஸ்ரீல பிரபுபாதா : ஆண்—பெண் ஆசை. பௌதிக உலகின் பிடியிலிருந்து விடுதலை பெற விரும்பினால் இந்த ஆசை குறைந்து அறவே இல்லையென்ற நிலை ஏற்படவேண்டும். இல்லாவிடில் ஆசை மேலும் தொடரும். மீண்டும் மனிதன், தேவதை, விலங்கு, பாம்பு, பறவை, மிருகம், இப்படி ஏதாவதொரு பிறவி எடுக்கவேண்டி வரும். மறு பிறவியெடுக்க நேரிடும். எனவே ஆசை அதிகரிப்பது இயல்பென்றாலும் அதை நாம் அனுமதிப்பதற்கில்லை. கிருஹம், க்ஷேத்ரம், சுதம் (வீடு. நிலம், மக்கள்) ஆனால், ஆசையைக் குறைத்து நிறுத்திவிட முடியுமானால், அது முதல் தரம். எனவே, இளைஞர்களை பிரஹ்மசரியத்தை அனுஷ்டிக்கப் பயிற்றுவிப்பது நமது வேதமுறையில் முதல் படி. இதில் பாலுறவுக்கு இடமில்லை. ஆசைகளைக் குறைப்பதே வேதக் கொள்கை; அதிகரிப்பதல்ல. இந்த வேத—வாழ்வு முறை முழுவதையும் ''வர்ணாஸ்ரம தர்மம்'' என்றழைக்கிறார்கள். இந்த இந்திய முறை ''வர்ணம்'' மற்றும் ஆஸ்ரமம்'' ஆகியவற்றைக் கொண்டது. இதில் நான்கு சமுதாய முறைகளும் நான்கு ஆன்மீக முறைகளும் அடங்கும். ''பிரஹ்மசர்யம் (விவாகமாகாத—அதாவது ஆண்—பெண் உறவற்ற—மாணவ நிலை), ''கிருஹஸ்தம்'' (இல்லறம்), ''வானப்ரஸ்தம் (இல்லறத்திலிருந்து ஓய்வு பெற்ற வாழ்வு), ''ஸன்யாஸம்'' (துறவு): இவை, நான்கு ஆன்மீக முறைகளாகும். சமுதாய முறைகளாவன: ''பிராஹ்மணர்' (அறிஞர்கள்), ''க்ஷத்கிரியர்'' (ஆட்சியாளர்கள், நிர்வாகிகள்), 'வைஸ்யர்'' (வியாபாரிகள், விவசாயிகள்,) ''சூத்திரர்'' (சாதாரணப் பணியாளர்கள்,) எனவே, இந்த ஏற்பாட்டை ஒழுங்கு படுத்தும் நியமங்கள் திறம்பட அமைந்திருப்பதால் ஒருவனுக்கு இகலோக வாழ்வை அனுபவிக்கும் மனப்பாங்கிருந்தாலும்,

காலப்போக்கில் விடுதலையடைந்து வீடு பெறுகிருன். அதாவது இறைவனை அடைகிருன். இதுவே இந்த ஏற்பாட்டின் செயல்முறை. எனவே, பாலுணர்வு தேவையற்றது; ஆனால் அதோடு நாம் ஒட்டியிருப்பதால் அதை ஒழுங்குபடுத்தும் சில நியமங்கள் உள்ளன. (பின்னணியில் எங்கோ கீர்த்தனம் தொடங்குகிறது. மிருதங்கத்தின் மனங்கவரும் தாளங்களோடு, சிரிப்பொலியும் சங்குகள் முழங்கும் ஒலியும் கலந்து கேட்கின்றன.)

ஸ்ரீல பிரபு பாதா : ஸ்ரீமத் பாகவதம் கூறுவதாவது:- ''பும்ஸ: ஸ்ரியா மிதுனீ - பாவம் ஏதம் தயோர் மிதோ ஹ்ருதய-க்ரந்திம் ஆஹு: அதோ க்ருஹ - க்ஷேத்ர - ஸீதாப்த - வித்தைர் ஜனஸ்ய மோஹோயம் அஹம் மமேதி.''

(பாகவதம். 5. 5. 8)

பாலுறவு (ஆண் - பெண் ஆசை) ஜட வாழ்வின் அடிப்படைத் தன்மையாகும். ஆணும் பெண்ணும் ஒன்று சேரும் போது, அந்த நெருங்கிய பிணைப்பின் விளைவாக க்ருஹம் (வீடு), க்ஷேத்ரம் (நிலம்), ஸீதம் (மக்கள்), ஆப்தர்கள் (நண்பர்கள், சமுதாயம்) வித்தம் (பணம்) என்றெல்லாம் ஏற்படுகின்றன. இப்படியாக வீடு, நிலம், மக்கள், பணம் என்றவைகளில் சிக்கிக் கொள்கிருன். ''ஜனஸ்ய மோஹோ'யம்'' : இதுதான் மாயை இந்த மாயையின் காரணமாக, ''அஹம் மமேதி'' என்று எண்ணுகிருன். ''நான் இந்த உடல் உடலோடு சம்பந்தப்பட்டவையெல்லாம் என்னுடையவை என்று நினைக்கிருன்.

பாப் : என்ன அது?

ஸ்ரீல பிரபு பாதா : பற்றுதல் அதிகரிக்கிறது. லௌகீகப் பிணைப்புகள் காரணமாக எண்ணங்கள் பிறக்கின்றன: ''நான் இந்த உடல். இந்த உடல் குறிப்பிட்ட இந்த இடத்திலிருப்பதால் இது என் நாடு'', போன்ற எண்ணங்கள். இது தொடர்கிறது: ''நான் அமெரிக்கன், நான் இந்தியன், நான் அது, இது என் நாடு. என் நாட்டுக்காகவும் சமுதாயத்துக்காகவும் எல்லாவற்றையும் தியாகம் செய்ய நான் தயார்.'' இப்படியாக மாயை அதிகரித்துக் கொண்டே போகிறது. இந்த மாயையின் வசப்பட்டிருப்பதால் அவன் இறக்கும்போது வேறொரு உடலைப் பெறு

கிருன். அது உயர்ந்த உடலாகவோ, தாழ்ந்த உடலாகவோ இருக்கலாம்; அவனவன் கர்மத்தைப் பொறுத்தது. உயர்ந்த உடலைப் பெற்றுப் ஸ்வர்க லோகத்திலுள்ள ஒரு க்ரகத்துக்குச் சென்றாலும், அதுவும் சிக்கலில் அகப்படுவதேயாகும். ஆனல் அவன் பூனையாகவோ நாயாகவோ பிறந்தால் வாழ்வை இழந்தவனுகிருன். மரமாகவுமாகலாம் - நடக்கக் கூடியதே ஆத்மா எப்படி ஒரு உடலிலிருந்து மற்ருெரு உடலுக்கு இடம் பெயர்கிறது, எப்படிப் பல உடல்களில் சிக்கிக் கொள்கிறது என்பது பற்றிய விஞ்ஞானம் அறியப்படாத ஒன்ருக விருக்கிறது. எனவே ''என் சகோதரனைக் கொன்ருல், என் பாட்டனைக் கொன்ருல்...'' என்றெல்லாம் அர்ஜுனன் பேசியபோது, உடலின் அடிப்படையிலான வாழ்வைப் பற்றி மட்டுமே எண்ணிக் கொண்டிருந்தான். இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாத போது அவன் கிருஷ்ணரிடம் சரணடைந்து அவரைத் தனது ஆன்மீக குருவாக ஏற்றுக் கொண்டான். கிருஷ்ணர் அவனது ஆன்மீக குருவாக ஆனபோது அவர் ஆரம்பத்தில் அர்ஜுனனைக் கடிந்து கொண்டார்:

''அசோச்யான் அன்வசோசஸ் த்வம்
ப்ரக்ஞ-வாதாம்ச் ச பாஷஸே
கதாஸுன் அகதாஸும்ஸ்ச்ச
நானுசோசந்தி பண்டிதா :''

''அறிவாளியைப் போல் பேசும் அதே சமயத்தில் முதல் தர முட்டாளாகவும் இருக்கிருய். ஏனென்ருல் நீ உடலின் அடிப்படையிலான வாழ்வைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிருய்.'' இப்படியாக, பாலுறவின் பாற்பட்ட வாழ்வு உடலின் அடிப்படையிலான வாழ்வைத் தொடரச் செய்கிறது. எனவே அதைக் குறைத்து அறவே நீக்குவது வர்ணாஸ்ரம முறையின் முழு நோக்கம்.

பாப்: வாழ்வின் பல கட்டங்களில் அதைப் படிப்படியாகக் குறைப்பது என்பதுதானே?

ஸ்ரீல பிரபு பாதா: ஆம், குறைப்பதுவே இருபத்தைந்தாவது வயது வரை இளைஞன் மாணவனுகப் பயிற்சி பெறுகிருன். அப்போது அவன் பாலுறவு கொள்ள அனுமதிக்கப்படு

வதில்லை. ''பிரஹ்மசாரி'' என்று அழைக்கப்படுகிருன். அவர்களில் சிலர் ''நைஷ்டிக பிரஹ்மசாரிகள், அதாவது வாழ் நாள் முழுவதும் பிரம்மசாரிகளாகவே இருந்து விடு கிருர்கள். முழுமையான ஆன்மீக அறிவை அளிக்கும் கல்வியை அவர்கள் பெறுவதால் விவாகம் செய்து கொள்ள விரும்புவதில்லை. இதிலும் கட்டுப்பாடு உண்டு - விவாக மாகாமல் பாலுறவு கொள்ளக் கூடாது. எனவே தான் விவாகம் என்ற ஏற்பாடு மனித சமுதாயத்தில் காணப்படுகிறது; விலங்குகளின் சமுதாயத்தில் அது இல்லை. ஆனுல் மக்கள் படிப்படியாக மனித சமுதாய நிலையிலிருந்து மிருக சமுதாய நிலைக்கு இறங்கி வருகிருர்கள். அவர்கள் திருமணத்தை மறந்து விடுகிருர்கள். அநுவும் சாஸ்திரங்களில் முன்னதாகவே சொல்லப்பட்டுள்ளது.

''தாம்பத்யே' பிருசிர் ஹேது:''

...யுகத்தில் (சச்சரவுகள் நிறைந்த இக்காலம்) நாளா வட்டத்தில் திருமணங்கள் நடைபெருமலே போய் விடும் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதற்கு மட்டும் ஒப்பந்தம் செய்து கொள்வார்கள். அவர்களுடைய உறவு இனக் கவர்ச்சியின் வலிமையைப் பொருத்து அமையும். ஆணே, பெண்ணே பாலுறவில் குறைந்தவர்களாக இருந்தால் விவாக ரத்து ஏற்படும். இந்தத் தத்துவத்தைப் போதிக்கும் மேல் நாட்டுத் தத்துவ ஞானிகள் - ஃப்ராயிட் போன்றவர்கள், பல நூல்களை எழுதியிருக்கிருர்கள் ஆனுல் வேதப் பண்பின்படி குழந்தைகள் பெறுவதற்கு மட்டுமே பாலுறவில் நாட்டமிருக்க வேண்டும். அவ்வளவு தான். அதற்கான இயல்பிலான மன நிலை ஏற்கனவே அமைந்துள்ளது. தத்துவம் படிக்காதவர்க்கும் கூட பாலுணர்வு உண்டு. பள்ளிகளிலோ, கல்லூரிகளிலோ அது கற்பிக்கப் படுவதில்லை. அதில் எப்படி ஈடுபடுவதென்று எல்லாருக்கும் ஏற்கனவே தெரியும். (சிரிக்கிருர்) அதுதான் பொதுவான போக்கு. ஆனுல் அதை நிறுத்துவதற்கான கல்வி அளிக்கப்பட வேண்டும். அதுவே உண்மையான கல்வி. (நீண்ட இடைவெளி சைக்கிள் ஹார்ன்கள், விளையாடும் குழந்தைகள், மக்கள் கூட்டங்கள் ஆகியவை எழுப்பும் ஒலிகள் கேட்கின்றன)

பாப் : தற்போது அமெரிக்காவில் அது புரட்சிகரமான மாறுதலாகக் கருதப் படுகிறது.

ஸ்ரீல பிரபுபாதா : அமெரிக்காவில் மாறுதலடைய வேண்டிய பல விஷயங்கள் உள்ளன. கிருஷ்ண உணர்வு இயக்கம் அதைச் செய்யும். நான் உங்கள் நாட்டுக்குப் போனபோது யுவர்களும் யுவதிகளும் நண்பர்களாகச் சேர்ந்து வாழ்வதைக் கண்டேன். எனவே, 'நீங்கள் நண்பர்களாகச் சேர்ந்து வாழ்வது சரியல்ல; திருமணம் செய்து கொள்ள வேண்டும்; என்று என் மாணவர்களுக்கு நான் சொன்னேன்.

பாப் : திருமணம் கூட அங்கு பவித்ரமாகக் கருதப் படாததால் பலருக்குத் திருமணம் செய்து கொள்வதில் விருப்பமிருப்பதில்லை. காரணம், திருமணம், செய்துகொண்டும், ஒத்துப்போகாவிட்டால் விவாக ரத்து எளிதில் கிடைத்துவிடுவதே.

ஸ்ரீல பிரபுபாதா : ஆமாம், அதுவும்தான்.

பாப் : எனவே, திருமணம் செய்துகொள்வதில் அர்த்தமில்லையென்று சிலர் நினைக்கிறார்கள்.

ஸ்ரீல பிரபுபாதா : இல்லை. திருமணமென்பது சட்டபூர்வமான விபசாரமென்பது அவர்கள் கருத்து. அவர்கள் அப்படி எண்ணுகிறார்கள், ஆனால் அது திருமணமாகாது. அந்த கிறிஸ்துவப் பத்திரிக்கைகூட, அதன் பெயரென்ன?— Watch——?

பாப் : WATCHTOWER?

ஸ்ரீல பிரபுபாதா : WATCHTOWER. ஒரு மத குரு இரண்டு ஆண்களுக்கிடையே நடை பெற்ற விவாகத்தை அனுமதித்ததற்காக அந்தப் பத்திரிக்கை கண்டித்துள்ளது—ஒரு பால் காமம். ஆக, இப்படியெல்லாம் நடக்கிறது. திருமணம் விபச்சாரத்துக்காகவே ஏற்பட்டுள்ளதென்று அவர்கள் எண்ணுகிறார்கள். அவ்வளவுதான் எனவே, "இவ்வளவு செலவு செய்து ஒரு முழு நேர விபசாரியை வைத்துக் கொள்வானேன்? இல்லாமலிருப்பது நல்லது" என்று மக்கள் எண்ணுகிறார்கள்.

சியாம சுந்தர் : தாங்கள் பசுவையும் சந்தையையும் பற்றிய ஒரு உதாரணம் சொல்வதுண்டு.

ஸ்ரீல பிரபு பாதா : ஆம். சந்தையில் பால் கிடைக்கும்போது ஏன் பசுவை வைத்துக் காப்பாற்ற வேண்டும்? (எல்லாரும் சிரிக்கிறார்கள்) மேல் நாட்டில் நிலவும் வெறுக்கத்தக்க நிலையிது. நான் பார்த்திருக்கிறேன். இந்த இந்தியா விலும் மெதுவாக வந்து கொண்டிருக்கிறது. ஆன்மீக வாழ்வின் அடிப்படைத் தேவைகளான கொள்கைகளை மக்களுக்குக் கற்பிப்பதற்காக இந்த கிருஷ்ண உணர்வு இயக்கத்தை நாங்கள் துவக்கியுள்ளோம். அது எந்த வொரு மதப்பிரிவையும் சார்ந்த இயக்கமல்ல. அது ஒரு கலாசார இயக்கம். எல்லாருடைய நன்மைக்காகவும் ஏற் பட்டுள்ளது.

வாழ்வின் உண்மையான இலக்கு

(பிப்ரவரி 28, 1972-தொடர்ச்சி)

ஸ்ரீல பிரபுபாதா : இந்த இயக்கம் மனிதனை வாழ்வின் உண்மையான இலக்கை அடைய உதவுகிறது. அதற்காக வென்றே ஏற்பட்டுள்ளது.

பாப் : உண்மையான இலக்கு?

ஸ்ரீல பிரபுபாதா : வாழ்வின் உண்மையான இலக்கு.

பாப் : கடவுளை அறிவதுவே வாழ்வின் உண்மையான இலக்கா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். வீடு திரும்புதல், மீண்டும் முழு முதற்பொருளைச் சென்றடைதல். அதுவே வாழ்வின் உண்மையான இலக்கு. கடலிலிருந்து வரும் நீர் மேகங் களாகிறது. மேகங்கள் மழையாக வர்ஷிக்கின்றன. நதி யின் வழியே மிதந்து மீண்டும் கடலுக்குள் புகுவதே— உண்மையான லட்சியம். கடவுளிடமிருந்து வந்துள்ள நாம் ஜட வாழ்வினால் மனக்கலக்க மடைகிறோம் எனவே, இந்தக் கலக்கத்திலிருந்து விடுபட்டு வீடு திரும்புவதே,

அதாவது, மீண்டும் இறைவனைச் சென்றடைவதே, நமது குறிக்கோளாக இருக்கவேண்டும். இதுவே வாழ்வின் உண்மையான இலக்கு.

''மாம் உபேத்ய புனர் ஜன்ம
துः க்காலயம் அசாஸ்வதம்
நாப்னுவந்தி மஹாத்மான:
ஸம்ஸித்தப் பரமாம் கதா:''

''பக்தியில் யோகிகளான சிறந்த ஆத்மாக்கள் என்னை அடைந்த பிறகு துன்பம் நிறைந்த இந்தத் தாற்காலிகமான உலகிற்குத் திரும்பி வருவதேயில்லை. ஏனெனில், அவர்கள் மிகவுயர்ந்த பக்குவத்தை அடைந்து விடுகின்றனர்.'') பகவத்கீதை இவ்வாறு கூறுகிறது.

என்னை வந்தடைந்தால்— ''மாம் உபேத்ய'' அவன் (இந்தத் தாற்காலிகமான) உலகிற்குத் திரும்பி வருவதேயில்லை. எங்கே? இந்த இடத்திற்கு— 'துः:க்காலயம், அசாஸ்வதம்.' இந்த இடம் துன்பங்களின் இருப்பிடம். இது எல்லாருக்கும் தெரியும். ஆனால், தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் எல்லாரையும் முட்டாள்களாக்கி வைத்திருக்கிறார்கள். இகவுலக வாழ்வு துயரங்கள் நிறைந்தது. கிருஷ்ணர் சொல்கிறார், கடவுள் சொல்கிறார்: இந்த இடம் 'துக்காலயம்'—துன்பங்கள் நிறைந்த இடம். அது 'அசாஸ்வத'மும் கூட—தாற்காலிகமானது. "சரி. துன்பகரமானதாக இருந்துவிட்டுப் போகட்டும். நான் இங்கேயே ஒரு அமெரிக்கனாகவோ இந்தியனாகவோ வாழ்ந்து விடுகிறேன்' என்று நீங்கள் சரிகட்ட முடியாது. நீங்கள் எக்காலத்துக்கும் அமெரிக்கனாகவே இருப்பது சாத்தியமில்லை. அங்கிருந்து நீங்கள் உதைத்து வெளியேற்றப்படுவது நிச்சயம். மேலும், உங்கள் மறுபிறவி உங்களுக்குத் தெரியாது! எனவே அது 'துக்காலயம், அசாஸ்வதம்'—துன்பகரமானது, தாற்காலிகமானது. அதுவே எங்கள் தத்துவம்.

பாப்: ஆனால், கடவுளைப் பற்றிய அறிவு ஓரளவு இருந்தால் அப்போது வாழ்வு அவ்வளவு துன்பகரமாக இருக்காதல்லவா?

ஸ்ரீல பிரபுபாதா : அப்படியல்ல! 'ஓரளவு அறிவு போதாது. நிறைவான அறிவு வேண்டும்.

'ஜன்ம கர்ம ச மே திவ்யம்
ஏவம் யோ வேத்தி தத்த்வத :'

'தத்த்வத:' என்ருல் 'நிறைவாக' பகவத்கீதையில் முழுமையான அறிவு போதிக்கப்படுகிறது. எனவே மக்கள் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் பகவத்கீதையை அதன் உண்மையுருவில் கற்றுத் தன் வாழ்வை நிறைவுற்றதாகச் செய்து கொள்ளும் வாய்ப்பை நாங்கள் அளித்து வருகிரேம். அதுவே கிருஷ்ண உணர்வு இயக்கம் ஆத்மா உடல் விட்டு உடல் மாறுவது பற்றி உங்கள் விஞ்ஞானம் என்ன சொல்கிறது?

பாப் : நான் நினைக்கிறேன்...விஞ்ஞானம்...அதை மறுக்கவோ, ஆமோதிக்கவோ முடியாது. விஞ்ஞானத்துக்கு அதைப்பற்றித் தெரியாது.

ஸ்ரீல பிரபுபாதா : எனவேதான் விஞ்ஞானம் குறைபாடுள்ளது என்று நான் சொல்கிறேன்.

பாப் : என்ருலும் விஞ்ஞானம் ஓரளவுக்குச் சொல்லக்கூடும், சக்தியை ஒருபோதும் அழிக்க முடியாது, அது மாறுதலடைகிறதென்று விஞ்ஞானம் கூறுகிறதே.

ஸ்ரீல பிரபுபாதா : அதெல்லாம் சரி. ஆனல் சக்தி எதிர்காலத்தில் எப்படிச் செயல்படுகிறதென்பதைப் பற்றி விஞ்ஞானத்திற்குத் தெரியாது. சக்தி எப்படித்தடம் மாற்றப்படுகிறது? வெவ்வேறு விதமாகக் கையாளப்படும்போது சக்தி வெவ்வேறு விதமாகச் செயல்படுவதேன்? உதாரணமாக, மின் சக்தியை எடுத்துக்கொள்வோம். வெவ்வேறு விதமாகக் கையாளப்படும் போது வெப்பம் தரும் அடுப்பையும் குளிர் தரும் குளிர்பதனப் பெட்டியையும் எப்படி இயக்குகிறது? குளிர், வெப்பம், இவையிரண்டும் எதிரெதிரான தன்மைகள். ஆனல் இவற்றைத் தரும் மின் சக்தி—ஒன்றே. அதுபோலவே இந்த சக்தி—உயிர்ச் சக்தி—எப்படி இயங்கப் படுகிறது? எவ்வழிச் செல்கிறது? மறுபிறவியில் எப்படிப் பலனளிக்கிறது? இது விஞ்ஞானிகளுக்குத் தெரியாது. ஆனல் பகவத்கீதையில் இது மிகத்தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 'வாஸாம்ஸி ஜீர்ணனி

யதா விஹாய' உங்களை ஒரு சட்டை மூடிக்கொண்டிருக்கிறது. சட்டை பயனற்றதாகிப் போகும்போது அதை நீங்கள் மாற்றுகிறீர்கள். இந்த உடம்பும் சட்டையைப் போன்றதே. அது செயல்படும் தகுதியை இழக்கும்போது அதை நாம் மாற்றவேண்டியதாகிறது.

பாப் : மாற்றுகின்ற 'நாம்' என்பதென்ன? மாருமலிருப்பது எது?

ஸ்ரீல பிரபுபாதா : அதுதான் ஆத்மா.

பாப் : ஒரு பிறவியிலிருந்து மறு பிறவிக்கு மாறுவது?

ஸ்ரீல பிரபுபாதா : அதுவே ஆத்மா — 'நான்' பேசுகின்ற 'நீ' என்பது எது? நீங்களே? பேசுகின்ற 'நான்' என்பது என்ன? அடையாளப்படுத்துவது: ஆத்மா.

பாப் : என் ஆத்மா. உங்கள் ஆத்மாவினின்று வேறுபட்டதா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். நீங்கள் ஒரு தனிப்பட்ட ஆத்மா. நான் ஒரு தனிப்பட்ட ஆத்மா.

பாப் : நீங்கள் கர்மாவின் பாதிப்புக்களிலிருந்து விடுபட்டவர்கள். என்னுடைய கர்மாவின் பாதிப்புக்களிலிருந்து நான் விலகிவிட்டால் அப்போது நம் ஆத்மாக்கள் ஒன்ருன வையா, அல்லது வேறு பட்டவையா?

ஸ்ரீல பிரபுபாதா : எல்லாரிலும் ஆத்மாவின் இயல்பு ஒன்றுதான். தற்சமயம் வாழ்வின் நோக்கமென்ன என்பது பற்றி நீங்கள் ஒரு குறிப்பிட்ட கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் நாட்டவரான இவர்கள் (கிருஷ்ண உணர்வு பக்தர்கள்) ஒரு கருத்தைக் கொண்டிருந்தார்கள், ஆனல் பயிற்சியின் மூலம் வேறு கருத்துக்குத் தங்களை மாற்றிக் கொண்டுள்ளார்கள். எனவே, இறுதியான பயிற்சி கிருஷ்ண உணர்வைப் பெறுவதற்கானதே. அதுவே நிறைவானது.

பாப் : இரு நபர்கள் கிருஷ்ண உணர்வைக் கொண்டவர்களாக விருந்தால் அவர்களுடைய ஆத்மாக்கள் ஒன்றே போலாகுமா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆத்மா எப்போதும் ஒன்று போலத்தானிருக்கும்.

பாப் : ஒவ்வொரு மனிதனிலும்? ஒவ்வொரு மனிதனிலும் ஒன்றுபோலவே இருக்குமா?

ஸ்ரீல பிரபுபதா : ஆம்.

பாப் : (இரு பக்தர்களைச் சுட்டிக்காட்டி) இவர்களிருவரும் கிருஷ்ண உணர்வுள்ளவர்களாகையால் இவர்களுடைய ஆத்மாக்களும் ஒன்றுபோலவேயிருக்குமா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆத்மா ஒன்ருனதுதான். ஆனால் எப்போதும் தனிப்பட்டது, கிருஷ்ண உணர்வு இல்லாதவருக்கும் கூட. உதாரணமாக, நீங்கள் ஒரு மனிதப் பிறவி, நான் ஒரு மனிதப் பிறவி, நான் கிறிஸ்துவனாக இல்லாவிட்டாலும், நீங்கள் இந்துவாக இல்லாவிட்டாலும், நாம் மனிதப்பிறவிகள்தாம். அதுபோலவே, ஆத்மா கிருஷ்ண உணர்வில்லாததாக விருக்கலாம், உள்ளதாக விருக்கலாம் அது பொருட்டல்ல. ஆனால் ஆத்மா ஆத்மாவே.

பாப் : இன்னும் விரிவாகச் சொல்ல முடியுமா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆத்மா—பரிசுத்த நிலையில் எல்லா ஆத்மாக்களும் சமானமானவையே. விலங்குகளிலும் கூட. எனவே தான் 'பண்டிதா :ஸமதர்சின:' என்று சொல்லப் பட்டிருக்கிறது. உண்மையான அறிவாளிகள், மனிதனையானாலும் விலங்கையானாலும் வெளி உருவைக் கொண்டு மதிப்பிட மாட்டார்கள்.

பாப் : இது பற்றி நான் மற்றுமொரு கேள்வி கேட்கலாமா?

ஸ்ரீல பிரபுபாதா : சரி.

பாப் : ஆத்மா ஒரு வகையில் கடவுளின் ஒரு பகுதியென்றே நான் கருதி வந்திருக்கிறேன். சில சமயங்களில் கடவுளை உணர்வதாக நான் எண்ணுகிறேன். நான் இந்த இடத்திலிருக்கிறேன். கடவுள் இந்த இடத்திலிருப்பதாக நீங்கள் சொல்லலாம். என்னுள் ஆத்மா இருக்குமானால் கடவுள் என்னுள்ளிருப்பதை நான் உணர முடியுமல்லவா? கடவுள் முழுவதையுமல்ல நான் சொல்வது, ஆனால் ஒரு—

ஸ்ரீல பிரபுபாதா : கடவுளின் ஒரு பகுதியை.

பாப் : என்னுள் நான் கடவுளை உணரவில்லை; ஆனால் கடவுள் இங்கே, தனியாக, இருக்கலாம். என்னிலிருந்து தனியாக இருக்காலம். ஆனால், என் ஆத்மா கடவுளின் ஒரு பகுதியாக விருப்பதால் என்னுள் நான் கடவுளை உணர்வது சாத்தியமாகவேண்டுமல்லவா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். கடவுள் உள்ளும் இருக்கிறார். கடவுள் எங்குமிருக்கிறார். உள்ளுமிருக்கிறார். புறமுமிருக்கிறார். இது அறியப்பட வேண்டியதொன்று.

பாப் : உள்ளிருக்கும் கடவுளை எப்படி உணர்வது?

ஸ்ரீல பிரபுபாதா : இது ஆரம்பத்தில் சாத்தியமில்லை. வேத நூல்களிலிருந்து இதை அறிய வேண்டும். உதாரணமாக: பகவத்கீதையில் 'ஈச்வர: ஸர்வ பூதானும் ஹ்ருதேஷே' ர்ஜுன திஸ்ததி'' : கடவுள் ஒவ்வொருவர் உள்ளத்திலுமிருக்கிறார். 'பரமாணு — சயாந்தர — ஸ்தம்' 'கடவுள் ஒவ்வொரு அணுவினுள்ளும் இருக்கிறார்' என்று சொல்லப் பட்டுள்ளது. இது நாம் பெறும் முதல் செய்தி. பின்னர் யோக முறையில் நீங்கள் அதை உணரவேண்டும்.

பாப் : யோக முறையில்?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம்.

பாப் : ஹரே கிருஷ்ண மந்திரத்தைக் கீர்த்தனம் செய்வது இப்படிப்பட்ட யோக முறையா?

ஸ்ரீல பிரபுபாதா: ஆம். அதுவும் ஒரு யோக முறையே.

பாப் : இந்தச் செய்தியை அறிய—உள்ளிருக்கும் ஆத்மாவை உணர—நான் எத்தகைய யோக முறையைப் பயில வேண்டும்?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். வெவ்வேறான யோக முறைகள் உள்ளன. ஆனால் இந்தயுகத்துக்கு இந்த (ஹரே கிருஷ்ண கீர்த்தனம்) முறை மிகவும் உகந்தது.

பாப் : கீர்த்தனம் செய்வது?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம்.

பாப் : இதன் மூலம் நான் வெளிப்புறமுள்ள கடவுளை மட்டுமல்லாமல் உள்ளிருக்கும் கடவுளையும் உணரமுடியுமா?

ஸ்ரீல பிரபுபாதா : கடவுளைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் நீங்கள் புரிந்து கொள்வீர்கள் கடவுள் எப்படி உள்ளும் புறமும் இருக்கிறார். எப்படிச் செயல்படுகிறார் என்பதையெல்லாம் உணர்வீர்கள். உங்களுக்கு எல்லாம் வெளியாகும். இந்தத் தொண்டு மனப்பாங்கை மேற்கொண்டால் கடவுள் உங்களுக்குத் தன்னை வெளிப்படுத்துவார். உங்கள் முயற்சியால் மட்டும் நீங்கள் கடவுளை அறிய

முடியாது. கடவுள் அவராகவே தன்னைக் காட்டவேண்டும். உதாரணமாக, இரவில் சூரியன் கண்ணுக்குத் தெரியாதபோது டார்ச் வெளிச்சத்தைக் கொண்டோ வேறு வெளிச்சத்தைக் கொண்டோ அதைப் பார்க்க முடியாது. ஆனால் காலையில் சூரியனை இயல்பாகவே, எந்தவித வெளிச்சத்தின் உதவியுமில்லாமல் காணமுடியும். அது போலவே, கடவுள் தன்னை வெளிப்படுத்தத் தக்க சூழ்நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும். அத்தகைய சூழ்நிலையில் நீங்கள் உங்களை அமர்த்திக் கொள்ள வேண்டும். ஏதோ ஒரு வழிமுறையை அனுசரித்து. ''தயவு செய்து வாருங்கள். நான் உங்களைப் பார்க்க வேண்டும்'' என்று கடவுளிடம் சொல்ல முடியாது. கடவுள் உங்கள் கட்டளைப் படி நடப்பவரல்லர்.

பாப் : கடவுள் தன்னை வெளிப்படுத்தும்படியாக அவரை நாம மகிழ்விக்கவேண்டும் சரிதானே?

சியாம சுந்தர் : அவரை நாம் மகிழ்விக்கிறோமென்று எப்படித் தெரிந்து கொள்வது?

ஸ்ரீல பிரபுபாதா : அவரை நாம் காணும்போது தெரிந்து கொள்கிறோம். நீங்கள் சாப்பிடும் போது பசி நீங்கிப் பலம் பெறுகிறீர்களா என்று யாரையும் கேட்கவேண்டியதில்லை. சாப்பிடும்போது சக்தி உங்கள் உடலில்ஏறுவதை நீங்களே உணர்கிறீர்கள். யாரையும் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. அதுபோலவே, கடவுளுக்கு நீங்கள் உண்மையான தொண்டாற்றினால் அறிந்து கொள்வீர்கள். ''கடவுள் எனக்குக் கட்டளையிடுகிறார். கடவுள் இங்கே இருக்கிறார். நான் கடவுளைக் காண்கிறேன்'' என்று உணர்வீர்கள்.

ஒரு பக்தர் : அல்லது கடவுளின் பிரதிநிதியை.

ஸ்ரீல பிரபுபாதா : ஆம்.

பக்தர் : அது சற்று சுலபமானது

ஸ்ரீல பிரபுபாதா : கடவுளின் பிரதிநிதியின் மூலமாக அணுக வேண்டும். ''யஸ்ய ப்ரஸாதாத் பகவத்—ப்ரஸாத:'' ''ஆன்மீக குருவின் கருணையால் கிருஷ்ணரின் கருணை பாலிக்கப்படுகிறது. கடவுளின் பிரதிநிதியை மகிழ்வித்தால்

கடவுள் தானாகவே மகிழ்ச்சியடைகிறார். இவ்வழியில் கடவுளை நீங்கள் நேருக்கு நேர் காணலாம்.

ஒரு இந்தியர் : கடவுளின் பிரதிநிதியை மகிழ்விப்பதெப்படி?

ஸ்ரீல பிரபுபாதா : நீங்கள் அவரது கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும். அவ்வளவே. கடவுளின் பிரதிநிதி குரு அவர் உங்களை அப்படிச் செய், இப்படிச் செய் என்று சொல்கிறார். அப்படி நீங்கள் செய்தால் அது அவரை மகிழ்விக்கும். ''யஸ்ய ப்ரஸாதான் ந கதி: குதோ'பி''. ''குருநாதரின் அருளின்றி முன்னேற்றமடைய முடியாது. அவர் அதிருப்தியடையும் வகையில் நடந்து கொண்டால் நீங்கள் இருக்குமிடம் தெரியாமல் போய் விடுவீர்கள். எனவே நாம் குருவை வணங்குகிறோம்.

''ஸக்ஸத் - தரித்வேன ஸமஸ்த - சாஸ்த்ரைர் உக்தஸ் ததா பாவ்யத ஏவ ஸத்பி: கிந்து ப்ரபோர் ய: ப்ரிய ஏவ தஸ்ய வந்தே குரோ: ஸ்ரீ-சரணாரவிந்தம்.'' (''குரு பிரபுவின் அந்தரங்க சேவகனை விரும்புவதால் அவரைப் பரம புருஷனைப் போலவே மதிக்க வேண்டும். இதை எல்லா மத நூல்களும் எல்லா அறிஞர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். எனவே, கிருஷ்ண பரமாத்மாவின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாகிய ஆன்மீக குருவின் பாத கமலங்களில் பணிவுடன் சிறந்தாழ்த்துகிறேன்.'')

குருவைக் கடவுளாகவே ஒப்புக் கொள்ள வேண்டும். எல்லா சாஸ்திரங்களும் அப்படித்தான் பணிக்கின்றன.

பாப் : குருவைக் கடவுளின் பிரதிநிதியாக ஒப்புக் கொள்ள வேண்டுமா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். குரு கடவுளின் பிரதிநிதி. கிருஷ்ணரின் வெளி தோற்றம்.

பாப் : ஆனால், கிருஷ்ணரின் அவதாரங்களைப் போன்றல்ல?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம்.

பாப் : கிருஷ்ணரோ, சைதன்யரோ, இவ்வுலகிற்கு வரும் போது மேற்கொள்ளும் வெளித்தோற்றத்திற்கும் குருவின் வெளித் தோற்றத்திற்குமுள்ள வேறுபாடு என்ன?

ஸ்ரீல பிரபுபாதா : குரு கிருஷ்ணரின் பிரதிநிதி. எனவே, குரு யார் என்பதற்கான அடையாளங்கள் உள்ளன. ஒரு

குருவின் பொதுவான அடையாளங்கள் வேதங்களில் சொல்லப்பட்டுள்ளன.

''தத் விஞ்ஞானர்த்தம் ஸகுரும்
ஏவாபிகச்சேத்
ஸமித் பாணி : ச்ரோத்ரியம்
ப்ரஷ்மநிஷ்டம்.''

குருவானவர் சிஷ்ய பரம்பரையில் வந்தவராக இருக்க வேண்டும். தன் ஆன்மீக குருவிடமிருந்து வேதங்களை முழுமையாகக் கற்றவராக இருக்க வேண்டும். குருவின் பொதுவான அடையாளம் அவர் நிறைவான பக்தராக விருப்பது. கிருஷ்ணரின் உபதேசங்களை உலகினருக்கு எடுத்துச் சொல்வதன் மூலம் அவருக்கு சேவை செய்பவ ராய் குரு விளங்குகிறார்.

பாப் : சைதன்ய மகாபிரபு இருந்தார். அவர் தங்களினின்று வேறுபட்ட தன்மையரான குருவா?

ஸ்ரீல பிரபுபாதா : இல்லையில்லை. குருக்கள் பல விதமாக விருக்க முடியாது. எல்லா குருக்களும் ஒரே தன்மையான வர்களே.

பாப் : ஆனால் அவர் (சைதன்யர்) அதேசமயம் ஒரு அவதார மாகவும் விளங்கினரல்லவா?

ஸ்ரீல பிரபு பாதா : ஆம். அவர் கிருஷ்ணரேதான். ஆனால் அவர் குருவாகவும் விளங்குகிறார்.

பாப் : ஓ, அப்படியா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம்.

பாப் : பிறகு...

ஸ்ரீல பிரபுப்பாதா : கிருஷ்ணரே கடவுளாகையால் அவர் பின் வருமாறு பணித்தார்:

''ஸர்வ தர்மான் பரித்யஜ்யமாம் ஏகம் சரணம் வ்ரஜ'' ''எல்லா விதமான மதங்களையும் உதறி விட்டு என்னைச் சரணடைவாயாக.'' ஆனால் மக்கள் அவரைத் தவருகப் புரிந்து கொண்டார்கள். எனவே, கிருஷ்ணர் மீண்டும் குருவாக வந்து தன்னிடம் சரணடைவதெப்படியென்று மக்களுக்கு உபதேசித்தார்.

சியாம சுந்தர் : ''நானே குரு'' என்று அவர் பகவத் கீதை யில் கூறுகிறாரல்லவா?

ஸ்ரீல பிரபு பாதா : அவரே ஆதி குரு, அர்ஜுனனால் குரு வாக ஏற்றுக் கொள்ளப் பட்டதால். இதிலென்ன சிரமம்? ''சிஷ்யஸ்தே' ஹம் சாதி மாம் த்வாம் ப்ரபன்னம்'' அர்ஜுனன் பிரபுவிடம் சொன்னான்: ''நான் தங்கள் சிஷ்யன். தங்களைச் சரணடைந்துள்ள ஆத்மா. எனவே எனக்கு உபதேசியுங்கள்'' அவர் குருவாக இல்லா விட் டால் அர்ஜுனன் எப்படி அவருக்கு சிஷ்யனாக முடியும்? அவரே ஆதி குரு. ''தேனே ப்ரஹ்ம ஹ்ருதாய ஆதி-கவயே'' : ''முதல் சிருஷ்டியான பிரஹ்மாவின் இதயத் துக்கு வேத ஞானத்தைத் தந்தருளியவர் அவரே.'' எனவே, அவரே ஆதி குரு.

பாப் : கிருஷ்ணர்.

ஸ்ரீல பிரபு பாதா : ஆம், அவர்தான் முதல் குரு. அதை யடுத்து, அவரது மாணவரான பிரஹ்மா குரு. பின்னர் அவரின் சிஷ்யரான நாரதர் குரு. அதற்குப் பிறகு அவ ரின் சிஷ்யரான வியாஸர் குரு. இப்படியே குரு பரம்பரை வருகிறது. ''ஏவம் பரம்பராப்ராப்தம்.'' குரு - சிஷ்ய பரம்பரையின் வழியாக பரமான ஞானம் பெறப்படுகிறது.

பாப் : இப்படியாக, சிஷ்ய பரம்பரையின் வழியாக குரு ஞானம் பெறுகிறார்; கிருஷ்ணரிடமிருந்து நேராகவல்ல? கிருஷ்ணரிடமிருந்து ஒரு சிறிதாவது நேராக ஞானம் பெறுகிறீர்களா?

ஸ்ரீல பிரபு பாதா : ஆம். கிருஷ்ணர் நேரடியாக வழங்கி யுள்ள அறிவுரை உள்ளது. அதுவே பகவத் கீதை.

பாப் : புரிகிறது. ஆனால்...

ஸ்ரீல பிரபு பாதா : ஆனால் அதை நீங்கள் பரம்பரையில் வந்த குருவிடம் கற்க வேண்டும். இல்லாவிடில் நீங்கள் அதைத் தவறாக அர்த்தம் செய்து கொள்ளக் கூடும்.

பாப் : ஆனால் தற்போது தாங்கள் நேரடியாகக் கிருஷ்ணரிட மிருந்து செய்தி பெறுவதில்லையா? சிஷ்ய பரம்பரையில் வந்த நூல்களின் மூலமாக மட்டுமேயா?

ஸ்ரீல பிரபுபாதா : இதில் வித்தியாசம் எதுவுமில்லை. 'இதோ பென்ஸில் இருக்கிறது'' என்று நான் ஒருவரிடம் சொல்கிறேன் என்று வைத்துக் கொள்வோம். அவர் இன்னொருவரிடம் ''இது ஒரு பென்ஸில்'' என்று சொன்னால் நான் சொல்லித் தந்ததற்கும் அவர் சொல்லித் தந்ததற்கும் என்ன வித்தியாசமிருக்கிறது?

பாப் : கிருஷ்ணரின் கருணையால் இப்போது தாங்கள் இதை அறிகிறீர்கள், அப்படித்தானே?

ஸ்ரீல பிரபுபாதா : கிருஷ்ணரின் கருணையென்றும் சொல்லலாம், உண்மை உருவில் வழங்கப்பட்டால். நாங்கள் கற்பிப்பது போல். பகவத் கீதையில் கிருஷ்ணர் சொல்கிறார்.

''ஸர்வ தர்மான் பரித்யஜ்ய
மாம் ஏகம் சரணம் வ்ரஜ''

''எல்லா மதங்களையும் புறக்கணித்து விட்டு என்னிடம் சரணடை.'' எல்லாவற்றையும் உதறி விட்டு கிருஷ்ணரைச் சரணடைய வேண்டுமென்று, நாம் உபதேசிக்கிறோம். எனவே, கிருஷ்ணர் கற்பித்ததற்கும் நாம் இப்போது கற்பிப்பதற்கும் எவ்விதமான வேறுபாடுமில்லை. எனவே. குறைவற்ற முறையில் நீங்கள் அறிவைப் பெறும்போது கிருஷ்ணரிடமிருந்து நேரடியாகப் பெறுவதேயாகும். நாங்கள் எதையும் மாற்றுவதில்லை.

பாப் : பக்தியோடு உண்மையாகப் பிரார்த்தனை செய்தால் அதைக் கிருஷ்ணர் கேட்கிறாரா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம்.

பாப் : என்னிடமிருந்து அவருக்குப் போகிறதா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். ஏனென்றால் அவர் உங்கள் இதயத்தில் இருக்கிறார். அவர் எப்போதும் உங்களுக்குச் செவி சாய்த்துக் கொண்டிருக்கிறார்—நீங்கள் பிரார்த்திக்கும் போதும் பிரார்த்திக்காமலிருக்கும் போதும், நீங்கள் அசட்டுத்தனமாக ஏதாவது செய்யும்போதும் கூட அவர் கவனித்துக் கொண்டுதானிருக்கிறார். நீங்கள் பிரார்த்தனை செய்வதானால், மிகவும் நல்லது—வரவேற்கத்தக்கது.

பாப் : கிருஷ்ணரின் காதுகளுக்குப் பிரார்த்தனையின் ஒலி அர்த்தமற்றதைவிட அதிக சப்தமாகக் கேட்கிறதா?

ஸ்ரீல பிரபு பாதா : அப்படியல்ல கிருஷ்ணர் நிறைவானவர். அவர் ஒவ்வொன்றையும் கேட்கிறார். நீங்கள் பேசாவிட்டாலும், "இதைச் செய்வேன்" என்று எண்ணினாலும் கூட அவர் கேட்கிறார்.

"ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி
ஸந்நிவிஷ்ட :"

கிருஷ்ணர் எல்லாருடைய இதயத்திலும் வீற்றிருக்கிறார்.

பாப் : ஆனாலும் அவரை நோக்கிப் பிரார்த்தனை செய்ய வேண்டும்—அப்படித்தானே?

ஸ்ரீல பிரபு பாதா : பிரார்த்தனை அவரவர் செய்ய வேண்டியது.

பாப் ; யார் செய்ய வேண்டியது?

ஸ்ரீல பிரபு பாதா: உயிர் வாழும் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது. அது ஒன்றுதான் வேலை. "ஏகோ பஹூனாம் யோ விததாகி காமான்."வேதம் இவ்வாறு சொல்கிறது.

பாப் : அதன் பொருளென்ன?

ஸ்ரீல பிரபு பாதா : அவர் (கடவுள்) எல்லாருக்கும் தேவையான எல்லாவற்றையும் வழங்குகிறார். எல்லாருக்கும் உணவு வழங்குபவர் அவரே. ஆகவே, அவரே பரமபிதா. எனவே, "பிதாவே, எனக்கு இது தாரும் என்று ஏன் ஒருவர் பிரார்த்திக்கக் கூடாது? கிறிஸ்துவ பைபிளில் வருவது போல், "அன்றன்றைக்குரிய அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்" என்று ஏன் பிரார்த்திக்கக் கூடாது? அவர்கள் செய்வது மிக நல்ல காரியம். அவர்கள் பரமபிதாவை ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், வயது வந்த குழந்தைகள் தந்தையிடம், இது வேண்டும், அது வேண்டுமென்று கேட்கக்கூடாது. தந்தைக்குச் சேவை செய்யத் தயாராக இருக்க வேண்டும். அதுவே பக்தி.

பாப் : என் கேள்விகட்கெல்லாம் மிகப் பக்குவமாக விடையளிக்கிறீர்கள். (எல்லாரும் அன்போடு சிரிக்கிறார்கள்)

ஸ்ரீல பிரபு பாதா : மிக்க நன்றி.

பாப் : இப்போது நான் உங்களை இன்னுமொரு கேள்வி கேட்கலாமா?

ஸ்ரீல பிரபு பாதா : ஓ. தாராளமாக.

இயற்கையின் மூன்று குணங்கள்

(பிப்ரவரி 28, 1972- தொடர்ச்சி)

பாப் : மூன்று குணங்கள் வாழ்வில் உள்ளதாக நான் படித்திருக்கிறேன் : தீவிர குணம், அறியாமைக் குணம், நற்குணம் ஆகியவை. இதைப் பற்றித் தாங்கள் சற்று விளக்க வேண்டுமென்று விரும்புகிறேன், குறிப்பாக அறியாமை மற்றும் நற்குணம் பற்றி.

ஸ்ரீல பிரபுபாதா : நற்குணமுள்ளவன் நல்லறிவைப் பெறலாம். கடவுள் இருக்கிறார், இந்த உலகம் அவரால் சிருஷ்டிக்கப் பட்டது. போன்ற பல விஷயங்களை, சூரியன் இப்படிப்பட்டது, சந்திரன் இப்படிப்பட்டது என்பன போன்ற பல விஷயங்களை, நிறைவான அறிவை அவன் பெறலாம். ஒருவன் சிறிது அறிவு பெற்றால், அது முழுமையானதாக இல்லாவிட்டாலும் கூட நற்குணத்தைச் சார்ந்ததே. தீவிர குணமுள்ளவன் தன்னைத் தன் பூதவுடலாகக் கருதிக்கொண்டு புலன்களைத் திருப்திப்படுத்த முனைகிறான். அது தீவிர குணம், அறியாமையென்பது மிருக வாழ்க்கை. அறியாமலிருப்பவன் கடவுள் என்றால் என்ன, உண்மையான இன்பத்தை அடைவதெப்படி, நாம் ஏன் இவ்வுலகில் பிறந்துள்ளோம் என்பதையெல்லாம் அறியாதவன். உதாரணமாக, ஒரு மிருகத்தை வெட்டப்படுமிடத்துக்கு இட்டுச் சென்றால் அதுபோகும். அதுவே அறியாமை. ஆனால் மனிதன் எதிர்ப்புத் தெரிவிப்பான். கொல்லப் படுவதற்கு முன் ஒரு ஆட்டுக்கு ஒரு வாய்ப் புல் கொடுத்தால் அது மகிழ்ச்சியடையும். உணவு கிடைத்ததில் அதற்குத் திருப்தி, குழந்தையைப் போல. ஒரு குழந்தையை ஒருவன் கொல்வதற்குத் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் போதும் அது மகிழ்ச்சியாகச் சிரித்துக் கொண்டிருக்கும். ஏனென்றால் அது ஒன்றுமறியாதது.

பாப் : இந்தக் குணங்களில் செயல்படுவதைப் பொருத்து ஒருவரின் கர்மா அமைகிறது. சரிதானே?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். நீங்கள் சார்ந்திருக்கும் இயற்கைக் குணங்களைப் பொருத்து உங்கள் செயல்களின் தன்மை அமைகிறது.

''காரணம் குண- ஸங்கோ' ஸ்ய ஸத்- அஸத்- யோனி ஜன்மஸு''. ஒருவன் சம்பந்தப்பட்டுள்ள குணங்களைப் பொருத்து அவன் உயர் பிறவியையோ இழிந்த பிறவி யையோ அடைகிறான்.

பாப் : அப்படியானால், ஏமாற்றுவது போன்ற செயல்களெல் லாம் எந்த குணத்தைச் சேர்ந்ததாகும்?

ஸ்ரீல பிரபுபாதா : ஏமாற்றுவது தீவிரமும் அறியாமையும் கலந்த செயல் ஒருவன் மற்றொருவனை ஏமாற்றுகிறானென் றால், அவன் ஒரு பொருளைப் பெறத் தீவிரமான இச்சை கொண்டிருக்கிறான் என்பதாகும். ஆனால் அவன் கொலை செய்தால் அதற்காகப் பின்பு துயரப்பட வேண்டியதிருக் கும் என்பதை அறியாமலிருக்கிறான். எனவே அவனின் செயல் தீவிர இச்சையும் அறியாமையும் கலந்ததாகும்.

பாப் : ஒருவன் மற்றொருவனுக்கு உதவிச் செய்யும் போது?

ஸ்ரீல பிரபுபாதா : அது நற்குணத்தின் பாற் பட்டது.

பாப் : எப்படி நற்குணமென்கிறீர்கள்? அது எந்த அறிவின் பாற் பட்டது? அதாவது, எந்த அறிவைப் பெற்றிருப் பதை அது குறிக்கிறது? நற்குணம் அறிவைப் பெற்றிருப் பதால் ஏற்படுவது என்று தாங்கள் சொன்னீர்கள்.

ஸ்ரீல பிரபு பாதா : ஆம்.

பாப் : அறிவு.

ஸ்ரீல பிரபு பாதா : ஆம்.

பாப் : மற்றொருவருக்கு உதவுகிறது?

ஸ்ரீல பிரபுபாதா : அறியாமையிலிருக்கும் ஒருவன் தெளிவு பெற உதவுகிறீர்கள்.

பாப் : என்வே, அறிவு தானம்...

ஸ்ரீல பிரபுபாதா : ஆம் நல்ல காரியம்.

பாப் : ஏதாவது ஒரு வகையில் உதவுவது?

ஸ்ரீல பிரபுபாதா : அதுவும் நல்லதே.

பாப் : எதுவுமில்லாத பிச்சைக்காரனுக்குப் பிச்சை அளிப்பது

ஸ்ரீல பிரபுபாதா : அதுவும் நல்லதாகலாம். ஆனால். உங்

கள் பௌரி தெருவில் நடப்பதைப் போலல்ல. அங்கே பணம் தானமாகப் பெறுபவன் உடனேயே அந்தப் பணத்துக்கு மது வாங்கிக் குடித்துவிட்டு அங்கேயே விழுந்து கிடக்கிறான். (எல்லாரும் சிரிக்கிறார்கள்) அப்படிப் பட்ட தானம் நல்லதல்ல. அது அறியாமையாகும்.

பாப் : தானம் செய்வது அறியாமை?

ஸ்ரீல பிரபுபாதா : மூன்று வகையான தானம் உள்ளது—நன்மையானது, இச்சையை வளர்ப்பது, அறியாமையால் செய்யப்படுவது. கிருஷ்ண உணர்வு இயக்கத்திற்கு தானம் கொடுப்பதுபோல்—அது இறையுணர்வைப் பரப்பும் நல்ல காரியத்திற்குப் பயன்படுகிறது. பலன் கருதித் தானம் செய்வது இச்சையை மேலும் வளர்க்கிறது. காலம், இடம் கருதாமல் பௌரித்தெரு மனிதனைப் போன்ற தகுதியற்றவர்களுக்குத் தானம் வழங்குவது அறியாமையைச் சார்ந்தது. ஆனால் கிருஷ்ணர் சொல்கிறார்.

‘‘யத் கரோஷி யத் அச்நாஸி
யஜ் ஜுஹோஷி ததாஸியத்’’

‘‘எதையெல்லாம் நீ செய்கின்றாயோ எதையெல்லாம் நீ உண்கின்றாயோ, எதையெல்லாம் நீ நிவேதனம் செய்கின்றாயோ, எதையெல்லாம் நீ கொடுக்கின்றாயோ, எந்த விரதங்களையெல்லாம் நீ அனுஷ்டிக்கிறாயோ, அவையெல்லாவற்றையும் எனக்கு அர்ப்பணமாக நீ செய்ய வேண்டும்.’’ கிருஷ்ணர் ஏற்றுக் கொண்டால் அது நிறைவான தானமாகிறது. கிருஷ்ணரின் பிரதிநிதி ஏற்றுக் கொண்டாலும் அப்படியே.

பாப் : பசித்திருப்பவனுக்கு உணவளிப்பது எப்படிப்பட்ட தானமாகும்?

ஸ்ரீல பிரபுபாதா : அது சந்தர்ப்ப நிலையைப் பொருத்தது. உதாரணமாக, ஒரு வைத்தியர் நோயாளியைக் கெட்டியான உணவும் எதுவும் சாப்பிடக் கூடாதென்று சொல்லியிருந்தும், நோயாளி கேட்டானென்று மனமிரங்கி நீங்கள் கெட்டியான ஆகாரம் கொடுப்பது அவனுக்கு நன்மை செய்வதாகாது. அது அறியாமை.

பாப் : இந்த பக்தர்கள் கர்மத்தின் விளைவுகளிலிருந்து விடுபட்டவர்களா? அவர்கள் கர்மாவை உணர்கின்றார்களா?

அவர்கள் இந்த மூக்குணங்களில் செயல்படுகிறார்களா? அவர்கள் நற்குணம் எனும் தன்மையில் இருப்பவர்களா?

ஸ்ரீல பிரபுபாதா : அவர்கள் நற்குணத்திற்கும் மேம்பட்டவர்கள். சுத்தஸத்வர்கள். இந்த பக்தர்கள் ஜடவுலகிலிருப்பவர்களல்லர். அவர்கள் ஆன்மீக உலகில் வசிப்பவர்கள். இது பகவத்கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. ''மாம் ச யோ (அ) வ்யபிசாரேண பக்தி-யோகன ஸேவதே ஸ குணான் ஸமதீத்யைதான் ப்ரஹ்ம பூயாய கல்பதே'' ''பூரண பக்தித் தொண்டில் ஈடுபட்டு எந்த நிலையிலும் இழிவடையாத ஒருவன், ஜட இயற்கையின் குணங்களை உடனடியாகக் கடந்து பிரம்ம நிலையை வந்தடைகிறான்.'' பக்தர்கள் நற்குணத்திலோ தீவிர குணத்திலோ அறியாமையிலோ இருக்கவில்லை. அவர்கள் இந்த குணங்களையெல்லாம் கடந்து நிற்பவர்கள்.

பாப் : மிகவும் உண்மையான பக்தர் இந்த நிலையை அடைகிறாரா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். பக்தன்... நீங்களும் அவர்களைப் போன்ற பக்தராகலாம். அது கடினமானதல்ல. நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் பிரபுவிடம் பரமான அன்பு செலுத்தும் தொண்டில் ஈடுபடுவதே. அவ்வளவுதான்.

பாப் : நான் கடவுளைப்பற்றிய அறிவை இன்னும் அதிகமாகப் பெற்று கடவுளின் சந்நிதானத்தை மேலும் அதிகமாக உணர விரும்புகிறேன். காரணம் அதில்லாமல் வாழ்வு அர்த்தமற்றது என்று நான் உணர்கிறேன்.

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். இந்த மனிதப் பிறவியை நீங்கள் தவற விட்டுவிட்டால் அது பேரிழப்பாகும். மனிதனாகப் பிறந்திருப்பது ஜடவாழ்வின் பிடியிலிருந்து விடுபடுவதற்கென உயிர் வாழிக்கு அளிக்கப்பட்டிருக்கும் பெரும் வாய்ப்பாகும்.

பாப் : இந்தக் கேள்விகளைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றதற்கு நான் மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். நீங்கள் மேலும் மேலும் கற்கக் கூடியவர்கள்.

பாப் : ஆனால், எனக்கு இன்னும் சொந்த ஊரில் தொடர்பு கள் உள்ளன. திருமணம்... என் திருமணம் நடைபெற விருக்கிறது.

ஸ்ரீல பிரபுபாதா : அப்படியொன்றுமில்லை. எத்தனையோ திருமணங்கள் நடைபெற்றிருக்கின்றன. (சியாமசுந்தரைக் காட்டி) அவர் மணமானவர். திருமணம் ஒரு தடையல்ல. ஆன்மீக வாழ்வில் நான்கு படிகளிருப்பதைப்பற்றி நான் ஏற்கனவே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். பிரஹ்ம சர்யம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சன்யாஸம், எனவே, பிரஹ்மசர்யத்திற்குப் பிறகு திருமணம் செய்து கொள்ளலாம். அது கட்டாயமுமல்ல. வாழ்வு முழுவதும் நைஷ்டிக பிரஹ்மசாரியாகவும் இருக்கலாம். திருமணத் திற்குப் பிறகு வானப்பிரஸ்தம் வருகிறது. இதில் ஒருவர் குடும்பத்திலிருந்து சிறிது விலகியிருக்கிறார்—அப்போது கணவன் மனைவி தனித் திருக்கிறார்கள். அவர்களிடையே பாலுறவு இருப்பதில்லை. பின்பு அவர் முழுவதுமாகத் துறவு நிலையை அடையும்போது குடும்ப வாழ்விலிருந்து முற்றிலும் விலகி சன்யாஸத்தை மேற்கொள்கிறார்.

பாப் : அந்நிலையில் ஒருவர் தன் மனைவியை முற்றிலும்மறந்து விடுகிறாரா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். மறப்பது ஒன்றும் மிகக் கடினமான தல்ல, மறக்க முயன்றால். காட்சியிலிருந்து விலகல் மனத் திரையிலிருந்து நீங்கல் (எல்லாரும் சிரிக்கிறார்கள்) எனக்கு மனைவி, குழந்தைகள், பேரக்குழந்தைகள் எல்லாம் இருப் பதுபோல். ஆனால், கண் காணதபோது மனமும் காண்ப தில்லை. அவ்வளவே. இவ்வாறாக, வானப்பிரஸ்தம், சன்யாஸம் என்று வேத முறையில் எல்லாம் நேர்த்தியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புனிதமடைதல்

(பிப்ரவரி 29, 1972)

பாப் : நான் கேள்விகள் கேட்க அனுமதித்ததற்கு மிக்கநன்றி

ஸ்ரீல பிரபுபாதா : அதுவே என் வாழ்வின் பணி. எல்லாரும் இறை விஞ்ஞானத்தை அறிய வேண்டும். நாம் பரமபுருஷனோடு ஒத்துழைக்காவிடில் நம் வாழ்வு குழப்பம் நிறைந்ததாகிவிடும். யந்திரத்திலிருந்து விழும் திருகாணி பயனற்றதாகிவிடுகிற உதாரணத்தை நான் பல முறை சொல்லியிருக்கிறேன். ஆனால் அதே திருகாணி மீண்டும் யந்திரத்தில் பொருத்தப்படும் போது அதற்கு மதிப்பு ஏற்பட்டுவிடுகிறது. அதுபோல, நாம் கடவுளின் இணைபிரியா அம்சம் எனவே, கடவுளின்றி நமக்கு என்ன மதிப்பு? எவ்வித மதிப்புமில்லை! கடவுளிடம் இணைந்துள்ள நிலைக்கு நாம் திரும்பவேண்டும். அப்பேதுதான் நமக்கு மதிப்பு ஏற்படும்

பாப் : இன்று மத்தியானம் நான் இங்கு வந்துள்ள ஒருவனைச் சந்தித்தேன். அவன் இங்கு வந்துள்ளதற்கான காரணத்தைக் கேட்டால் உங்களுக்கு வேடிக்கையாக இருக்கும். மாயாப்பூரில் ஹிப்பிகளிருப்பதாக அவன் கேள்விப் பட்டானும்!

ஸ்ரீல பிரபுபாதா : என்ன?

பாப் : மாயாப்பூரில் ஹிப்பிகள் இருப்பதாக அவன் கேள்விப் பட்டானும். நான் அவனுடன் பேசிக்கொண்டிருந்தேன். சில பக்தர்களும் அவனோடு பேசிக்கொண்டிருந்தார்கள். அவன் என்னிடம் சொன்ன சில விஷயங்களுக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை நாளை திரும்பவும் வந்து சில பக்தர்களைச் சந்திப்பதாகச் சொன்னான். அவன் சொன்னதை நான் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அவை குழப்பம் தருபவையாக உள்ளன. அவன் இளைஞனாக இருந்தபோது.

ஸ்ரீல பிரபு பாதா : அவன் இந்தியனா?

பாப் : ஆம். அவன் இந்தியன். இங்குதான் அருகில் வசிக்கிறான். ஆங்கிலம் சுமாராகப் பேசுகிறான். அவன் இளைஞனாக இருந்த போது காளி வழிபாட்டில் தீவிரமாக ஈடுபட்

டிருந்தான். அப்போது வெள்ளம் வந்தது. வெள்ளம் வந்த போது மக்கள் மிகுந்த அவதிக்குள்ளானதைக் கண்டான். இப்போது அவனுக்கு மதத்தில் நம்பிக்கையில்லை. மக்களுக்கிடையே அன்பு ஏற்படச் செய்வதில் தற்போது மகிழ்ச்சி காண்பதாகச் சொன்னான். அவனுக்குக் கடவுளிடமும் மதத்திலும் மீண்டும் ஈடுபாடு ஏற்படும்படியாக அவனிடம் என்ன சொல்லலாமென்று எனக்குத் தோன்றவில்லை. தான் இறந்த பிறகு கடவுளின் ஒரு பகுதியாக ஆகலாம், ஆகாமலும் போகலாம் என்றும், ஆனால் அதைப் பற்றித் தற்போது கவலைப்படப்போவதில்லை. யென்றும் சொல்கிறான். மதங்கள் கூறும் அனுபவங்களை சோதித்துப் பார்த்து விட்டதாகவும், அவை வேலை செய்வதில்லையென்றும் அவன் சொல்கிறான். இதைப் பற்றிநான் கேட்பதற்குக் காரணம், நான் அமெரிக்காவுக்குத் திரும்பிச் செல்லும் போது இப்படிப்பட்ட பலரைச் சந்திக்க நேரிடும். இந்தக் காளி உபாசகரைப் போல் பல மதங்கள், அவர்களுக்குத் தெரிந்த அளவில், பயன் தருவதில்லையென்பதை அவர்கள் காண்கிறார்கள். அவர்கள் ஒப்புக் கொள்ளும்படியாக என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை.

ஸ்ரீல பிரபுபாதா : தற்போது நீங்கள் அந்த முயற்சியில் ஈடுபட வேண்டாம். முதலில் உங்களை நீங்களே நம்பச் செய்வதற்கான முயற்சியை மேற்கொள்ளுங்கள்.

பாப் : அது சரி. பக்தர்களைக் காணும்படியாகவே நான் அவனுக்குச் சொன்னேன். இங்கிருந்து வெளியே சென்று கொண்டிருந்த அவனைச் சாலையில் மீண்டும் சந்தித்த போது, ''திரும்பவும் வாருங்கள்'' என்று சொன்னேன். ஆனால்...

ஸ்ரீல பிரபுபாதா : முதலில் நீங்கள் உறுதி பெற வேண்டும். பின்னரே மற்றவர்களை நம்பச் செய்ய முயற்சிக்க வேண்டும். தன்னுடைய சொந்த வாழ்வில் வெற்றி கண்ட பிறகே ஒருவர் மற்றவர்களின் நலனை விருத்தி செய்ய முடியுமென்பது சைதன்ய மகாப் பிரபுவின் போதனை. ''பாரத-பூமிதே ஹைல மனுஷ்ய ஜன்ம யார ஜன்ம ஸார்த்தக கரி' கர பர- உபகார முதலில் உங்கள்

வாழ்வை நிறைவானதாகச் செய்யுங்கள். பின்பு மற்றவர் களுக்கு உபதேசிக்க முயலுங்கள்.

பாப் : எந்நேரமும் கிருஷ்ண உணர்விலேயே இருக்க வேண் டும். இல்லாவிடில் மகிழ்ச்சியாக இருக்க முடியாதென்று பக்தர்கள் சொல்கிறார்கள். ஆனாலும் நான் சில சமயங் களில் மகிழ்ச்சியாகத்தானிருக்கிறேன்.

ஸ்ரீல பிரபுபாதா : சில சமயங்களில்தான் எப்போது மல்ல.

பாப் : ஆம்.

ஸ்ரீல பிரபுபாதா : ஆனால் கிருஷ்ண உணர்வில் நீங்கள் லயித்து விட்டால் எப்போதுமே மகிழ்ச்சியாயிருப்பீர்கள்.

பாப் : கிருஷ்ண உணர்வில்லாமல் மகிழ்ச்சியாக இருக்க முடியாதென்ற கருத்தை உள்ளடக்கியிருந்தது, அவர்கள் சொன்னது.

ஸ்ரீல பிரபுபாதா : அது உண்மை. உதாரணமாக நிலத்தில் வாழும் விலங்கை நீரில் தூக்கிப் போட்டால் அது மகிழ்ச்சி யாக இருக்க முடியாதல்லவா? மீண்டும் நிலத்துக்கு வந் தால்தான் அது மகிழ்ச்சியடையும். அதுபோலவே, நாம் கிருஷ்ணரின் பிரிக்க முடியாத அம்சம். எனவே கிருஷ்ண ரிடமிருந்து பிரிந்து நாம் மகிழ்ச்சியாகவிருக்க முடியாது. முன்பு நான் கூறிய யந்திரத்தின் பாகம் பற்றிய உதார ணம்—யந்திரத்தை விட்டுப் பிரிந்த பாகத்துக்கு மதிப் பில்லை. மீண்டும் யந்திரத்தில் பொருத்தப்படும் போது அதற்கு மதிப்பேற்படுகிறது. நாம் கிருஷ்ணரின் ஒரு பகுதி நாம் கிருஷ்ணரோடு இணையவேண்டும். உங்கள் உணர்வு மூலம், ''நான் கிருஷ்ணர், கிருஷ்ணர் என்னுடையவர்'' என்று எண்ணின மாத்திரத்திலேயே, கிருஷ்ணரோடு இணைந்து விடலாம் அவ்வளவுதான்.

பாப் : என்ன அது? கிருஷ்ணர்...

ஸ்ரீல பிரபுபாதா : கிருஷ்ணர் என்னுடையவர்.

பாப் : என்னுடையவர்?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். என்னுடையவர். என் கிருஷ்ணர்.

பாப் : ஆ!

ஸ்ரீல பிரபுபாதா : கிருஷ்ணர் என்னுடையவர், கிருஷ்ணர் என்னுடையவர்.

பாப் : ஆம்.

ஸ்ரீல பிரபுபாதா : அதே சமயம், நான் கிருஷ்ணருடையவன். இதுவே நம் உண்மை நிலை.

பாப் : நாம் கிருஷ்ணரின் ஒரு பகுதி.

ஸ்ரீல பிரபு பாதா : ஆம். எல்லாமே கிருஷ்ணரோடு இணைந்தவை. ஏனென்றால், எல்லாமே கிருஷ்ணரின் சக்தியால் தோற்றுவிக்கப்படுகிறது. எல்லாமே கிருஷ்ணரின் சக்தியே.

ஒரு இந்திய கனவான் : ஸ்ரீல பிரபு பாதா அவர்களே. நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். பக்தியில்லாத தொண்டின் நிலை என்ன?

ஸ்ரீல பிரபு பாதா : ஹூம்? அது தொண்டாகாது அது வியாபாரம். (எல்லாரும் சிரிக்கிறார்கள்). உதாரணமாக, இங்கு மாயாப்பூரில் ஒரு காண்ட்ராக்டரை ஒப்பந்தம் செய்திருக்கிறோம். அவர் செய்வது தொண்டல்ல—வியாபாரம், தொழில், இல்லையா? சில விளம்பரங்களில்'' எங்கள் வாடிக்கையாளர்கள் எங்கள் எஜமானர்கள்'' என்று காணப்படுகிறது. ஆனால் இந்தப் பூப்போன்ற வாசங்களுக்குப் பின்னால் வியாபாரம் ஒளிந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால், பணம் தராத எவரும் வடிக்கையாளராகும் தகுதி பெறமுடியாது. ஆனால், தொண்டு என்பது அப்படிப் பட்டதல்ல. தொண்டு-சைதன்ய மகாப்பிரபு கிருஷ்ணரிடம் பிரார்த்திக்கிறார்:—

''யதா ததா வா விததாது லம்படோ
மத்—ப்ராண—நாதஸ் து ஸ ஏவ நாபர:''

''நீங்கள் என்ன செய்தாலும் சரி. அப்போதும் நீங்களே என் வந்தனைக்குரிய பிரபு.'' அதுவே தொண்டு. ''உங்களிடம்மிருந்து பிரதியாக நான் எதுவும் வேண்டுவதில்லை'' அது தொண்டு. பிரதியுபகாரம் எதிர்பார்த்தால் அது வியாபாரம்.

பாப் : கடவுளை அணுகும் உணர்வைப் பெறுவதெப்படி, என்பதைப் பற்றித் தாங்கள் எனக்கு ஆலோசனை கூற வேண்டுமெனத் தங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் அண்மையில் நான் தங்களை விட்டுப் பிரிய வேண்டியதிருக்கிறது. எனவே...

ஸ்ரீல பிரபுபாதா : நீங்கள் புனிதமடைய வேண்டும்.

பாப் : அவ்வப்போது ஆலயத்துக்கு வந்து போகிறேன். போகும்போது, என்னோடு எவ்வளவு எடுத்துச் செல்கிறேன் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை.

ஸ்ரீல பிரபுபாதா : அதற்கு அதிக காலம் தேவைப்படாது. ஆறு மாதங்களுக்குள் முன்னேற்றம் காண்பீர்கள். ஆனால் நீங்கள் நியமனங்களைக் கடைபிடிக்க வேண்டும். அப்போது எல்லாம் சரியாக விடும். இந்த இளைஞர்களும் யுவதிகளும் செய்வதுபோல்.

பாப் : ஆம். தெரிகிறது.

ஸ்ரீல பிரபுபாதா : அவர்களுக்கு சினிமாப் பார்க்க வேண்டுமென்றோ ஹோட்டலுக்குப்போக வேண்டுமென்றோ தோன்றுவதில்லை. அனர்த்தங்களையெல்லாம், அனாவசியமானவற்றையெல்லாம், அவர்கள் கைவிட்டு விட்டார்கள்.

பாப் : நான் நினைக்கிறேன், நான் திரும்பிப் போகும்போது அவர்கள்...

ஸ்ரீல பிரபுபாதா : மனித வாழ்க்கை முழுவதுமே புனிதமடைவதற்காக ஏற்பட்டது.

பாப் : ஆம்.

ஸ்ரீல பிரபுபாதா : ''தவோ திவ்யம் புத்ரகாயேன ஸத்வம
சுத்யேத் யஸ்மாத் ப்ரஹ்ம
ஸௌக்யம் த்வனந்தம்.''

''ஸத்வ'' என்றால் ''உளவாதல்'' (அதாவது வாழ்தல்) என்று பொருள். வாழ்வைப் புனிதப்படுத்திக் கொள்ளாவிடில் உடலை மாற்ற வேண்டி வரும். ஒரு உடலை விட்டு மற்றொன்றுக்குப் போகநேரிடும். சில சமயங்களில் உயர்ந்த நிலைக்கும் சில சமயங்களில் தாழ்ந்த நிலைக்கும் மாற நேரிடும். உதாரணமாக, நோயைக் குணப்படுத்தாவிடில் அது பல வழிகளில் துன்பம் தரலாம். அது போலவே, வாழ்வைப் புனிதப்படுத்தாவிடில் ஒரு உடலிலிருந்து வேறொரு உடலுக்கு இடம் பெயர வேண்டி வரும். இயற்கை சில மிக நுட்பமான விதி முறைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் மிக வசதியான ஒரு உடலையோ அமெரிக்க உடலையோ பெறுவீர்களென்று உறுதியாகச் சொல்ல முடியாது.

எனவே, தன் வாழ்வைப் புனிதப்படுத்திக் கொள்வது மனிதனின் கடமையாகும். வாழ்வைப் புனிதப்படுத்திக் கொண்டாலொழிய இன்பத்தை நாடி ஏங்கிக் கொண்டே யிருப்பீர்கள், ஆனால் நித்யமான இன்பம் கைகூடாது.

பாப் : நியூயார்க்கில் மீண்டும் என் அலுவலை மேற்கொள்ளும் போது நான் புனிதமாவேன் என்று நம்புகிறேன். ஆனால், இங்குள்ள உங்கள் பக்தர்களைப் போன்ற அளவிற்குத் தூய்மையடைவது சாத்தியமில்லையென்பது நிச்சயம். நான் அவ்வாறு ஆகமுடியுமென்று எனக்குத் தோன்ற வில்லை.

ஸ்ரீல பிரபுபாதா : அவர்களைப் போலவே நீங்களும் செயல் பட முடியும். அவர்களும் ஆரம்பத்தில் பரிசுத்தமாக இருக்க வில்லை. இப்போது தூய்மையடைந்து விட்டார் கள். அதுபோலவே நீங்களும் புனிதமடையலாம். உதா ரணமாக, குழந்தைப் பருவத்தில் நீங்கள் கல்வி பெற்றி ருக்க வில்லை. ஆனால் இப்போது கல்வியறிவுடையவரா யிருக்கிறீர்கள்.

பாப் : ஆக நான் செய்ய வேண்டியவைகள் என்ன? நான் திரும்பிப்போனதும்...

ஸ்ரீல பிரபுபாதா : எப்போது திரும்பிப் போகிறீர்கள்?

பாப் : சைபசாவில் என் பணியைத் தொடர்வதற்குப் போகி றேன்.

ஸ்ரீல பிரபுபாதா : சைபசாவில் உங்கள் பணி என்ன?

பாப் : அங்குதான் நான் கல்வி கற்பிக்கிறேன். அங்கேயே வசிக்கிறேன்.

ஸ்ரீல பிரபுபாதா : நீங்கள் கற்பிக்காமலிருப்பது நல்லது. ஏனென்றால் கற்பிக்கப்பட வேண்டியது என்னவென்பது உங்களுக்குத் தெரியாது.

பாப் : (சிரிக்கிறார்) நான் போகப் போகிறேன். எனக்கும் இந்த ஆசிரியர் தொழிலில் அவ்வளவாக விருப்பமில்லை. மே மாதம் அமெரிக்காவுக்கும் போகிறேன். ஆனால் இங் கிருக்கும் வரை இதற்கான ஒப்பந்தப்படி ஆசிரியராகப் பணி செய்ய வேண்டும்,

ஸ்ரீல பிரபுபாதா : உண்மையிலேயே நீங்கள் விரும்பினால் எங்கிருந்தாலும் புனிதமாக வாழலாம். நீங்கள் இருப்பது அமெரிக்காவிலா, இந்தியாவிலா என்பது பொருட்டல்ல. எப்படிப் புனிதமாக வைத்துக் கொள்வது என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். அவ்வளவே.

பாப் ; நியமங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் என்கிறீர்களா?

ஸ்ரீல பிரபு பாதா : ஆம். நானும் அமெரிக்காவுக்கும் போயிருக்கிறேன். ஆனால், அமெரிக்காவிலானாலும் இந்தியாவிலானாலும் நான் ஒரே மனிதன் தான்.

பாப் : தங்களை முதன்முறை சந்தித்ததிலிருந்து நான் தங்களை ஓரளவு பின்பற்ற முயற்சித்து வந்திருக்கிறேன். (1971 நவம்பரில் கல்கத்தாவில் நடைபெற்ற குறுகிய சந்திப்பு).

ஸ்ரீல பிரபு பாதா ; ஹ்-ம் தாராளமாகப் பின்பற்றலாம். ஆனால், உண்மையாக உங்களுக்கு அக்கறையிருந்தால் மிகுந்த கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும்.

பாப் : நல்லது. இப்போது நான் சொல்வது...மிகவும் முட்டாள்தனமாகப் பேசிவிட்டேனென்று நினைக்கிறேன்.

ஸ்ரீல பிரபு பாதா : இல்லையில்லை. முட்டாள்தனமாக இல்லை. பக்குவக் குறைவாக என்று சொல்லலாம்.

பாப் : நல்லது. (சிரிக்கிறார்) பக்குவக்குறைவாக ஆனால், நான் சொல்லிக் கொள்ள விரும்புவது: இங்கேயுள்ள உங்கள் பக்தர்களைக் கண்டு வியக்கிறேன். அவர்களை மிகவும் மதிக்கிறேன். ஆனால் அவர்களில் நானும் ஒருவன் என்ற உணர்வு எனக்கு ஏற்படுவதில்லை. அப்படியிருப்பதற்கான பேராவலும் என்னுள் எழவில்லை. எனக்குத் தோன்றுவதெல்லாம்—நான் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும், கடவுளுக்கு அருகாமையில் வர வேண்டும் என்பதே. அடுத்த முறை எனக்கு இப்போதையதைவிட மேலான வாழ்வு கிடைத்தால் திருப்தியடைவேன்.

ஸ்ரீல பிரபுபாதா : மிக நல்லது.

பாப் : இப்படி எண்ணுவதும் ஜடவாழ்வைப்பற்றிக் கொண்டிருப்பதே யென்று நினைக்கிறேன். என்றாலும்...

ஸ்ரீல பிரபுபாதா : நீங்கள் பக்தர்களின் அடிச்சுவட்டில் செல்லுங்கள். அவ்வளவுதான். உங்கள் விருப்பம் பூர்த்தியாகும். புனிதமடைந்து மகிழ்ச்சியாயிருப்பதற்கு நாங்கள் அவர்களைப் பயிற்றுவிக்கிறோம். அதுவே எங்கள் பணி. எவ்லாரும் இன்புற்றிருக்க வேண்டுமென்று நினைக்கிறோம் ''ஸர்வேஸாகினோ பவந்து'' மகிழ்ச்சியாயிருப்பதெப்படி என்பதை மக்கள் அறியார். இன்ப நிலையை எய்துவதற்கென வகுக்கப்பட்டுள்ள வழியை அவர்கள் பின்பற்றுவதில்லை. பாதையைத் தங்களுக்குத்தானே நிர்ணயித்துக் கொள்கிறார்கள். அதுதான் கஷ்டம். அதனால், ருஷப தேவர் தன் மகன்களுக்கு வழங்கிய அறிவுரையாவது : ''பரத்தை உணர்வதற்கு விரதங்களை மேற்கொண்டால் போதும். இங்குள்ள எல்லாரும் விரதங்களை அனுஷ்டிக்கிறார்கள். இந்தப் பையன் வெளிநாட்டுக்குச் சென்று வர்த்தக நிர்வாகம் கற்றுக்கொள்ள வேண்டியதிருந்தது. இப்போது அவன் நல்ல நிலையிலிருக்கிறான். இது போல், ஒவ்வொருவரும் வருங்கால நன்மைக்காக ஏதாவது விரதத்தை மேற்கொள்ள வேண்டும். நிலையான இன்பத்தைப் பெறுவதற்கான விரதத்தை ஏன் மேற்கொள்ளக் கூடாது? வாழ்வையும் உடலையும் புனிதப்படுத்திக் கொள்ள வேண்டும். ஜடவுடலைப் பெற நேரும்போதெல்லாம் அதை மாற்ற வேண்டியதிருக்கிறது. ஆனால், ஆன்மீகவுடலைப் பெற்றுவிட்டபின் அதை மாற்றும் பிரச்னையில்லை. ஏற்கனவே நீங்கள் ஆன்மீக உடலைப் பெற்றிருக்கிறீர்கள். பௌதிக மாசு படிந்திருப்பதன் காரணமாக பௌதிக உடலை நாம் வளர்க்க நேரிடுகிறது. நான் பலமுறை சொல்லியிருக்கும் உதாரணம் : இரும்பை நெருப்பிலிட்டால் அது நெருப்பைப்போல் ஆகிவிடுகிறதல்லவா?

பாப் : இரும்பை நெருப்பிலிடுவது போலவா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். அது நெருப்பைப்போல் ஆகிவிடுகிறது.

பாப் : ஆம்.

ஸ்ரீல பிரபுபாதா : இரும்பாயிருந்தும் கூட

பாப் : ஆம்.

ஸ்ரீல பிரபுபாதா : அதுபோலவே, எப்போதும் ஆன்மீகத்தில் ஈடுபட்டிருந்தால், உடல் பௌதிக இயல்புடையதாயிருந்தாலும் ஆன்மீகப் பண்போடு இயங்கும். அதே உதாரணம் பழுக்கக் காய்ச்சிய இரும்பை எங்கு தொட்டாலும் சுட்டு விடும். அது நெருப்பின் தன்மையை மேற்கொள்கிறது. அது போலவே, நீங்கள் எப்போதும் கிருஷ்ண உணர்வில் ஈடுபட்டிருந்தால் ஆன்மீக நிலையை அடைவீர்கள். ஆன்மீகத் தன்மையோடு இயங்குவீர்கள். அப்போது பௌதிகத் தேவைகள் எதுவும் எழாது.

பாப் : இதைச் செய்வதெப்படி?

ஸ்ரீல பிரபுபாதா : இந்த முறையில் அவர்கள் (பக்தர்கள்) செயல்படுகிறார்கள். இன்று தீட்சை பெற்றுள்ள ஆறு இளைஞர்களை நீங்கள் கவனித்திருப்பீர்கள். இது மிகச் சுலபமானது. நான்கு நியமங்களை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும். ஜபமாலையைக் கையில் கொண்டு உச்சாடனம் செய்யவேண்டும். இது மிகவும் சுலபம்.

பாப் : நல்லது. ஆனால் நான் பிஹாருக்குச் சென்று என் வழக்கமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டு இந்த நியமங்களையும் அனுஷ்டித்தால்—அவற்றில் சிலவற்றை இப்போது நான் கடைப்பிடிக்கிறேன்; எல்லாவற்றையுமல்ல—

ஸ்ரீல பிரபுபாதா: ''சிலவற்றை'' என்றால்?

பாப் : ''சில?''

ஸ்ரீல பிரபுபாதா : இருப்பதே நான்கு நியமங்கள்தான். ஆக, 'சில' என்றால் மூன்று, இரண்டா?

பாப் : இரண்டு அல்லது மூன்று.

ஸ்ரீல பிரபுபாதர் : அப்படியானால் ஒன்றை மட்டும் விட்டு வைப்பானேன்?

பாப் : இல்லையில்லை. அதாவது, நான் ஒன்றிரண்டைப் பின் பற்றி வருகிறேன், என்று சொல்கிறேன்.

ஸ்ரீல பிரபுபாதா : (சிரிக்கிறார்) மற்ற மூன்றையும் ஏன் விட வேண்டும்? இதில் சிரமமென்ன? நீங்கள் பின் பற்றும் ஒன்று எது?

பாப் : எதை நான் அனுசரிக்கிறேனு? உணவில் அனேகமாக சைவனுகிவிட்டேன். முட்டை மட்டும் சாப்பிடுகிறேன்.

ஸ்ரீல பிரபுபாதா : அப்படியானுல் அதையும் நீங்கள் முழுவது மாகப் பின்பற்றவில்லை.

பாப் : இல்லைதான். போன தடவையிலிருந்து (நவம்பர்) நான் உணவில் சைவனுகி விட்டேன், ஆனுல்—

ஸ்ரீல பிரபுபாதா : உணவில்சைவனுகியிருப்பது ஒரு தகுதியல்ல.

பாப் : அது ஒன்றும் பெரிதில்லைதான்.

ஸ்ரீல பிரபுபாதா : புருக்களும் கூட சைவம்தான். குரங்கும்— மிக அசிங்கமான பிராணி அது.

பாப் : நல்லது—

ஸ்ரீல பிரபுபாதா : குரங்கு உணவில் சைவம். இந்த ஆடை யற்ற சன்யாசி காட்டில் வாழ்கிறது—மிகவும் குறும்புத்தன மானது—

பாப் : நான்—இது ஓரளவுக்கு முன்னேற்றமென்று நான் நினைக்கிறேன். ஏனென்ருல் எனக்கு அது முதலில் கடின மாக விருந்தது. பின்புதான் சுலபமானது

ஸ்ரீல பிரபுபாதா : நீங்கள் எல்லா நியமங்களையும் விடாமல் பின் பற்றலாம், கிருஷ்ண உணர்வை மேற்கொண்டால். இல்லாவிடில் அது சாத்தியமில்லை.

பாப் : அதுதான். நான் பிஹாருக்குச் சென்று நண்பர்க ளோடு மாலையில் உட்கார்ந்திருக்கும்போது,செரசுவிரட்டு வதைத் தவிர வேறு வேலையில்லாமலிருக்கும் போது, அவர்கள் 'கொஞ்சம் கஞ்சா குடிக்கலாமே' என்பார்கள். நானும் 'செய்யலாமே, வேறு என்னதான் வேலை'? என்று அவர்களோடு உட்கார்ந்து மாலைப் பொழுதை அனுபவிக்கி றேன். இப்படிச் செய்தபோது, அதில் மயங்கிப்போய், தினமும் அதைச் செய்து வந்தோம். பின்பு அது கெடுதல் என்று உணர்ந்தபோது நிறுத்திவிட்டோம். என்ருலும் சில சமயத்தில் நாங்கள்—

ஸ்ரீல பிரபுபாதா : நீங்கள் எங்களோடு வாழ வேண்டும், அப்போது உங்கள் நண்பர்கள், 'என்ன, கொஞ்சம் கஞ்சா சாப்பிடுடலாமா? 'என்று கேட்க மாட்டார்கள்.

(பாப் சிரிக்கிருர்). பக்தர்களின் தொடர்பை மேற்கொள் ளுங்கள். எங்களோடு தொடர்பு வைத்துக் கொள்வதற்கு வசதியாக பல மையங்களைத் திறக்க விருக்கிறோம். (மாயாப்பூரில்) நாங்கள் ஏன்இவ்வளவு நிலத்தை எடுத் துக் கொண்டிருக்கிறோம்? உண்மையான அக்கறை கொண் டுள்ளவர்கள் எங்களோடு வசிக்க வருவார்கள். சேர்ந்திருப் பதில் ஒரு வசீகரம் இருக்கிறது. குடிகாரர்களோடு சேர்ந் திருந்தால் குடிகாரனுகலாம்; சாதுக்களைச் சார்ந்திருந்தால் சாதுவாகலாம்.

சியாம சுந்தர் : (ஸ்ரீல பிரபுபாதாவின் செயலளர்) அவர் பம்பாய்க்கு வந்து தங்களோடு தங்கலாம்.

ஸ்ரீல பிரபுபாதா : ஆம் நீங்கள் எங்களோடு பம்பாயில் தங்க லாம். ஆனுல் அவர் கஞ்சா நண்பர்களை விரும்புகிருர். அதுதான் இதிலுள்ள சிரமம்.

பாப் : வேருெரு விஷயம் பற்றிக் கேட்கிறேன். அதிலிருந்து மீண்டும் இதே விஷயத்துக்கு வரக்கூடும். என்னைப் பற்றி நான் அதிகமாக மதிப்பிடுவதாக நினைக்கிறேன். ஆகை யால் கடவுளைப் பற்றி அவ்வளவாகச் சிந்திக்க முடிவ தில்லை. பல நிலைகளில் நான் என்னை வைத்து எண்ணிப் பார்க்கிறேன். மற்ற முக்கியமான விஷயங்களில் கவனத் தை மையப் படுத்துவதற்கு ஏதுவாக நான் என்னைப்பற்றி மறப்பது எப்படி?

ஸ்ரீல பிரபுபாதா : அவர்கள் (பக்தர்கள்) செய்துள்ளபடி.

பாப் : (சிரிக்கிருர்) நான் புனிதமடைவதற்கு வழி நானும் ஒரு பக்தனுவது என்று தாங்கள் சொல்கிறீர்கள் என்றெண்ணு கிறேன்.

ஸ்ரீல பிரபுபாதா : அதற்கு நீங்கள் தயங்குகிறீர்களா?

பாப் : நான்—

ஸ்ரீல பிரபுபாதா : பக்தனுவது அவ்வளவு கஷ்டமா?

பாப் : எனக்கு அது—கஷ்டமே. அந்த விருப்பம் எனக்கு அவ்வளவாக இல்லை. முதலாவதாக, இகலோக வாழ் வைத் தாம் கைவிட்டு விட்டதாகப் பக்தர்கள் சொல்கிருர் கள். இந்த நான்கு நியமங்களைப் பற்றி அவர்கள் எனக்கு

விளக்கியிருக்கிறார்கள். இதிலிருந்து, பௌதிக வாழ்வை விட்டு விலக வேண்டுமென்று தெரிகிறது. அவர்கள்—

ஸ்ரீல பிரபுபாதா : பௌதிக வாழ்வு என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்? (பாப் மௌனமாக இருக்கிறார்) நான் இந்தப் படுக்கையின் மேல் உட்கார்ந்திருக்கிறேன். அது பௌதிக வாழ்வா, ஆன்மீக வாழ்வா?

பாப் : பௌதிக வாழ்வு?

ஸ்ரீல பிரபுபாதா : அப்படியானால் பௌதிக வாழ்வை நாங்கள் கைவிட்டு விட்டதாக எப்படிச் சொல்லலாம்?

பாப் : நான் அர்த்தம் செய்துகொண்டபடி, 'உலக ரீதியிலான பொருள் சார்ந்த லாபங்களைப் பெறும் இச்சை—'

ஸ்ரீல பிரபுபாத : 'பொருள் சார்ந்த' என்றால் என்ன?

பாப் : உலகப் பொருட்களைச் சார்ந்த லாபங்களைப் பெறுவதற்காகச் செயல்படுவது, அப்பொருள்களின் மேல் கொண்டுள்ள பற்றுதலை விடாமலிருப்பது:

ஸ்ரீல பிரபுபாதா : பொருள் சார்ந்த வாழ்வென்றால், புலன்களைத் திருப்தி செய்ய விழைவது. அதுவே பௌதிக வாழ்க்கை. கடவுளுக்குத் தொண்டு செய்ய விழைவது ஆன்மீக வாழ்வு. பௌதிக வாழ்விற்கும் ஆன்மீக வாழ்விற்குமுள்ள வித்தியாசம் இதுதான். தற்போது நாம் புலன்களுக்குச் சேவை செய்ய முனைகிறோம். புலன்களுக்குச் சேவை செய்வதற்குப் பதிலாக கடவுளுக்குச் சேவை செய்யும் போது அது ஆன்மீக வாழ்வாகும். நம்முடைய செயல்களுக்கும் (பக்தர்கள்) மற்றவர்களுடைய செயலுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் என்ன? நாம் எல்லாவற்றையும்—மேஜை, நாற்காலி, படுக்கை, டேப் ரெக்கார்டர், டைப்ரைட்டர், எல்லாவற்றையும் பயன்படுத்துகிறோம்; வித்தியாசமென்னவென்றால், நாம் எல்லாவற்றையும் கிருஷ்ணருக்காக பயன்படுத்துகிறோம்.

பாப் : பக்தர்கள் தாம் கைவிட்டு விட்ட புலன் இன்பங்களுக்கு ஈடாக ஆன்மீக இன்பங்களைப் பெற்றிருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனல்-பாருங்கள்- நான் அப்படி உணர்ந்ததில்லை.

ஸ்ரீல பிரபுபாதா : நீங்கள் கிருஷ்ணரை மகிழ்விக்க விரும்பும்போது ஆன்மீக இன்பங்கள் தோன்றுகின்றன. அதுவே ஆன்மீக இன்பம்; உதாரணமாக, குழந்தைக்கு உண்பிப்பதில் தாய்க்கு மகிழ்ச்சி. அவள் சாப்பிடவில்லை, தன் குழந்தை நன்ருகச் சாப்பிடுவதைக் காண்பதில் அவளுக்கு அதிக ஆனந்தம்.

பாப் : ஹ்ம்-ம்... ஆன்மீக இன்பம்- அப்படியென்ருல், கடவுளை மகிழ்விப்பது.

ஸ்ரீல பிரபுபாதா : ஆன்மீக இன்பமென்ருல் கிருஷ்ணரின் இன்பம்.

பாப் : கிருஷ்ணரை மகிழ்விப்பது.

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். இகலோக இன்பமென்ருல் புலன்களை மகிழ்விப்பது. அவ்வளவுதான். இதுதான் வித்தியாசம். கிருஷ்ணரை மகிழ்விப்பதில் மட்டும் ஈடுபட்டிருக்கும் போது அது ஆன்மீக இன்பம்.

பாப் : இதைப்பற்றிய என் கண்ணேட்டம் ...கடவுளை மகிழ்விப்பது பற்றி நான் நினைத்தது என்னவென்ருல்...

ஸ்ரீல பிரபுபாதா : கடவுளை மகிழ்விப்பதற்கென்று உங்கள் சொந்த வழிமுறைகள் எதையும் நீங்கள் உற்பத்தி செய்ய வேண்டாம். அப்படிச் செய்யாதீர்கள். நான் உங்களை மகிழ்விக்க விரும்புகிறேனென்று வைத்துக் கொள்வோம். அப்போது, ''உங்களுக்கு என்ன சேவை செய்யக்கூடும்'' என்று உங்களைக் கேட்பேன். நாளுக எதையாவது செய்வது உங்களை மகிழ்விக்காது. எனக்குத் தண்ணீர் வேண்டுமென்று வைத்துக் கொள்வோம். ''ஸ்வாமிக்கு ஒரு லோட்டா பால் கொடுத்தால், அதுவும் சூடாகக் கொடுத்தால் அவர் அதிக மகிழ்ச்சியடைவார்'' என்று நீங்களாகக் கற்பனை செய்வது என்னைத் திருப்திப்படுத்தாது. என்னைத் திருப்திப்படுத்த வேண்டுமென்ருல், ''நான் தங்களைத் திருப்திப்படுத்துவதெப்படி?'' என்று நீங்கள் என்னைக் கேட்கவேண்டும். நான் கட்டளையிடுவதை நீங்கள் நிறைவேற்றவேண்டும். அது என்னைத் திருப்திப்படுத்தும்.

பாப் : அப்படியானால், கிருஷ்ணரைத் திருப்திப்படுத்த கிருஷ்ண பக்தராவதே வழி.

ஸ்ரீல பிரபு பாதா : பக்தன் என்பவன் எப்போதும் கிருஷ்ணரை மகிழ்விப்பதிலேயே கவனமாயிருப்பான். அவனுக்கு வேறு வேலை எதுவுமில்லை. அப்படிப்பட்டவனே பக்தன்.

பாப் : ''ஹரே கிருஷ்ண'' மந்திரத்தைக் கீர்த்தனம் செய்வது பற்றி மேலும் சொல்லுங்களேன். நான் இப்போது கொஞ்ச காலமாகத் துதித்து வருகிறேன். ஆனால் ஒழுங்காகச் செய்ததில்லை- இப்படியும் அப்படியுமாகக் கொஞ்சம் அவ்வப்போது செய்திருக்கிறேன். மிக சமீபத்தில்தான் ஜபமாலை கிடைத்தது. உச்சாடனம் செய்யும்போது ஒவ்வொரு சமயம் இதமாக இருக்கிறது. ஒவ்வொரு சமயம் அப்படியிருப்பதேயில்லை. நான் முறைபடிச் செய்யவில்லையோ என்னவோ எனக்குத் தெரியவில்லை.

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். ஒவ்வொன்றிற்கும் ஒரு வழிமுறையிருக்கிறது. அந்த முறையை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

பாப் : கீர்த்தனம் செய்யும்போது ஏற்படும் பேரானந்தத்தைப் பற்றி பக்தர்கள் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

ஸ்ரீல பிரபுபாதா : ஆம். நீங்கள் அதிகமாகப் புனிதமடைய அடைய நீங்கள் பெறும் ஆனந்தமும் அதிகரிக்கிறது. கீர்த்தன முறை புனிதமடையும் முறை.

பக்குவமடைந்த பக்தன்

(பிப்ரவரி 29, 1972-மாலை)

சியாம சுந்தர் : ஸ்ரீல பிரபு பாதா, இன்று மத்தியானம் நாம் விரதங்களை மேற்கொள்வது பற்றிச் சர்ச்சை செய்து கொண்டிருந்தோம்.

ஸ்ரீல பிரபு பாதா : ஹ்-ம்?

சியாம சுந்தர் : நாமாகவே முன்வந்து விரதங்களை மேற்கொள்ளாவிட்டாலும், நாம் விரும்பாவிட்டாலும், சில விரதங்களை அனுஷ்டிக்க வேண்டும்.

ஸ்ரீல பிரபு பாதா : ஆம். ஆன்மீக குருவின் கட்டளைப்படி ஒருவர் செய்ய வேண்டும். உங்களுக்கு விரதம் அனுஷ்டிக்க மனமில்லாமலிருக்கலாம், ஆனால் ஆன்மீக குருவை ஏற்றுக் கொண்ட பிறகு அவருடைய கட்டளைகளை நிறைவேற்றியே தீர வேண்டும். அதுதான் விரதம்.

சியாம சுந்தர் : விரதங்களை அனுஷ்டிக்க விருப்பமில்லையென்றாலும் அனுஷ்டிக்க வேண்டும்.

ஸ்ரீல பிரபு பாதா : ஆம், கட்டாயம். ஆன்மீக குருவிடம் சரணடைந்திருப்பதால் அவருடைய கட்டளையே முடிவானது. உங்களுக்குப் பிடிக்காவிட்டாலும் நீங்கள் செய்தேயாக வேண்டும்.

சியாம சுந்தர் : ஆ!

ஸ்ரீலபிரபு பாதா : ஆனால் உங்களுக்கு விருப்பமில்லை. (சிரிக்கிறார்) யாரும் உண்ணாவிரதம் இருக்க விரும்புவதில்லை. ஆனால் ஆன்மீக குரு ''இன்று உபவாஸ நாள்'' என்று அறிவித்துவிட்டால் என்ன செய்ய முடியும்? (சியாம் சிரிக்கிறார்) ஆன்மீகக் குருவுக்குக் கட்டுப்படுவதென்று தன்னிச்சையாகவே சம்மதித்திருப்பவன் சிஷ்யன். அது விரதம்.

சியாமசுந்தர் : நமது பெற்றோர்கள், மற்றும் பலர் இகலோக வாழ்வில் முற்றிலும் மயங்கியிருப்பதால் கடினமான விர

தங்களையோ, உடல் வலியையோ சகித்துக் கொள்ள விரும்புவதில்லை. அனாலும் அவர்கள் ஒப்புக்கொண்டே யாக வேண்டும். கண்டிப்பை ஏற்கும்படி இயற்கை அவர்களை வற்புறுத்துகிறது.

ஸ்ரீல பிரபு பாதா: அது வலுக் கட்டாயமான விரதம். அது நல்லதல்ல. தானகவே மேற்கொள்ளும் விரதமே நன்மை தரும்.

சியாம சுந்தர்: தானகவே விரதத்தை மேற்கொள்ளாவிட்டால் வற்புறுத்தப்பட வேண்டியதுதான்.

ஸ்ரீல பிரபு பாதா: மனிதனுக்கும் விலங்குகளுக்குமுள்ள வித்தியாசம் அதுதான். விலங்கு கண்டிப்பைத் தானக ஏற்றுக்கொள்ளாது. ஆனல் மனிதன் ஒப்புக் கொள்ள முடியும். மிட்டாய்க் கடையில் இனிய தின்பண்டம் இருப்பதைப் பார்க்கிருன்; தின்ன வேண்டுமென்ற ஆசை பிறக்கிறது. ஆனல், பையில் பணமில்லையென்பதை எண்ணும் போது தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிருன். ஆனல், ஒரு பசு வந்தால் அது உடனேயே தன் வாயை அதில் கொண்டுபோய் நீட்டும். அதைக் கம்பால் அடித்தாலும் பொறுத்துக் கொண்டு, செய்வதைச் செய்யும். எனவே மிருகம் விரதத்தை மேற்கொள்ள முடியாது. நமது விரத முறை நேர்த்தியானது. நாம் ''ஹரே கிருஷ்ண'' என்று துதி பாடுகிறேம், ஆடுகிறேம். கிருஷ்ணர் நமக்கு நேர்த்தியான உணவுப் பொருட்களை அனுப்புகிருர், நாம் உண்கிறேம். அவ்வளவே. இப்படிப்பட்ட விரத முறையை நீங்களெல்லாம் ஏன் ஒப்புக் கொள்ளாமலிருக்கிறீர்கள்? கீர்தனம், நடனம், நல்ல உணவு—?

பாப்: அது என்ன?

ஸ்ரீல பிரபு பாதா: நாங்கள் விரதங்களை மேற்கொள்வதால் கிருஷ்ணர் எங்களுக்கு நேர்த்தியானவற்றை அனுப்புகிருர். கிருஷ்ணத்துவம் பெறும்போது இப்போதைவிட மேலான வசதிகளைப் பெறுகிறீர்கள். அது உண்மை. கடந்த இருபதுஆண்டுகளாக நான் தனித்துவாழ்கிறேன். ஆனல் எனக்கு எந்த கஷ்டமும் ஏற்பட்டதில்லை. சன்யாஸத்தை மேற் கொள்வதற்கு முன்பு நான் டெல்லியில்

வசித்து வந்தேன். எனவே, தனியாயிருந்தும்கூட எவ்வித சிரமும் எனக்கு ஏற்படவில்லை.

சியாம சுந்தர் : ஆன்மீகக் கட்டுப்பாடுகளை ஒப்புக் கொள்ளா விட்டால் இயற்கை பல துன்பங்களை நம் மேல் சுமத்தும்.

ஸ்ரீல பிரபு பாதா : ஆமாம். அது பகவத்கீதையில் சொல்லப் பட்டிருக்கிறது:-

'தைவீ ஹ்யேஷா குணமயீ
மம மாயா துரத்யயா
மாமேவயே ப்ரபத்யன்தே
மாயாமேதாம் தரந்திதே.'

'ஜட இயற்கையின் முக்குணங்களாலான எனது இந்த தெய்வீக சக்தி வெல்லுதற்கரியது. ஆனால் என்னிடம் சரணடைந்தோர் இதை எளிதில் கடக்கலாம்' மாயை எத்தனையோ இடையூறுகளைச் சுமத்துகிறது. ஆனால் கிருஷ்ணரிடம் சரணடைந்தவுடன் எதுவும் திணிக்கப்படுவ தில்லை.

சியாம சுந்தர் : நமது முட்டாள்தனம் காரணமாக "வருங் காலத்தில் நான் மகிழ்ச்சியாயிருப்பேன்" என்று நாம் எக்காலமும் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

ஸ்ரீல பிரபுபாதா : ஆம் அதுதான் மாயை. அது கழுதையைப் போன்றது. கழுதையின் முதுகில் உட்கார்ந்து கொண்டு ஒரு பிடி புல்லைக் கையில் பிடித்துக் கொண்டால், 'சற்று முன்னே நகர்ந்தால் புல்லைத் தின்னலாம்' என்று கழுதை எண்ணும் (பாப் சிரிக்கிறார்) ஆனால் அது எப்போதும் புல்லி லிருந்து ஒரு அடி தூரத்திலேயே இருக்கும். இது கழுதைத் தன்மை. (எல்லாரும் சிரிக்கிறார்கள்) எல்லாரும் இப்படித் தான்; 'சற்று முன்னே போனால் எனக்குக் கிடைக்கும். நான் மகிழ்ச்சியாயிருப்பேன்' என்று எண்ணுகிறார்கள்.

பாப் : தான் உங்களுக்கு மிகவும் நன்றி சொல்லவேண்டும்—

ஸ்ரீல பிரபுபாதா : ஹ்—ம்?

பாப் : நாளை நான் உங்களை விட்டுப் பிரிகிறேன்—

ஸ்ரீல பிரபுபாதா : போவதைப்பற்றி (l-e-a-v-e) போசாதீர் வாழ்வதைப் (l-i-v-e) பற்றிப் பேசுங்கள்.

பாப்: அதைப் பற்றிப் பேசும் கருதி இப்போது எனக்கில்லை. நாளை என் ஊருக்குத் திருப்புவதைப் பற்றி இப்போது எண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆனால்—

ஸ்ரீல பிரபுபாதா: நீங்கள் திரும்பவேண்டாம்.

பாப்: நாளை நான் இங்கே தங்க வேண்டுமா?—இங்கேயா?

ஸ்ரீல பிரபுபாதா: இங்கே இருங்கள்.

பாப்: நீங்கள் சொன்னால் இருக்கிறேன்.

ஸ்ரீல பிரபுபாதா: நீங்கள் மிக நல்ல பையன். (நீண்ட இடைவெளி+அமைதி நிலவுகிறது) மிக எளிய விஷயம் உயிர் வாழிகள் கிருஷ்ணரை மறக்கும்போது அவர்கள் இந்த பௌதிக உலகில் உள்ளார்கள். கிருஷ்ணர் என்றால் அவரின் நாமம், அவரின் உருவம், அவரின் வாசஸ்தலம், அவருடைய விளையாட்டுக்கள்—எல்லாம்.

பாப்: தாங்கள் கடைசியாகச் சொன்னது?

ஸ்ரீல பிரபுபாதா: விளையாட்டுக்கள்.

பாப்: விளையாட்டுக்கள்.

ஸ்ரீல பிரபுபாதா: அரசனைப் பற்றிப் பேசும்போது அவருடைய அரசாங்கம், அரண்மனை, ராணி, மக்கள், செயலாளர்கள், படை பலம்—எல்லாமே அடங்கும்—இல்லையா?

பாப்: ஆம்.

ஸ்ரீல பிரபுபாதா: அது போலவே, கிருஷ்ணர் முழுமுதற் கடவுளாகையால், கிருஷ்ணரை நினைத்தவுடம் கிருஷ்ணரின் எல்லா சக்திகளையும் நினைவு கூறுகிறோம். 'ராதா—கிருஷ்ணா' என்று சொன்னவுடன் அது முழுமையாகிறது. 'ராதா' என்பது கிருஷ்ணரின் முழுசக்தியையும் குறிக்கும். கிருஷ்ணரே புருஷோத்தமன். எனவே, கிருஷ்ணரைப் பற்றிப் பேசும்போது, உயிர் வாழிகளும் அதில் அடங்குகின்றனர், ஏனென்றால் உயிர்வாழிகள் கிருஷ்ணரின் பல்வேறான சக்திகள்—மேம்பட்ட சக்தி. இந்த சக்திகள் மூல சக்திக்குத் தொண்டு செய்யாத போது அது பௌதிக வாழ்வாகிறது. உலகம் முழுவதுமே கிருஷ்ண சேவையில் ஈடுபட்டிருக்கிறதென்று சொல்வதற்கில்லை. அவர்கள் கிருஷ்ணருக்கு வேறொரு வகையில் தொண்டாற்றுகிறார்

கள். கீழ்ப்படியாத குடிமக்கள் அரசாங்கத்துக்கு மறைமுகமாக சேவை செய்வது போல் அவர்கள் கிருஷ்ணருக்கு மறைமுகமாகச் சேவை செய்கிறார்கள். கைதிகள் அரசின் சட்டங்களைப் புறக்கணிப்பதற்குத்தண்டனையாக சிறைக்கு வருகிறார்கள். சிறையில் அவர்கள் அரசின்சட்டங்களுக்குக் கீழ்ப்படியும்படி வற்புறுத்தப் படுகிறார்கள். அதுபோலவே, இங்குள்ள உயிர்வாழிகள் அறியாமை காரணமாகவோ, அல்லது தன்னிச்சையாகவோ கடவுள்—பற்று இல்லாமலிருக்கிறார்கள். கடவுளின் ஆளுமையை ஒப்புக்கொள்ள விருப்பமில்லாதவர்களாயிருக்கிறார்கள். அது அசுரத்தனம். எனவே நாம் அவர்களைத் தம் பூர்வ நிலைக்குக் கொண்டு வர முயற்சிக்கிறோம். அதுவே கிருஷ்ண உணர்வு இயக்கம்.

பாப் : பக்தர்களிடம் பேசிக்கொண்டிருந்த ஒரு விஷயத்தைப் பற்றி நான் தங்களைக் கேட்க விரும்புறேன்—அது மருந்து சாப்பிடுவது பற்றியது. இன்று நான் சில பக்தர்களோடு நதிக்குச் சென்று கொண்டிருந்தேன். எனக்கு ஜல தோஷம் பிடித்திருப்பதால் நான் தண்ணீருக்குள் போகக் கூடாது. சிலர், கங்கையாயிருப்பதால் நான் இறங்கலாமென்று எண்ணினார்கள். ஜலதோஷமிருப்பதால் கூடாதென்று சிலர் சொன்னார்கள். நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். எனக்குப் புரியவில்லை. முன் ஜன்மத்தில் செய்த தீய செயல்களின் விளைவாக நமக்கு நோய் வருகிறதா?

ஸ்ரீல பிரபுபாதா : ஆம் உண்மைதான்.

பாப் : ஆனால் ஒருவர்—

ஸ்ரீல பிரபுபாதா : நாம் அனுபவிக்கும் எந்தத்துன்பமும் முற்பிறவியில் நாம் செய்த தீய செயல்களின் விளைவு.

பாப் : ஆனால், கர்ம வினைகளின் பாதிப்பிலிருந்து ஒருவர் விடுபடும்போது?

ஸ்ரீல பிரபுபாதா : அப்போது?

பாப் : அப்போதுகூட அவருக்கு நோய் வருமா?

ஸ்ரீல பிரபுபாதா : இல்லை. அப்படியே நோய் வந்தாலும் அது தாற்காலிகமானதே. உதாரணமாக, இந்த விசிறி சுற்றிக் கொண்டிருக்கிறது. மின் சக்தியைத் துண்டித்துவிட்டால்

அப்போதுகூட சற்று நேரத்துக்கு விசிறி சுற்றிக்கொண் டிருக்கும். அந்த இயக்கம் மின் சக்தியால் ஏற்படுவதல்ல. அது சக்தி—இதை விஞ்ஞான பரிபாலஷையில் எப்படிச் சொல்வது?

சியாம சுந்தர் : Momentum (உத்வேகம்)

ஸ்ரீல பிரபுபாதா : Momentum ஆனல் அது நின்றவுடன் இயக்கமிருக்காது. அதுபோலவே, கிருஷ்ணரிடம் சரண டைந்திருக்கும் பக்தன் ஜட இயல்பின் காரணமாகத் துன்பம் அனுபவித்தாலும் அது தாற்காலிகமானதே. எனவே பௌதிகத்துன்பம் எதையும் அவன் துன்பமாகக் கருதுவதில்லே. கிருஷ்ணரின், கடவுளின் கருணையாக ஏற்றுக்கொள்கிருன்.

பாப் : பக்குவமடைந்த ஆத்மா, பக்தன், ஒரு புனிதமான பக்தன்—

ஸ்ரீல பிரபுபாதா : பக்குவமடைந்த ஆத்மா இருபத்து நான்கு மணி நேரமும் கிருஷ்ண உணர்வில் திளைத்திருக்கிருன். அது பக்குவ நிலே, பரமான நிலே. பக்குவ நிலேயென்ருல் தனது ஆதியான உணர்வில் ஒன்றியிருத்தல். அதுவே நிறைவு. அது பகவத்கீதையில் கூறப்பட்டிருக்கிறது.

'ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத:
ஸம்ஸித்தம் லபதே நர:'

'தனது செயலின் தன்மைகளேப் பின்பற்றுவதால் ஒவ் வொரு மனிதனும் பக்குவமானவனுக ஆகலாம்.' முழுமை யான பக்குவம். 'ஸம்ஸித்தி' 'ஸித்தி' என்ருல் பக்குவம். அது பிரஹ்மனே உணர்வது. ஆன்மாவை உணர்வது 'ஸம் ஸித்தி' என்ருல் பக்தி—பிரஹ்மனே உணர்ந்தபின் வருவது.

பாப் : கடைசியாகத் தாங்கள் சொன்னதை மீண்டும் சொல்லலாமா?

ஸ்ரீல பிரபுபாதா : ஸம்ஸித்தி.

பாப் : ஆம்

ஸ்ரீல பிரபுபாதா : 'ஸித்தி' என்ருல் பக்குவம். வீடு திரும்பும் ஒருவன், அதாவது கடவுளே மீண்டும் சென்றடைபவன்,

முழுமையான பக்குவத்தை அடைந்திருக்கிருன் என்று பகவத்கீதை கூறுகிறது. எனவே, "நான் என் உடலில்லை, ஆத்மா" என்று உணரும்போது பக்குவம் வருகிறது. "ப்ரஹ்ம-பூதா" - அதாவது பிரஹ்மனை அறிதல் அது பக்குவம் பிரஹ்ம உணர்வுக்குப் பின், ஒருவன் பக்தியில் ஈடுபடும்போது, ஸம்சித்தி ஏற்படுகிறது. எனவே, ஏற்கனவே ஒருவன் பக்தித்தொண்டில் ஈடுபட்டிருக்கிருனென்ருல், பிரஹ்ம உணர்வு அவனுக்கு ஏற்பட்டுள்ளது என்று கொள்ளவேண்டும். அது "ஸம்ஸித்தி" என்று கூறப்படுகிறது.

பாப் : நான் தாழ்மையுடன் ஒன்று கேட்க விரும்புகிறேன். தங்களுக்கு நோய் நொடி வந்ததுண்டா?

ஸ்ரீல பிரபு பாதா : ஹ்-ம்?

பாப் : தாங்கள் நோய் நொடிகளை அனுபவித்திருக்கிறீர்களா?

ஸ்ரீல பிரபு பாதா : ஆம்.

பாப் : தங்கள் முந்தைய கர்மாவின் விளைவிஞல் ஏற்பட்டதா?

ஸ்ரீல பிரபு பாதா : ஆம்.

பாப் : ஆக, இந்த பௌதிக உலகில் யாரும் கர்மத்தின்விளைவுகளிலிருந்து முற்றிலுமாகத் தப்பிக்க முடியாது?

ஸ்ரீல பிரபு பாதா : தப்பிக்கமுடியும். பக்தனைக் கர்மாக்கள் பாதிப்பதில்லை. கர்மாவின் பிரதி விளைவு அவனுக்கு ஏற்படுவதில்லை.

பாப் : ஆனால், தாங்கள் பக்தர்களில் மிகச் சிறந்தவராகயிருக்க வேண்டும்.

ஸ்ரீல பிரபு பாதா : இல்லையில்லை. நான் என்னைப் பக்தர்களில் மிகச் சிறந்தவனாகக் கருதவில்லை. நான் எல்லாரிலும் தாழ்ந்தவன்.

பாப் : இல்லவேயில்லை!

ஸ்ரீல பிரபு பாதா : நீங்கள்தான் மிகச் சிறந்த பக்தர்.

பாப் : (சிரிக்கிருர்) இல்லவேயில்லை. ஆனுல் -தாங்கள் சொல்வது எதுவும்- எப்போதும் சரியாகவே தோன்றுகிறது.

ஸ்ரீல பிரபு : ஆம்.

பாப் : அப்படியானால் தாங்கள் பக்தர்களில் மிகச் சிறந்தவர் களே

ஸ்ரீல பிரபுபாதா : விஷயமென்னவென்றால், மிகச் சிறந்த பக்தன் பிறருக்கு உபதேசிக்கும்போது இரண்டாம் தர பக்தன் நிலைக்கு வந்துவிடுகிறான்.

பாப் : மிகச் சிறந்தவன் என்ன செய்ய வேண்டும்?

ஸ்ரீல பிரபு பாதா : மிகச் சிறந்த பக்தன் உபதேசம் செய்வ தில்லை.

பாப் : அலன் செய்வதென்ன?

ஸ்ரீல பிரபு பாதா : உபதேசம் செய்வதற்கான அவசியமேற் படாமல் அவன் பார்த்துக் கொள்கிறான். அவன் கண் களுக்கு ஒவ்வொருவரும் பக்தன் (பாப் மனம் விட்டு சிரிக்கிறார்)

அவனுக்கு யாரும் பக்தரல்லாதவர்களாகத் தோன்றுவ் தில்லை. அவன் 'உத்தம அதிகாரி' என்று அழைக்கப் படுகிறான். நான் உபதேசம் செய்வதால், என்னை எப்படி மிகச் சிறந்த பக்தனென்று சொல்லிக் கொள்ளமுடியும்? ராதா ராணியைப் போல . அவள் யாரையுமே பக்தனல்லா தவனாகக் காண்பதில்லை. எனவே நாம் ராதா ராணியை அணுகப் பிரியப்படுகிறோம்.

பாப் : அது யார்?

ஸ்ரீல பிரபு பாதா : ராதா ராணி கிருஷ்ணரின் துணைவி.

பாப் : ஆ!

ஸ்ரீல பிரபு பாதா: ராதா ராணியை யாராவது அணுகினால் அவள் கிருஷ்ணரிடம் சிபாரிசு செய்கிறாள். ' இவன் மிகச் சிறந்த பக்தன். என்னைவிடச் சிறந்தவன்.' கிருஷ்ணரால் அப்போது மறுக்கமுடியாது. அப்படி பட்டவன் மிகச்

சிறந்த பக்தன். ஆனால் எல்லோரும் "நான் மிகச் சிறந்த பக்தன்" என்று சொல்லிக் கொள்ள முடியாது:

"ஈச்வரே தத்-அதீனேஷு
பாலிசேஷு த்விஷத்ஸு ச

ப்ரேம மைத்ரீ - க்ருபோபேக்ஷா
ய : கரோதி ஸ மத்யம:"

(பாக்வதம். 11-2-46)

கடவுளிடம் சிலர் பொறாமை கொண்டிருப்பதாக இரண்டாம் தர பக்தன் எண்ணுகிறான். ஆனால் மிகச் சிறந்த பக்தனின் பார்வை அதுவல்ல. மிகச் சிறந்த பக்தனின் பார்வையில் "யாரும் கடவுளிடம் அசூயை கொண்டிருப்பதில்லை. எல்லோரும் என்னை விடச் சிறந்தவர்" சைதன்ய சரித்ரா்மிருதத்தின் ஆசிரியர் கிருஷ்ணராஜ் கவிராயரைப் போல் "நான் மலத்திலுள்ள புழுவினும் தாழ்ந்தவன்."

பாப் : யார் இப்படிச் சொல்பவர்?

ஸ்ரீல பிரபு பாதா : கிருஷ்ணதாசக் கவிராஜர். "சைதன்ய சரித்ராம்ருதம்" எழுதியவர். அவர் ஒப்புக்காக அப்படிச் சொல்லவில்லை. உண்மையிலேயே அவர் அப்படி உணர்கிறார். "நான் எல்லாவற்றிலும் தாழ்ந்தவன். மற்றெல்லாரும் மிகச் சிறந்தவர்கள். எல்லோரும் கிருஷ்ண சேவையில் ஈடுபட்டவர்கள். நான் அப்படியல்ல." சைதன்ய மகாப் பிரபு சொன்னார்: "ஓ எனக்குக் கிருஷ்ணரிடம் இம்மியளவும் பக்தியில்லை. வெறும் ஆடம்பரத்திற்காக நான் கூச்சலிடுகிறேன். கிருஷ்ணரின் பக்தனாகவிருந்தால் எப்போதோ மடிந்திருப்பேன். ஆனால் நான் உயிர் வாழ்கிறேன் - நான் கிருஷ்ணரை நேசிப்பவனல்ல என்பதற்கு அதுவே பிரமாணம்" சிறந்த பக்தனின் பார்வை இவ்விதமானது. கிருஷ்ணரிடம் மிகவும் ஒன்றியிருப்பதால், "எல்லாம் நடைபெறுகின்றன. ஆனால் நான் எல்லாவற்றிலும் கடையவன். எனவே என்னால் கடவுளைக்

காண முடியாது" என்று அவர் சொல்கிறார். அதுவே மிகச் சிறந்த பக்தனின் இலக்கணம்.

பாப் : ஆக, ஒரு பக்தன் எல்லாருடைய முக்திக்காகவும் பாடுபட வேண்டும்?

ஸ்ரீல பிரபு பாதா : ஆம். பக்தன் அதிகாரம் பெற்ற குருவின் கட்டளைப்படிச் செயல்பட வேண்டும். மிகச்சிறந்த பக்தனை மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவதென்பது கூடாது.

பாப் : மன்னிக்கவும்?

ஸ்ரீல பிரபு பாதா: மிகச் சிறந்த பக்தனை முன் மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவது கூடாது.

பாப் : மாதிரியாகக் கொள்வது. ஓ! சரி.

சியாம சுந்தர் : தங்கள் பக்தர்களின் தகாத செயல்களின் காரணமாகத் தாங்கள் சில சமயங்களில் நோய்வாய்ப் படுவதாக ஒரு முறை கூறியிருக்கீறீர்கள். அப்படி நோய் வாய்பட்டதுண்டா? அதன் காரணமாக?

ஸ்ரீல பிரபு பாதா : ஆம். கிருஷ்ணர் சொல்கிறார் "அஹம் த்வாம் ஸர்வ-பாபேப் யோ மோக்ஷயிஷ்யாமி மாஷுச: "நான் உன்னை எல்லாப் பாவங்களின் விளைவுகளினின்றும் விடுவிக்கிறேன். பயப்படாதே." எல்லோருடைய பாபங்களையும் கைமேற்கொண்டு உடனேயே சரிசெய்து விடுமளவிற்கு வல்லமை படைத்தவர் கிருஷ்ணர். ஒரு உயிர் வாழி கிருஷ்ணருக்காக இதைச் செய்யும்போது அவரும் பக்தர்களின் பாவச் செயல்களுக்காகப் பொறுப்பேற்கிறார். எனவே குருவாக ஆவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. புரிகிறதா? எல்லா விஷயத்தையும் அவர் ஏற்று ஜீரணிக்க வேண்டியிருக்கிறது. எனவே, கிருஷ்ணரல்லவாகையால் குரு சில சமயங்களில் இன்னல்களுக் குள்ளாக நேரிடுகிறது. எனவேதான் சைதன்ய மகாப் பிரபு "எண்ணிக்கையில் அதிகமாக சிஷ்யர்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம்" என்று தடை செய்திருக்

கிறார்கள். ஆனால் நமது கொள்கைகளை பரப்புவதற்காக நாம் பல சிஷ்யர்களை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது- அதனால் நமக்கு இன்னல்கள் ஏற்பட்டாலும் சரி. அது உண்மை. சிஷ்யர்களின் பாவச் செயல்களுக்காக குரு பொறுப்பேற்க வேண்டியதிருக்கிறது. எனவே, எல்லாப் பாவங்களையும் தன்னில் ஏற்றுக் கொள்ளும் திறன் இருந்தாலொழிய அதிகமான சிஷ்யர்களை ஏற்றுக் கொள்வது அபாயகரமானது.

வான்சா - கல்ப - தருப்யாச் ச
க்ருபா - ஸிந்துப்ய ஏவச
பதிதானாம் பாவனேப்யோ
வைஷ்ணவேப்யோ நமோநம:

("பிரபுவின் வைஷ்ணவ பக்தர்கள் எல்லாரையும் பணி கிறேன். அவர்கள் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் கல்ப விருட்சம் போன்றவர்கள். நிலை தவறும் கட்டுபட்ட ஆத்மாக்களிடம் அவர்கள் மிகுந்த கருணைகொண்டவர் கள்." நிலையினின்று இழிந்த எல்லா ஆத்மாக்களுக்கும் அவர் பொறுப்பேற்கிறார். இக்கருத்து பைபிளிலும் காண ப்படுகிறது. ஏசு கிறிஸ்து எல்லாருடைய பாவங்களின் விளைவுகளையும் தன்மேல் ஏற்றுக் கொண்டு தன் உயிரை அர்ப்பணித்தார். அது குருவின் பொறுப்பாகிறது ஏனென்றால் கிருஷ்ணர் கிருஷ்ணரே. அவர் "அபாப வித்தர்" பாவங்களின் விளைவுகள் அவரை பாதிக்கா. ஆனால் உயிர்வாழி சில சமயங்களில் அவைகளின் தாக்குதலுக்கு ஆளாக நேரிடுகிறது. ஏனென்றால் அவன் மிகச் சிறியவன். பெரு நெருப்புக்கும் சிறு நெருப் பிற்குமுள்ள வித்தியாசம். சிறிய நெருப்பில் பெரிய பொருளைப் போட்டால் நெருப்பே அணைந்து விடும். ஆனால், பெரிய நெருப்பில் எதை போட்டாலும் சாம்ப லாகிவிடும். பெரிய நெருப்பு எதையும் விழுங்கிவிடும்.

பாப் : கிறிஸ்து அனுபவித்த வேதனை அப்படிப்பட்டதா?

ஸ்ரீல பிரபு பாதா : ம்--ம்?

பாப் : கிறிஸ்து அனுபவித்த துன்பம்...

ஸ்ரீல பிரபு பாதா : அதைப் பற்றி நான் ஏற்கனவே விளக்கி விட்டேன். எல்லோருடைய பாவங்களையும் அவர் தன் மேல் ஏற்றுக்கொண்டார்.

எனவே அவர் துன்பத்துக்குள்ளானார்.

பாப் : புரிகிறது. ஸ்ரீலபிரபுபாதா: மக்களின் பாவங்களின் விளைவுகளையெல்லாம் தன்மேல் ஏற்றுக்கொண்டு தன் உயிரை தியாகம் செய்ததாக கிறிஸ்து சொன்னார். இது பைபிளில் இருக்கிறது. ஆனால் இந்தக் கிறிஸ்துவ மக்கள் கிறிஸ்து துன்புறுவதை சட்டபூர்வமாக்கிவிட்டு எல்லா அபத்தங்களையும் செய்கிறார்கள். (பாப் சிறிதாகச் சிரிக்கிறார்) அவ்வளவு பெரிய மூடர்களாக இருக்கிறார் கள்! தாம் தொடர்ந்து அபத்தங்கள் செய்வதற்கு வசதி யாகக் கிறிஸ்துவைத் தங்களின் தீய செயல்களுக்காகத் துன்புறுத்துவதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ளச் செய் திருக்கிறார்கள். அது தான் அவர்களின் மதம், கிறிஸ்து மிகுந்த பெருந்தன்மையோடு அவர்களின் பாவங்களை யெல்லாம் ஏற்று அதற்காகத் துன்புற்றார். ஆனாலும் அவருடைய பெருந்தன்மை அவர்களை பாவம் செய்வதை நிறுத்த தூண்டவில்லை. அந்த அளவு அறிவு அவர் களுக்கு வரவில்லை. அதை அவர்கள் விளையாட்டாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். "ஏசுகிறிஸ்து துன்பப் படட்டும். நாம் எல்லா அபத்தங்களையும் செய்யலாம்" என்கிறார்கள். இல்லையா?

பாப்: அப்படித்தானிருக்கிறது.

ஸ்ரீலபிரபு பாதா: அவர்கள் வெட்க்கப்படவேண்டும். "ஏசுபெரு மான் நமக்காகத் துன்பப்பட்டார், ஆனாலும் நாம் பாவ காரியங்களைத் தொடர்ந்து செய்கிறோம்" என்றெண்ணி வெட்கப்படவேண்டும். "கொலை செய்யாதிருப்பாயாக" என்று அவர் சொன்னார். ஆனால் அவர்கள் கொலை செய்து கொண்டுதானிருக்கிறார்கள். "ஏசுபெருமான் நம்மை

மன்னித்து நமது பாவங்களை ஏற்றுக் கொள்வார்' என்று எண்ணிக்கொள்கிறார்கள். இப்படியே நடந்துவருகிறது.

நாம் விழிப்பாயிருக்க வேண்டும். "என்து பாவங் களுக்காக எனது குருநாதர் துன்புற நேரிடும். எனவே நான் இம்மியளவும் பாவமும் செய்யமாட்டேன்" என்று எண்ணவேண்டும். அது சிஷ்யனின் கடமை. தீட்சை பெற்ற பிறகு எல்லாபாவங்களின் விளைவுகளும் அற்றுப் போகின்றன. மேலும் அவன் பாவகாரியங்களைச் செய் வதால் அவனுடைய குருநாதர் துன்புற வேண்டியிருக்கும். "என்னுடைய பாவச் செயல்களுக்காக என் குருநாதர் துன்புறுவார்." என்பதை ஒவ்வொரு சிஷ்யனும் அனு தாபத்தோடு நினைவில் கொள்ளவேண்டும். குரு நோய் வாய்பட்டால் அது மற்றவர்களுடைய பாவச் செயல் களின் விளைவு. "அதிகமான சிஷ்யர்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம்" (என்றார் ஸ்ரீசைதன்யர்). ஆனாலும் நம்முடைய கொள்கைகளைப் பரப்புவதற்காக நாம் அவ்வாறு செய் கிறோம். பரவாயில்லை. நாம் துன்பமடையலாம். எனினும் நாம் சிஷ்யர்களை ஏற்றுக்கொள்வோம். உங்கள் கேள்வி, நான் துன்பமடைவது எனது முந்தியத் தவறு களாலா என்பது தானே? அது எனது தவறுதான். சில அபத்தமான மாணவர்களை ஏற்றுக்கொண்டது என் தவறு தான்.

பாப்: இப்படியும் சில வேளைகளில் நேர்ந்து விடுகிறதா?.

ஸ்ரீலபிரபு பாதா: ஆம். இப்படி ஆவது நிச்சயம்; ஏனென்றால் நாம் பலரை ஏற்றுக்கொள்கிறோம். விழிப்பாக இருக்க வேண்டியது சிஷ்யர்களின் கடமை. "என் குருநாதர் என் னைக் கறையேற்றியிருக்கிறார். நான் மீண்டும் அவரைத் துன்பத்துக்காளாக்கக் கூடாது" என்று எண்ண வேண்டும். குருவுக்கு துன்பம் ஏற்படும்போது கிருஷ்ணர் அவரைக் காப்பாற்றுகிறார். "இழிவடைந்த ஒரு மனிதனைக் கடைத் தேறச் செய்வதற்காக குரு அவ்வளவு பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்." என்று கிருஷ்ணர் எண்ணுகிறார்.

எனவே கிருஷ்ணர் அங்கு (குருவைக் காப்பாற்ற) வருகிறார்.

"கௌந்தேய ப்ரதிஜானிஹி
நமே பக்த: ப்ரணச்யதி."

("குந்தியின் மைந்தனே! என் பக்தன் என்றும் அழிவதில்லை என்பதை தைரியமாக அறிவிப்பாயாக.") எனவே, கிருஷ்ணர் இருக்கும் தைரியத்தில் குருநாதர் ஆபத்தை மேற்கொள்கிறார்.

பாப்: தங்கள் அவதி...

ஸ்ரீலபிரபு பாதா: இல்லை. அது கர்மாவினால் வருவதல்ல. சிலவேளைகளில் சிரமமேற்படலாம். அது "நமது பாவச் செயல்களினால் குருநாதர் அவதிப் படுகிறார்" என்று சிஷ்யர்கள் உணர்வதற்காக ஏற்படுவது.

பாப்: இப்போது உங்களைப் பார்த்தால் நலமாகவிருப்பதாகவே தோன்றுகிறது.

ஸ்ரீலபிரபு பாதா: நான் எப்போதுமே நலமாயிருக்கிறேன். அவதிப்பட நேரிட்டாலும் கிருஷ்ணர் என்னைக் காப்பாற்றுவார் - என்று நான் அறிவேன். ஆனால் இந்தத் துன்பங்கள் என் சொந்தத் தவறுகளின் விளைவுகளல்ல.

பாப்: நானிருக்கும் ஊரில் தண்ணீரில் நோய் தரக்கூடிய அசுத்தமிருப்பதால் நான் கொதிக்கவைக்கப்பட்ட நீரையே குடிக்கிறேன். இப்போது, நான் நல்லவனாயிருப்பதால் என்னை நோய் அணுகாதென்றிருக்கும்போது ஏன் கொதிக்கவைக்கப்பட்ட நீரைக் குடிக்க வேண்டும்? எந்த நீரையும் குடிக்கலாமே? என் நடத்தை சரியாகவிருக்கவில்லையென்றால் எப்படியும் எனக்கு வியாதி வரத்தான் செய்யும்.

ஸ்ரீலபிரபு பாதா: நீங்கள் ஜடவுலகிலிருக்கும் வரை பௌதீக விதிகளைப் புறக்கணிக்க முடியாது. நீங்கள் காட்டில் புலியை சந்திக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அது உங்களைத் தாக்குமென்பது தெரிந்த விஷயம். எனவே

நீங்கள் அதனிடம் வலிய போய் தாக்கப்படவேண்டுமா? பௌதீக உடல் இருக்கும் வரை பக்தன் பௌதீக விதிகளைப் புறக்கணித்து ஆபத்தைத் தேடிக்கொள்ளவேண்டுமென்பதல்ல. பௌதீக விதிகளுக்குச் சவால்விட வேண்டுமென்பதல்ல. "நான் பக்தனாகையால் எல்லாவற்றிற்கும் சவால் விடலாமென்பதல்ல. அது மடமை.

"அநாஸக்தஸ்ய விஷயான்
யதார்ஹம் உபயஞ்ஜத:
நிர்பந்த: கிருஷ்ண ஸம்பந்தே
யுக்தம் வைராக்யம் உச்யதே."

வாழ்வின் தேவைகளைப் பற்றுதலின்றி ஒப்புக் கொள்ளும்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் கொதிக்கப்பட்ட நீரை அருந்துவான். ஆனால் கொதித்த நீர் கிடைக்காவிட்டால் தண்ணீரை குடிக்காமலாயிருப்பான்? அது கிடைக்காவிட்டால் சாதாரண நீரைக் குடிப்பான். நாம் கிருஷ்ணப் பிரசாதத்தைச் சாப்பிடுகிறோம். ஆனால் பிரயாணம் செய்யும் போது விடுதிகளில் கிடைப்பதை உண்ண வேண்டியதிருக்கிறது. பக்தனாகவிருப்பதால் "நான் விடுதியில் எதையும் உண்ணமாட்டேன்; பட்டினியாகவிருப்பேன்." என்று எண்ணவேண்டியதில்லை. நான் பட்டினியாக இருப்பதால் பலவீனமடைவேன். பின்பு பிரசங்கம் செய்யமுடியாமல் போய்விடும்.

பாப்: அதில் (விடுதியில் உண்பதில்) பக்தன் தன் தனித் தன்மையை ஓரளவு இழக்கிறானா?

ஸ்ரீல பிரபு பாதா: இல்லை. கிருஷ்ணரை மகிழ்விப்பதற்கான முழு தனித்தன்மையையும் அவன் உடையவனாக விருக்கிறான். "என்னிடம் சரணடைவாயாக" அன்று கிருஷ்ணர் சொல்கிறார். அவன் தன்னிச்சையாகவே அவரிடம் சரணடைகிறான். அதனால் அவனின் தனித்தன்மை போய் விட்டதென்பதல்ல. அவன் தன் தனித்தன்மையை தன்னிடமே வைத்துக் கொண்டிருக்கிறான். அர்ஜுனனைப்

போல். ஆரம்பத்தில் அர்ஜுனன் போர் செய்ய மறுத்தான்: தன் தனித்தன்மை காரணமாக. ஆனால் கிருஷ்ணரைக் குருவாக ஏற்றுக்கொண்டபோது அவன் அவரின் சிஷ்ய னானான். பின்னர் கிருஷ்ணரின் கட்டளையெல்லாம் ஒப் புக் கொண்டான். அதனால் அவன் தன் தனித்தன்மையை இழந்ததாகாது. அவன் தன்னிச்சையாகவே ஒப்புக்கொண் டான். "கிருஷ்ணர் என்ன சோன்னாலும் செய்வேன்" என்னுடைய சிஷ்யர்களையெல்லாம் போல- அவர்கள் தங்கள் தனித்தன்மையை இழந்துவிடவில்லை. அதை ஒப் படைத்துவிட்டார்கள். அது அவசியமாகிறது. உதாரண மாக, ஒருவன் பாலுறவு கொள்வதில்லை என்று வைத்துக் கொள்வோம் அதனால் அவன் ஆண்மையற்றவன் என்ப தல்ல. அவன் விரும்பினால் ஆயிரம் முறை உறவு கொள்ளலாம். ஆனால் தன்னிச்சையாக அதை ஒதுக்கி விட்டான். "பரம் தருஷ்ட்வா நிவர்த்ததே." அவனுடைய ருசியின் தன்மை உயர்வடைகிறது. சிலசமயம் நாம் உப வாசமிருக்கிறோம். அதனால் நாம் நோயுற்றிருக்கிறேமென் பதல்ல. நாம்தன்னிச்சையாக பட்டினி கிடக்கிறோம். அதனால் எனக்கு பசியெடுப்பதில்லையென்றோ அல்லது சாப்பிட முடியாதென்றோ பொருளல்ல. தன்னிச்சையாக உணவைத் தவிர்க்கிறோம்.

பாப்: சரணடையும் பக்தன் தன் தனிப்பட்ட ருசியைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறானா?

ஸ்ரீல பிரபு பாதா: ஆம், முழுவதுமாக.

பாப்: பலவற்றில் அவனுக்குள்ள ருசி?

ஸ்ரீலபிரபு பாதா: ஹ்ம்-ம்?

பாப்: அவன் தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறானா?

ஸ்ரீலபிரபு பாதா: ஆம். அவன் எல்லாவற்றையும் தக்கவைத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் கிருஷ்ணருக்கு முதலிடம் கொடுக்கிறான். எனக்கு ஒரு பொருள் பிடிக்கும். ஆனால், அதை நீ "உபயோகிக்ககூடாது" என்று கிருஷ்ணர் சொன்

னால் அதை நான் உபயோகிக்க மாட்டேன். அது கிருஷ் ணருக்காக:

"நிர்பந்த: கிருஷ்ண-ஸம்பந்தே

யுக்தம் வைராக்கியம் உச்யதே"

"எனக்கு இது பிடிக்கும்" என்று கிருஷ்ணர் உறுதியாகச் சொல்கிறார். எனவே கிருஷ்ணருக்குப் பிடித்தமானவற்றை அவருக்களித்த பின்பு பிரசாதத்தைப் பெற்றுக்கொள் கிறோம். கிருஷ்ணருக்கு ராதாராணியைப் பிடிக்கும். எனவே கோபியரெல்லாம் ராதாராணியை கிருஷ்ணரிடம் தள்ளிவிடுகிறார்கள். கிருஷ்ணர் இந்த கோபியை விரும்பு கிறார். சரி, அவளை அவரிடம் தள்ளுங்கள்." அது கிருஷ்ணரின் உணர்வு. கிருஷ்ணரின் புலன்களைத் திருப்தி செய்ய, என் புலன்களையல்ல. அது பக்தி. அதுவே கிருஷ்ணரிடம் பிரேமை செலுத்துவது. "ஆ. கிருஷ்ணருக்கு இது பிடிக்கும். எனவே இதை நான் அவருக்குத் தர வேண்டும்."

பாப்: பிரசாதம் இருக்கிறது. கிருஷ்ணருக்கு அளிக்கப்பட்டு. பின் நாம் அதை உண்கிறோம். வகைவகையான பிரசாதங் கள் வருகின்றன. சில எனக்குப் பிடித்திருக்கின்றன. சில வற்றின் ருசி எனக்குப் பிடித்தமாயில்லை.

ஸ்ரீல பிரபுபாதா: அப்படி நீங்கள் பார்க்கக்கூடாது. கிருஷ் ணருக்கு அளிக்கப்படும் எதையும் ஒப்புக் கொள்ள வேண்டும். அதுவே பக்குவமடைந்த நிலை. "இது பிடித் திருக்கிறது, இது பிடிக்கவில்லை" என்று சொல்லக்கூடாது. இப்படிப்பட்ட பாகுபாடுகள் பார்ப்பதினால், 'பிரசாதம்' என்றால் என்னவென்பதை நீங்கள் சரியாக உணரவில்லை என்றே பொருள்.

ஒரு பக்தர்: பிடித்திருக்கிறது. பிடிக்கவில்லை, என்று சொன் னால் என்ன? ஒருவர் பிரசாதம் தயாரித்துக் கொண்டிருக் கிறார் என்று வைத்துக் கொள்வோம்...

ஸ்ரீலபிரபு பாதா: பிடித்தது, பிடிக்காதது என்றெல்லாம் இல்லை. கிருஷ்ணருக்குப் பிடித்ததைச் சரியென்று ஒப்புக் கொள்ள வேண்டியதே.

ஒரு பக்தர்:அது சரி. ஆனால் ஒருவர் கிருஷ்ணருக்காகப் பிரசாதம் தயாரித்துக் கொண்டிருக்கிறாரென்று வைத்துக் கொள்வோம். ஆனால் அவர் அதை அவ்வளவு நேர்த் தியாகச் செய்யவில்லை...

ஸ்ரீலபிரபு பாதா: இல்லை. மனப்பூர்வமான பக்தியோடு செய் யப்பட்டால் கிருஷ்ணர் அதை விரும்புவார். விதுவைப் போல். விது கிருஷ்ணருக்கு வாழைப்பழம் ஊட்டிக் கொண்டிருந்தார். ஆனால் அவர் கிருஷ்ணரைப் பற்றிய எண்ணத்தில் மிகவும் ஒன்றிப் போயிருந்ததால் பழத்தை எறிந்துவிட்டுத் தோலைக் கிருஷ்ணருக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். (எல்லோரும் சிரிக்கிறார்கள்) அவர் பக்தி மேலீட்டால் அப்படிச் செய்கிறாரென்று கிருஷ்ணர் அறிந்திருந்தார். பக்தியிருக்குமானால் கிருஷ்ணர் எதையும் உண்ணக்கூடியவர். அது பௌதீகப் புலனுக்கு ருசி தரத் தக்கதா என்பது பொருட்டல்ல. அதுபோலவே பக்தன் கிருஷ்ணப் பிரசாதத்தை உண்ணும்போது அது புலனுக்கு ருசி தருவதாகவுள்ளதா என்பதைப் பற்றி எண்ணிப் பார்ப் பதில்லை. நாம் எதுவானாலும் ஒப்பக் கொள்ள வேண்டும்.

ஒரு பக்தர்: ஆனால் பக்தியில்லாவிடில் இந்தியாவில் உள்ளது போல்...

ஸ்ரீலபிரபு பாதா: பக்தியில்லாவிடில் கிருஷ்ணருக்கு எந்த உணவும் பிடிப்பதில்லை. ருசிகரமானதாலும் சரி, இல்லா விட்டாலும் சரி. அவர்

ஒப்புக் கொள்வதில்லை.

ஒரு பக்தர்: இந்தியாவில்.... ஒருவர்-

ஸ்ரீல பிரபு பாதா: ஓ! இந்தியா, இந்தியா! இந்தியாவைப் பற்றிப் பேசாதீர்கள். தத்துவத்தைப் பற்றி பேசுங்கள். பக்தி யில்லாவிடில் கிருஷ்ணர் எதையும் ஒப்புக்கொள்வ தில்லை. அது இந்தியாவானாலும் சரி, உங்கள்

நாட்டிலானாலும் சரி, மிகருசியாயிருப்பதால் விலை யுயர்ந்த எதையும் கிருஷ்ணர் ஒப்புக்கொள்ளவேண்டு மென்ற கட்டாயமில்லை. கிருஷ்ணருக்கு வைகுண்டத்தில் ருசிகரமான பல உணவு வகைகள் உள்ளன. உங்கள் உணவுக்காக அவர் ஒன்றும் ஏங்கிக்கிடக்கவில்லை. அவர் உங்கள் பக்தியை ஒப்புக்கொள்கிறார். உண்மையில் வேண்டியது பக்தி, உணவல்ல. இந்த ஜடவுலகின் எந்த உணவையும் கிருஷ்ணர் ஒப்புக்கொள்வதில்லை. அவர் பக்தியை மட்டுமே ஏற்றுக் கொள்கிறார்.

"பத்ரம் புஷ்பம் பலம் தோயம்
யோ மே பக்த்யா ப்ரயச்சதி
தத் அஹம் பக்த்யுபஹ்ருதம்
அச்நாமி ப்ரயதாத்மனம்ஹா"

("அன்புடனும் பக்தியுடனும் ஒருவன் எனக்கு ஒரு இலை யோ, பூவோ, பழமோ, நீரோ அளித்தால் அதை நான் ஏற்கிறேன்.")"பக்தியுடனும் அன்புடனும் எனக்கு அளிக்கப் பட்டிருப்பதால்." என்கிறார் கிருஷ்ணர். இவை அவசியம் தேவை. எனவே பக்தரல்லாத ஒருவரை சமையல் செய்ய அனுமதிப்பதில்லை. பக்தரல்லாத ஒருவரிடமிருந்து கிருஷ் ணர் எதையும் ஏற்று கொள்வதில்லை. அவர் ஏன் ஏற்றுக் கொள்ளவேண்டும்? அவருக்கும் பசியெதுவுமில்லை. அவ ருக்கு உணவெதும் தேவையில்லை. அவர் பக்தியை மட்டுமே ஏற்றுக்கொள்கிறார். அவ்வளவே. அதுதான் முக்கியமான விஷயம். எனவே ஒருவர் பக்தராக வேண் டும். நல்ல சமையற்காரராக இருக்கவேண்டும் என்ற அவசி யமில்லை. அது அவருக்குத் தானாகவரும். எனவே ஒருவர் பக்தரானால் போதும். பின்னர் எல்லா நல்ல தகுதிகளும் தானே அவரை வந்தடையும். பக்தரல்லாதவராக இருந்தால் நல்ல தகுதிகளெல்லாம் பயனற்றுப் போகும். அப்படிப் பட்டவர் தன் மனத்தளவிலேயே இயங்குகிறார். எனவே அவரிடம் நல்லதகுதிகள் அமைவதில்லை. (உரையாட லில் பெரும் இடைவெளி)

ஸ்ரீல பிரபு பாதா: இப்போது மணி என்ன?

சியாரமசுந்தர்: ஆறு மணி.

ஸ்ரீல பிரபு பாதா: கேள்வி பதில் தேவை. அவை எல்லாருக்கும் நன்மை தரும் பாப்: பிரசாதத்தைப் பற்றி நான் மீண்டும் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

ஸ்ரீல பிரபு பாதா: ஸூத கோஸ்வாமி சொல்கிறார்:

"முனய: ஸாது ப்ருஷ்டோ'ஹம்
பவத்பிர் லோக - மங்களம்
யத்க்ருத: கிருஷ்ண - ஸம்ப்ரச்னோ
யேனாத்மாஸூப்ரஸீத்தி."

("ஓ முனிவர்களே, என்னை நீங்கள் கேள்வி கேட்டது நியாயமானதே. அவை கிருஷ்ணரைப் பற்றியவையாகை யால் தகுதி வாய்ந்தவை. உலகத்துக்கு நன்மை பயப்பவை. இப்படிப்பட்ட கேள்விகளே முழுவதுமாக ஆத்மாவைத் திருப்தி செய்பவை") "கிருஷ்ண ஸம்ப்ரச்ன: அது மிகவும் நல்லது. சர்ச்சையும், கேள்வியும் - "லோக மங்களம்" - எல்லோருக்கும் மங்களம் தருபவை கேள்விகள், பதில்கள், இரண்டுமே நன்மையானவை..

பாப்: "ப்ரஸாதம்" பற்றிய சில விஷயங்கள் எனக்கு இன்னும் புரியாமலிருக்கின்றன. ஆனால்,, நீங்கள் விரும்பினால் அதைப்பற்றி சிந்தித்து விட்டு நாளை தங்களைக் கேட்கிறேன்.

ஸ்ரீல பிரபு பாதா: பிரசாதம் என்றும் பிரசாதமே. நாம் போதுமான அளவு மேம்பாடு அடைவதில்லையாதலால் சில பிரசாதம் நமக்குப் பிடிப்பதில்லை.

பாப்: சில பிரசாதத்தில் வாசனைப் பொருட்கள் அதிகமாகச் சேர்க்கப்படுவதால் அவை என் வயிற்றைப் புண்படுத்து கின்றன.

ஸ்ரீல பிரபு பாதா: அதுவும் சரியாகப் புரிந்துகொள்ளாததால் தான். ஆனால் சமையல் செய்பவருக்கும் பரிவு வேண்டும்.

கிருஷ்ணருக்கு முதல் தரமான உணவே அளிக்கப்பட வேண்டும். கடைத்தரமான உணவை அளித்தால் அவர் தன் கடமையைச் சரிவர செய்தவராக மாட்டார். ஆனால் பக்தன் அளிக்கும் எதையும் கிருஷ்ணரால் ஏற்றுக்கொள்ள முடியும். ஒரு பக்தரால் எவ்வகையான பிரசாதத்தையும், அது வாசனைத் திரவியம் மிக்கதாக இருந்தாலும்கூட, ஏற்றுக்கொள்ள முடியும். ஹிரண்யகசிபு தன் மகனுக்கு விஷத்தைக் கொடுத்தான். (மகன் அதை கிருஷ்ணருக்கு அர்ப்பணித்தான்) மகன் அதை அமுதமாகக் கருதிக் குடித்துவிட்டான். எனவே, மற்றவர்களின் ருசிக்குக் காரமாக இருப்பதுவும்கூட பக்தனுக்குச் சுவைமிக்கதாகப்படும். காரம் என்ன பெரிய விஷயம்? அவனுக்கு விஷம் தரப் பட்டது; உண்மையான விஷம். பூதனா ராட்சசியும் கிருஷ்ணருக்கு விஷம் கொடுத்தாள். ஆனால் கிருஷ்ணர் அதை சகஜமாக ஏற்றுக்கொண்டார். "அவள் என்னை என் தாயைப் போல் மடியில் எடுத்துக்கொண்டாள்." என்றெண்ணி கிருஷ்ணர் விஷத்தை ஏற்றுக்கொண்டு அவளுக்கு முக்தியளித்தார். கிருஷ்ணர் எதிலுமுள்ள கெடுதியைப் பற்றி எண்ணுவதில்லை. நல்லவன் கெட்ட அம்சத்தைக் காண்பதில்லை. நல்லதையே எடுத்துக் கொள்கிறான். என் சகோதரர்களில் ஒருவர் என் குருமகாராஜுடன் வியாபார ரீதியாக பேச வந்தார். ஆனால் குரு மகாராஜ் அதை தப்பாக எடுத்துக்கொள்ளவில்லை. அதன் நல்ல அம்சத்தையே எடுத்துக்கொண்டார். "எனக்கு உதவி செய்யவே அவர் முன்வந்திருக்கிறார்" என்று குருமகாராஜ் நினைத்துக் கொண்டார்.

பாப்: வியாபாரமா? யாருடன்?

ஸ்ரீல பிரபுபாதா: நான் என் குருமகாராஜைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

பாப்: நல்லது. பிரசாதத்தைப் பற்றி மேலுமொரு கேள்வி கேட்கலாமா? சில பக்தர்களுக்கு ஏதோ சிரமமிருக்கிறது. ஒரு வகையான உணவை அவர்களால் உண்ண முடிய

வில்லையென்று வைத்துக்கொள்வோம். கல்லீரல் பலவீனமாயிருப்பதால் சில பக்தர்கள் நெய் சாப்பிடுவ தில்லை என்பது போல். இப்படிப்பட்ட பக்தர்களும் எல்லாவகையான பிரசாதங்களையும் உண்ண வேண்டுமா?

ஸ்ரீல பிரபுபாதா: இல்லையில்லை. முழுமை பெறாத பக்தர்கள் இப்படிப் பாகுபாடுகள் அனுசரிக்கலாம். ஆனால் முழுமை பெற்ற பக்தனுக்கு இந்த வேறுபாடுகளெல்லாம் இருப்ப தில்லை. முழுமை பெற்ற பக்தர்களை நீங்கள் ஏன் பின் பற்ற வேண்டும்? உங்களுக்குப் பாகுபடுத்தும் தன்மை இருக்கிறவரை நீங்கள் முழுமையான பக்தனல்ல. எனவே பக்குவம் பெற்ற பக்தனைப்போல் பாவனை செய்து கொண்டு எல்லாவற்றையும் நீங்கள் ஏன் சாப்பிட வேண்டும்?

பாப்: ஓ!

ஸ்ரீல பிரபு பாதா: இதில் முக்கியமென்னவென்றால், பக்கு வமடைந்த பக்தன் எந்தவிதமான பாகுபாடும் பார்ப்ப தில்லை. கிருஷ்ணருக்கு அர்ப்பணிக்கப்படும் எதுவும் அவனுக்கு அமுதம் அவ்வளவே. கிருஷ்ணர் பக்தனிட மிருந்து எதையும் ஏற்றுக்கொள்கிறார். "தன் பக்தன் அளிக்கும் எதையும்" ஏற்றுக்கொள்கிறார். இதுவே ஒரு பக்தனுக்கும் பொருந்தும். இப்போது உங்களுக்கு விஷயம் புரிகிறதா? பக்குவமடைந்த பக்தன் எதையும் பாகுபடுத்திப் பார்ப்பதில்லை. நான் பக்குவமடையாத பக்தனாகவிருந்தால் பாகுபாட்டுணர்வு என்னிலிருக்கும் போது நான் ஏன் முழுமையான பக்தனாகப் பாவனை செய்யவேண்டும்? நான் முழுமையான பக்தனாக இல்லா விடில் என்னால் எல்லாவற்றையும் ஜீரணிப்பது சாத்திய மில்லை. பக்தன் மூடனாகவிருக்கக் கூடாது. "கிருஷ்ணயே பஜே ஸே படா சதுர" என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே பக்தன் தன் நிலையை அறிந்திருக்கிறான். மற்றவர்களை உரிய முறையில் சமாளிப்பதற்கான அறிவு அவனுக்கிருக்கிறது.

கிருஷ்ணரை அறிந்து செயலாற்றுதல்

(பிப்ரவரி 29, 1972-மாலை, தொடர்ச்சி)

ஒரு இந்திய கனவான்: எப்படிப்பட்ட செயலில் நல்ல கர்மாவை சம்பாதிக்க முடியும்.?

ஸ்ரீலபிரபு பாதா: நல்ல கர்மாவென்றால், வேதங்களில் வகுக்கப்பட்டிருப்பது. குறிப்பாக, ஒருவர் யக்ஞம் செய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. யக்ஞம் என்றால் முழு முதற் கடவுளான விஷ்ணுவைத் திருப்திப் படுத்துவதற்காக ஆற்றப்படும் செயல்கள் என்று பொருள். எனவே, நல்ல கர்மா என்றால் வேத இலக்கியங்களில் விதிக்கப்பட்டுள்ளபடி யக்ஞங்களைச் செய்வதென்றாகும். இந்த யக்ஞத்தின் நோக்கம் பரமபுருஷனான கடவுளைத் திருப்திப்படுத்துவதே. சட்டத்தை மதித்து நடக்கும் நல்ல குடிமகனின் நடவடிக்கைகள் அரசாங்கத்தைத் திருப்திப் படுத்துவனவாகும் . அதுபோல், நல்ல கர்மாவென்றால் உன்னதமான பிரபுவாகிய மகாவிஷ்ணுவைத் திருப்திப் படுத்தும் செயல். துரதிஷ்டவசமாக புருஷோத்தமனான முழுமுதற்கடவுளைப் பற்றி இன்றைய நாகரீகம் அறியாமலிருப்பதால் அவரைத் திருப்தி செய்வதற்கென்ற பேச்சிற்கே இடமில்லை.இன்றைய நாகரீகத்தில் மக்கள் இகலோக நடவடிக்கைகளிலேயே முழு மூச்சாக ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே அவர் களெல்லாரும் தீய கர்மாக்களைச் செய்து துன்பத்துக்காளாகிக் கொண்டிருக்கிறார்கள். குருடன் குருடனுக்கு வழிகாட்டுவது போல் இருக்கிறது, அவர்களுடைய செயல்கள். இருவருமே தீயகர்மாவின் விளைவுகளால் துன்புறுகிறார்கள். இதை வெகு எளிதாகப் புரிந்து கொள்ளலாம். குற்றம் செய்தால் தண்டனை நிச்சயம். நாட்டுக்காக மக்களுக்காக நன்மை செய்தால் உங்கள் சேவை பாராட்டப்படும். உங்களுக்கு அதற்காகச் சிறப்புப் பட்டம் கூடத்தரப்படலாம். நல்ல கர்மா,தீய கர்மா என்பது இதுதான். நல்ல கர்மாவின் விளைவாக உங்களுக்குச் சிறிது இவ்வுலக ரீதியிலான மகிழ்ச்சி கிட்டுகிறது. தீய கர்மா உங்களுக்குத் துன்பத்தைத்

தருகிறது. நல்ல கர்மாவின் மூலம் நல்ல குடும்பத்தில் பிறவி கிடைக்கிறது. செல்வங்களெல்லாம் கிடைக்கின் றன. நீங்கள் ஒரு சிறந்த பண்டிதராகலாம். அழகுமிக் கவராகவும் ஆகலாம்.(சிறிது நேரம் கழிகிறது.)

பாப்: ஆனால், கடவுளைப் பற்றி அறியாதவனின் நிலை என்ன?

ஸ்ரீல பிரபு பாதா: அப்படிப்பட்டவன் ஒரு மிருகம். எது நல்லதென்று மிருகத்திற்குத் தெரியாது. கடவுளென்றால் என்ன என்றறியாதவன், அறிய முயற்சிக்காதவன், மிருகமே. மிருகங்களுக்கு நான்கு கால்களிருக்கின்றன. இது இரண்டு கால் மிருகம். டார்வினின் கொள்கையின்படி அவர்கள் குரங்குகள். எனவே கடவுளை அறியாதவன், அறிய முயற்சிக்காதவன், மிருகமேயன்றி வேறில்லை.

பாப்: ஒன்றுமறியாத மக்களைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ஸ்ரீல பிரபு பாதா: மிருகமும் ஒன்றுமறியாதது. அதன் குரல் வளையை அறுத்தால் அது எதிர்ப்புத் தெரிவிக்காது. எனவே ஒன்றுமறியாதிருப்பது ஒரு நல்ல தகுதியாகாது. மிருகங்களெல்லாம் ஒன்றுமறியாதவை. ஆகையால் ஆவற் றைக் கொல்ல முடிகிறது. எனவே, ஒன்றுமறியாத் தன்மை ஒரு நல்ல தகுதியல்ல. ஒருவன் மிகமிக அறிவுள்ளவனாக இருந்தால்தான் கிருஷ்ணரைப் புரிந்துகொள்ள முடியுமென் பதே எமது கொள்கை. ஒன்றுமறியாத அப்பாவியாக ஆவது நல்லதல்ல. எளிமை வேண்டியதுதான்- ஆனால் அறிவற்றவனாக இருக்கக்கூடாது.

பாப்: அறிவு என்றால் என்னவென்பதை மீண்டும் சொல் லலாமா?

ஸ்ரீலபிரபுபாதா: அறிவு என்றால்... தான் யார், இந்த உலகம் என்ன, இவற்றினூடேயான உறவுகளென்ன? என்பதை அறிந்திருப்பவன் அறிவாளி. மிருகத்திற்குத் தான் யார் என்பது தெரியாது. அது தன் உடலையே தானாக எண்ணிக் கொள்கிறது. அதுபோலவே, தான் என்னவென் பதை அறியாதவன் அறிவுடையவனல்லன்.

பாப்: முறையான செயல்களைச் செய்பவன்- செய்ய முற்படு பவன்- மனச் சாட்சிப்படி நடப்பவன். இப்படிப்பட்ட ஒருவனைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்? தன் எஜமான னிடம் உண்மையாக நடந்துகொள்ளும் பணியாள், அப்படி நடந்துகொள்ளாவிட்டாலும் பிடிபடமாட்டான் என்று தெரிந்திருந்தும் உண்மையாக நடப்பவன்- அப்படி ப்பட்ட ஒருவனைப்பற்றி? அது ஒரு வகையான நல்ல கர்மவா?

ஸ்ரீல பிரபு பாதா: ஆம். நேர்மையும் நல்ல கர்மாவே. நல்லவனாவது எப்படியென்று பகவத் கீதையில் விரி வாகக் கூறப்பட்டிருக்கிரது.

'தைவீ ஸம்பத் விமோக் ஷாய
நிபந்தாயாஸுரி மதா.

தெய்வீகத் (பரமான)தன்மைகளை அடைந்தால் விடுதலை (மோஷம்) பெறலாம் 'நிபந்தாயாஸுரீ' அசுர குணங் களைப் பெற்றால் மேலும்மேலும் சிக்கலில் உழல நேரி டும். துரதிஷ்டவசமாக நவீன நாகரீகம் மோட்ஷமென் றாலென்ன. பௌதீகச் சிக்கல் என்றால் என்னவென்பதை அறியாமலிருக்கிறது. அவர்கள் அவ்வளவு அறியா மையில் மூழ்கியிருக்கிறார்கள். மோட்ஷம் (விடுதலை) என்றால் என்ன பொருள் என்று கேட்டால் உங்களால் பதில் சொல்லமுடியுமா?(பதிலில்லை) பௌதீகச் சிக்கல் என்னவென்று சொல்லமுடியுமா? (மீண்டும்பதிலில்லை). இந்தச் சொற்கள்- விடுதலை, சிக்கல்- வேத இலக்கியங் களில் காணப்படுகின்றன. ஆனால் தற்போது, விடுதலை என்றால் என்ன, சிக்கல் என்றால் என்ன, என்பதை மக்கள் அறியாமலிருக்கிறார்கள். அவர்கள் அவ்வளவு அறியாத வர்களாக, அவ்வளவு மூடர்களாக இருக்கிறார்கள். என்றாலும், தாங்கள் அறிவில் முன்னேற்றம் கண்டு விட்டதாகப் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். நீங்கள் ஒரு பேராசிரியர், கல்வி கற்பிப்பவர். விடுதலை

யென்றால் என்னவென்று உங்களால் சொல்லமுடியுமா?"

பாப்: அவ்வளவு சரியாகச் சொல்லமுடியாது. அது என்னால் முடிந்தால் நான் விரைவில் விடுதலைப் பெற்றுவிடு வேனே.

ஸ்ரீல பிரபு பாதா: விடுதலையென்றால் என்னவென்று தெரியாத போது, விரைவாக, மெதுவாக என்பதெல்லாம் எப்படி? எல்லாரும் சிரிக்கிறார்கள். விடுதலையென்ற பிரச்சனையே இல்லை. அது வேகமானதுமல்ல. மெதுவானதுமல்ல. முதலில், விடுதலையென்றால் என்னவென்று நீங்கள் அறிய வேண்டும். ரயில் எங்கே போகிறதென்று தெரியாவிட்டால் அது வேகமாகப் போகிறததா, மெதுவாகப் போகிறதா என்று கேட்டறிந்து என்ன பயன்? நீங்கள் போய்ச் சேருமிடம் உங்களுக்குத் தெரியாது. விடுதலையென்றால் என்ன?

பாப்: ம்-ம்...

ஸ்ரீல பிரபு பாதா: நான் கேட்கிறேன். தினமும் என்னைக் கேட்கிறீர்கள். இப்போது நான் உங்களைக் கேட்கிறேன்.

பாப்: (சிரிக்கிறார்). ஆ- சரி- சற்று யோசித்துப் பார்க்கிறேன்.

ஸ்ரீல பிரபு பாதா: விடுதலை ஸ்ரீமத் பாகவதத்தில் விவரிக்கப் பட்டுள்ளது:

"முக்திர் ஹித்வான்யதா ரூபம்
ஸ்வரூபேண வ்யவஸ்திதி:

ஒருவன் எல்லா அபத்தச் செயல்களையும் நிறுத்திவிட்டு தனது சுயமான நிலையில் அமர வேண்டும். இதுவும் சங்க்ங்கடமானதுதான்; ஏனென்றால் தன் சுய நிலையென்ன, அதில் சரியாக நடந்துகொள்வதெப்படியென்று யாருக்கும் தெரியாது. மக்கள் பொதுவாக வெவ்வேறு விதமாகச் செயல்படுவதாலும், சரியான நடத்தை எது என்பதை அறியாமலிருப்பதாலும் நவீன சமுதாயத்தினர் தங்கள் வாழ்க்கையைப் பற்றி முற்றிலும் அறியாதவர்

களாயிருக்கிறார்கள். அது ஒரு மிகவும் சீர்கேடானநிலை. அதை அவர்கள் அறியார்.

பாப்: நேர்மையானவர் யாரென்று தாங்கள் சொல்ல முடியுமா?

ஸ்ரீல பிரபு பாதா: நேர்மையென்றால் என்னவென்று தெரியாத போது எப்படி ஒருவன் நேர்மையானவனாக ஆக முடியும்? நேர்மையென்றால் என்னவென்று தெரிந்தால் நேர்மையாக இருக்கமுடியும். நேர்மையென்றால் என்ன? நீங்கள் முதலில் விளக்கம் சொல்லுங்கள்.

பாப்: நேர்மையென்பது ஒருவர் சரியானது என்று தனக்கு உண்மையாகப் படுவதைச் செய்வது.

ஸ்ரீல பிரபு பாதா: ஒரு திருடன், 'என் குழந்தைகளின் தேவையைப் பூர்த்தி செய்ய நான் திருடுகிறேன். நான் செய்வது சரியே.' என்று எண்ணுகிறான். அவன் நேர்மையானவன் என்று கொள்வதா? எல்லாரும் எண்ணுகிறார்கள். கசாப்புக் கடைக்காரன், 'இது என் வாழ்க்கை முறை. நான் தினமும் மிருகங்களின் கழுத்தை வெட்டவேண்டும்' என்று நினைக்கிறான். அது போலவே, யார் அந்த வேடன்? நாரத முனி சந்தித்தது?

சியாமசுந்தர்: ம்ருகாரி.

ஸ்ரீலபிரபு பாதா: ஆம். ம்ருகாரி. நாரதர் அவனை, 'ஏன் இப்படிக் கொன்று குவிக்கிறாய்?' என்று கேட்டபோது, அவன், 'ஓ, இது என் தொழில், என் தந்தை எனக்குக் கற்றுத் தந்தது.' என்றான்.அவன் தான் செய்தது நேர்மையானதென்றே எண்ணினான். ஆக, எது நேர்மையென்பதைப் பற்றிய உணர்வு அவரவர் பண்பின் வளர்ச்சியைப் பொறுத்தது. ஒரு திருடனின் பண்பு வேறுவிதமானது. திருடுவது நேர்மையான செயலென்று அவன் எண்ணுகிறான்.

பாப்: அப்படியானால், நேர்மையென்பது என்ன?

ஸ்ரீல பிரபு பாதா: அதுதான் என் கேள்வியும். (எல்லோரும் சிரிக்கிறார்கள்) உண்மையான நேர்மை மற்றொருவனுக்குச் சேர்ந்ததை ஆக்ரமிக்காமலிருப்பது. அது நேர்மை, உதார

ணமாக, இது என் மேஜை. நீங்கள் போகும்போது இதை எடுத்துக் கொண்டு போக நினைத்தால் அது நேர்மை யாகுமா? எனவே, மற்றொருவரின் உரிமையை அபகரிப் பது கூடாது என்பதே நேர்மையின் தெளிவான விளக்கம். அதுவே நேர்மை.

பாப்: எனவே, நேர்மையாயிருப்பவன் நற்குணமென்ற (சாத் வீகம்) தன்மையை உடையவர் என்பது சரியாகுமா?

ஸ்ரீலபிரபு பாதா: நிச்சயமாக, நிச்சயமாக. ஏனென்றால், சாத் வீக குணம் அறிவின் பாற்பட்டது. 'இந்த மேஜைஎனக்குச் சொந்தமானதல்ல, ஸ்வாமிஜிக்கு சொந்தமானது' என்பது அறிவு. இது உங்களுக்கிருக்கும்போது நீங்கள் அதை எடுத்துச் செல்ல முயற்சிக்க மாட்டீர்கள். எனவே, ஒருவர் அறிந்தவராக இருக்கவேண்டும். எல்லாவற்றையும் முழுமையாக அறிந்திருக்க வேண்டும். அப்போது அவர் நேர்மையுடையவராகிறார்.

பாப்: சாத்வீக குணம் கடவுளை அறிவதாகும் என்று சொல் கிறீர்கள். ஆனால் கடவுளைப் பற்றிய அறிவு அவ்வள வாக இல்லாத ஒருவரும் நேர்மையானவராக இருக்கலா மல்லவா?

ஸ்ரீல பிரபு பாதா: ஹ்-ம்?

பாப்: நேர்மையாக இல்லாமல்-கடவுளின் விருப்பத்துக்காக நேர்மையாக நடக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லா மலேயே - ஒருவர் நேர்மையாக நடக்கவேண்டுமென்று எண்ணுகிறார்.

ஸ்ரீல பிரபு பாதா: ம்...ம். எல்லாரும் நேர்மையாக நடக்க வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். கடவுள் ஏன் வேறு விதமாக எண்ணவேண்டும்?

பாப்: எனவே, கடவுளின் விருப்பப்படி நடக்கிறோ மென்றறியாமலேயே கடவுளின் விருப்பத்தை பின்பற்ற லாமல்லவா? உதாரணமாக, அந்த குணத்தைப் பெற்றிருப் பவர்.....

ஸ்ரீல பிரபு பாதா: இல்லை. அறியாமல் பற்றுவதென்பது அபத்தமானது. கடவுளின் கட்டளையை அறிந்திருக்க வேண்டும். அறிந்து அதைப் பின்பற்றினால் அது நேர்மை.

பாப்: அப்படியானால் கடவுளை அறியாமல் நேர்மையாக இருக்க முடியாதா?

ஸ்ரீல பிரபு பாதா: ஆம். ஏனென்றால் கடவுள் உன்னதமான உடைமையாளர்; உன்னதமான அனுபவிப்பாளர்; உன்னதமான நண்பர். இது பகவத் கீதையின் கூற்று. இந்த மூன்று விஷயங்களை அறிந்த எவரும் முழு அறிவைப் பெற்றவராகிறார். இந்த மூன்று விஷயங்கள் மட்டுமே: கடவுளே எல்லாவற்றிற்கும் சொந்தமானவர், கடவுள் எல்லாருக்கும் நண்பர். கடவுளே எல்லாவற்றையும் அனுபவிப்பவர். உதாரணமாக, உடம்பில் வயிறே அனுபவிப்பாளர் என்பதை யாவரும் அறிவர்.... கையோ, காலோ, கண்களோ, காதுகளோ அல்ல. இவையெல்லாம் வயிற்றுக்கு உதவவே அமைந்திருக்கின்றன. கண்கள்-கழுகின் கண்கள் ஏழு மைல் உயரத்திலிருந்து வயிற்றுக்குத் தேவையான உணவு எங்கிருக்கிறதென்று காணக் கூடும். இல்லையா?

பாப்: அப்படித்தான்.

ஸ்ரீல பிரபு பாதா: பின்பு, இறைக்கைகள் அந்த இடத்துக்குப் பறக்கின்றன. அலகுகள் இரையைப் பிடிக்கின்றன. அது போலவே, உடம்பில் வயிறே அனுபவிப்பாளராக இருப்பதுபோல், பௌதிக மற்றும் ஆன்மிக பிரபஞ்ச முழுமைக்குமான மையம் கிருஷ்ணரே, கடவுளே. அவரே அனுபவிப்பாளர். நம் உடலைக் கவனித்தே நாம் இதை அறிந்து கொள்ளலாம். உடலும் ஒரு சிருஷ்டியே. பிரபஞ்சம் முழுவதிலும் காணப்படும் இயக்கவியல்பையே நம் உடலும் பெற்றிருக்கிறது. இதே இயக்கவியல்பை, ஏற்பாட்டை எங்கும் காணலாம். மிருகங்களிலும்கூட, மனித உடலினாலும், பிரபஞ்சத் தோற்றத்தினாலும் - அனேகமாக இதே இயக்கவியல்பைக் காணலாம். எனவே நீங்கள் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம். இந்த உடலில், - என் உடம்பில், உங்கள் உடலில்-வயிறே அனுபவிப்பாளர்.

உடலில் ஒரு மத்திய அனுபவிப்பாளர் இருக்கிறார். வயிறு உடலின் நண்பரும்கூட. அது உணவை ஜீரணிக்காவிட்டால், உடலின் மற்ற உறுப்புகள் பலவீனமடைகின்றன. எனவே வயிறு உடலின் நண்பர். அதுவே உணவை ஜீரணித்து சக்தியை எல்லா பாகங்களுக்கும் வினியோகிக்கிறதல்லவா?

பாப்: ஆம், அப்படித்தான்

ஸ்ரீல பிரபு பாதா: அதுபோலவே, சிருஷ்டி முழுமைக்கும் மையமான வயிறு கடவுள், கிருஷ்ணர், அவர் அனுபவிப்பாளர். அவர் நண்பர், உன்னதமான உடமையாளர். அவர் எல்லாரையும் பரிபாலிப்பவர். அரசன் உடமையாளனாகவிருப்பதால் குடிமக்கள் எல்லாரையும் பரிபாலிப்பதுபோல். உடைமையாளராக இல்லாமல் ஒருவர் எப்படி எல்லாருடைய நண்பராக ஆகமுடியும்? இவைகளைப் புரிந்து கொள்வது அவசியம். கிருஷ்ணரே உடைமையாளர். கிருஷ்ணரே அனுபவிப்பாளர். கிருஷ்ணரே நண்பர். இந்த மூன்று விஷயங்களையும் அறிந்திருப்பவர் முழு அறிவும் பெற்றவராவார். இதற்குமேல் அறிய வேண்டியது யாதொன்றுமில்லை.

"யஸ்மின் விக்ஞாதே ஸர்வம்
ஏவம் விக்ஞாதம் பவதி."

இந்த மூன்று சூத்திரங்களின் உதவியோடு கிருஷ்ணரை அறிந்துகொள்வதால் மட்டுமே உங்கள் அறிவு முழுமை அடைகிறது. இதற்கு மேல் அறிந்துகொள்ள வேண்டியது ஏதுமில்லை. ஆனால் மக்கள் இதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். "ஏன் கிருஷ்ணர் உடைமையாளராக இருக்க வேண்டும்? ஹிட்லர் இருக்கலாமே? நிக்ஸன்... இப்படியே போய்க்கொண்டிருக்கிறது. எனவே தொல்லைகள் ஏற்படுகின்றன. இந்த மூன்று விஷயங்களை மட்டும் அறிந்துவிட்டால் அப்போது உங்கள் அறிவு முழுமை அடைகிறது. ஆனால் நீங்கள் ஒப்புக்கொள் ளமாட்டீர்கள். இந்த மூன்று விஷயங்களைப் புரிந்துகொள்வதற்கு எத்தனையோ

தடைகளை முன் வைப்பீர்கள். அதுவே உங்கள் தொல்லைகளுக்கெல்லாம் காரணம். ஆனால் பகவத் கீதையில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

"போக்தாரம் யக்ஞ-தபஸாம்
ஸர்வ-லோக-மஹேஸ்வரம்
ஸுஹ்ருதம் ஸர்வ பூதானாம்
ஞாத்வாமாம் சாந்திம் ருச்சதி"

("எல்லா யக்ஞங்களுக்கும் தவங்களுக்கும் இறுதி லட்சியமாகவும், எல்லாகிரகங்கள் மற்றும் தேவதைகளின் பரம ஈச்வரனாகவும், எல்லா ஜீவன்களின் உற்ற நண்பனாகவும் என்னையறிந்து சான்றோர், ஜடத்துயரங்களிலிருந்து விடுபட்டு அமைதி பெறுகின்றனர்.) ஆனால் நாம் இதை ஒப்புக் கொள்ளமாட்டோம். நாம் பல போலியான உடமையாளர்களை, போலியான நண்பர்களை, போலியான அனுபவிப்பாளர்களைக் கொண்டு வருவோம். அவர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டு கொள்வார்கள். இது இன்றைய உலகின் நிலை. உண்மையான கல்வி கற்பிக்கப்பட்டு மக்கள் இந்த அறிவை ஏற்றுக்கொள்வார்களானால் உடனேயே அமைதி பிறக்கும். (சாந்திம் ருச்சதி) இதுவே அறிவு. இந்தக் கொள்கையை கடைபிடித்தால் அவன் நேர்மையானவன். 'இது எனது' என்று அவன் உரிமை கொண்டாடுவதில்லை. அவன் எல்லாம் அறிந்தவன்: "ஓ, அது கிருஷ்ணரைச் சேர்ந்தது; எனவே எல்லாம் கிருஷ்ணரின் சேவைக்காகப் பயன்படுத்த வேண்டும்." அதுவே நேர்மை. 'இந்தப் பென்சில் எனதாக இருக்கலாம். ஆனால் எனது மாணவர்கள் சில சமயம் "இந்தப் பென்சிலை நான் உபயோகிக்கலாமா?" என்று கேட்கும் போது, "ஓ,தாராளமாக" என்று சொல்வதுதான் நற்பண்பு. அது போலவே எல்லாம் கிருஷ்ணருடையவை என்று நான் அறிந்திருந்தால், அவருடைய அனுமதியில்லாமல் நான் எதையும் உபயோகிக்க மாட்டேன். அது

நேர்மை. அதுவே அறிவு. அதை அறியாதவன் அறிவற்ற வன். மூடன். மூடன் குற்றங்களைச் செய்கிறான். எல்லாக்குற்றவாளிகளும் மூடர்களே. மூடத்தனத்தின் காரணமாக ஒருவன் சட்டத்தை மீறுகிறான். எனவே மூடத்தனம் ஆனந்தமல்ல. ஆனால் அறியாமை ஆனந்த மாயிருக்கும்போது அறிந்திருப்பது மடமையென்று கருதப்படுகிறது. அதுதான் சங்கடம். உலகம் முழுமையும் மூடத்தனத்தை ரசிக்கிறது. கிருஷ்ண உணர்வைப் பற்றி பேசுவதை அவர்கள் மதிப்பதில்லை. "கிருஷ்ணர் உடைமையாளர், நீங்களல்ல" என்று நான் சொன்னால் உங்களுக்கு அப்படியொன்றும் திருப்திகரமாகவிராது. (எல்லோரும் சிரிக்கிறார்கள்) பாருங்கள். அறியாமை ஆனந்தம். எனவே உண்மையை எடுத்துச் சொல்வது எனது மடமை. மூடத்தனம் ஆனந்தமாயிருக்கும்போது அறிவாளியாயிருப்பது மடத்தனமே. எனவே, மக்களைக் கோபமடையச் செய்யும் ஆபத்தை நாம் விலைக்கு வாங்குகிறோம். நாம் முட்டாள்களென்று அவர்க்ள் நினைப்பார்கள் பணக்காரன் ஒருவனிடம், "நீங்கள் உடைமையாளரல்ல, கிருஷ்ணரே; உங்கள் பணம் எல்லா வற்றையும் கிருஷ்ணருக்காகச் செலவழியுங்கள்" என்று சொன்னால் அவன் கோபமடைவான்:

"உபதேசோஹி மூர்க்கனாம்
ப்ரகோபாய ந சாந்தயே."

"மூர்க்கனுக்கு அறிவுரை சொல்லப்போனால் கோபமடை வான்." எனவே நாம் பிச்சைக்காரர்களாக அவனை அணு குவோம்: "அன்புள்ள அய்யா, நீங்கள் மிக நல்ல மனிதர். நான் ஒருஏழை சன்யாசி. ஒரு ஆலயம் கட்டவிரும்பு கிறேன். தாங்கள் சிறிது பண உதவி செய்ய முடியுமா?" என்று கேட்கவேண்டும். தாங்கள் சிறிது பண உதவி செய்ய முடியுமா?" என்று கேட்கவேண்டும். அவன், "ஓ இவன் ஒரு பிச்சைக்காரன். இவனுக்குக் கொஞ்சம்

கொடுத்தனுப்பலாம்." என்று எண்ணுவான். (எல்லோரும் சிரிக்கிறார்கள்). ஆனால் நான்" உங்களிடம் லட்சக் கணக்கில் பணம் இருக்கிறது. அது கிருஷ்ணரின் பணம். அதை எனக்குத் தாருங்கள். நான் கிருஷ்ணரின் சேவகன், "என்று சொன்னால் ஓ. அவன்.... (எல்லோரும் சிரிக்கிறார் கள்) அவன் சம்மதிக்கமாட்டான். ஒரு பிச்சைக்காரனாக நான் போனால் அவன் ஏதாவது தருவான். அவனிடம் உண்மையைச் சொன்னால் எனக்கு ஒரு பைசாக்கூடத் தரமாட்டான். (எல்லாரும் சிரிக்கிறார்கள்) பிச்சைக்கார னாக நாம் அவனைச் சம்மதிக்கச் செய்கிறோம். நாம் பிச்சைக்காரர்களல்ல. கிருஷ்ணரின் சேவகர்கள். நமக்கு யாரிடமிருந்தும் எதுவும் வேண்டாம். ஏனென்றால் கிருஷ் ணர் நமக்கு வேண்டியதையெல்லாம் தருவாரென்று நாம் அறிவோம்.

பாப்: ஓ!

ஸ்ரீல பிரபு பாதா: இது அறிவு. உதாரணமாக, ஒரு குழந்தை மிக முக்கியமான ஏதாவதொரு பொருளை எடுத்து வைத்துக் கொண்டு தரமாட்டேன் என்கும். அப்போது நாம் அதை முகஸ்துதி செய்யவேண்டும்.

"ஓ!, நீ நல்ல குழந்தையாச்சே; இதோ மிட்டாய். வாங்கிக்கோ. எங்கே, அந்தப் பேப்பரைக் கொடு. அது ஒன்றுமில்லை. வெறும் கடுதாசி," என்று புகழ்ச்சியாகப் பேசவேண்டும். அப்போது அது, "சரி, வாங்கிக்கோ. மிட்டாய் ரொம்ப நல்லாயிருக்கு" என்று சொல்லும். இரண்டு பைசா மிட் டாய் ரொம்ப நல்லாயிருக்கு" என்று சொல்லும். இரண்டு பைசா மிட்டாய் - நன்றாகவும் இனிமையாகவும் இருக் கிறது. ஆக இப்படி செய்யவேண்டியதாயிருக்கிறது. ஏன்? ஏனென்றால், கிருஷ்ணரின் பணத்தைத் தனக்கென எடுத்துக் கொள்பவன் நரகத்துக்கு போவான். எனவே ஏதாவதொரு வகையில் அவனிடமிருந்து பணத்தை பெற்று அவனையும் கிருஷ்ண உணர்வு இயக்கத்தில் ஈடுபடச் செய்ய வேண்டும்.

பாப்:அப்போது அவன் நரகத்துக்கு போக மாட்டானா?

ஸ்ரீல பிரபு பாதா: ஆம். நரகத்தினின்று அவனை நீங்கள் காப்பாற்றுகிறீர்கள். கிருஷ்ணருக்காக செலவு செய்யப் படும் ஒவ்வொரு பைசாவும் கணக்கில் வரவு வைக்கப் படுகிறது. 'ஓ. இவன் ஒரு பைசா கொடுத்திருக்கிறான்.' இது அக்ஞாத - ஸுக்ருதி' - தானறியாமல் செய்யும் ஆன்மீகச் செயல். அவர்களுக்கு எண்ணும் சக்தி மிகக் குறைவு. எனவே புனிதமடைந்தவர்கள் அவர்களுக்குச் சிறிது ஒளியூட்ட வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு ஒரு வாய்ப்பளிப்பதற்கு. கிருஷ்ணருக்குச் சேவை செய்வதற்கு அவர்களுக்கு ஒரு வ்ாய்ப்பளிக்கப்படுகிறது. இது புனித மடைந்தவர்களின் கடமை.

பாப்: அது என்ன?

ஸ்ரீலபிரபுபாபு: அது அவரின் கடமை. ஆனால் அவர் பிறரிட மிருந்து பணத்தைப் பெற்று தனது திருப்திக்காக அதைச் செலவு செய்தால், அவர் நரகத்துக்குப் போவார். அவர் கதை முடிந்தது. அப்போது அவர் பிறரை ஏமாற்றுபவ ராவார். உண்மைமணயில் அவர் ஒரு குற்றவாளியாகிறார். யாரிடமிருந்தும் ஒரு பைசாகூடப் பெற்று அதைத் தனது சொந்தப்புலன் திருப்திக்காகப் பயன்படுத்தக் கூடாது.

பாப்: கிருஷ்ண உணர்வில்லாத சிலரை எனக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்.

ஸ்ரீல பிரபு பாதா: கிருஷ்ணர் என்றால் கடவுள்.

பாப்: அவர்கள் ஒரு சிறிதே கடவுளுணர்வுள்ளவர்கள் ஆனால் பிறரிடமிருந்து எதையும் பெறாத அளவிற்கு நேர்மையான வர்கள். பிறரிடம் நேர்மையாக நடக்க முயற்சிப்பவர்கள், இவர்கள்...

ஸ்ரீலபிரபுபாதா: அவர்கள் பெறுவது பிறரிடமிருந்தல்ல. கட வுளிடமிருந்து பெறுகிறார்கள்.

பாப்: இவர்களைப் பாதிக் கடவுள் என்று சொல்லலாமா?

ஸ்ரீல பிரபு பாதா: ஹ்-ம்?

பாப்: அப்படியானால் இவர்கள் பாதிக் கடவுளா?

ஸ்ரீல பிரபு பாதா: கடவுளே உடைமையாளரென்று இவர்கள் கற்றுக் கொள்ளாவிடில் பயனில்லை. பிறருடைய? "பிறருடைய" என்று நீங்கள் சொல்வதன் பொருளென்ன?

பாப்: நான் நினைப்பது... உதாரணமாக, ஏழை மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு, பாவம் உணவுத் தேவைப் படுகிறது. ஆனால்...

ஸ்ரீல பிரபு பாதா: எல்லோருக்கும் பணம் தேவைப்படுகிறது. எல்லாருக்கும் அது தேவை. யார் ஏழையில்லை? இங்கு எத்தனையோ கனவான்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களில் யாருக்கும் பணமோ, உணவோ தேவையில்லை? உங்களுக்கும் பணம் தேவையிருக்கிறது. எனவே பணக்காரன் ஏழை என்று எப்படி வித்தியாசப்படுத்துவது? எல்லோருக்கும் அது தேவைப்படுகிறது. உங்களுடைய விளக்கம் அதுவாக இருந்தால் ஒருவனுக்கு பணம் அல்லது உணவு தேவையென்பதைக் கொண்டு பார்த்தால் எல்லாருக்குமே பணமும் உணவும் தேவைப் படுகிறது. அவ்வகையில் எல்லாருமே ஏழைகள்தான்.

பாப்: அது சரி- ஆனால் நான் பிறரோடு ஒப்பிட்டுப் பாாக்கும்போது மிகவும் ஏழைகளாயிருப்பவர்களைப் பற்றி சொன்னேன்.

ஸ்ரீல பிரபு பாதா: ஒப்பிட்டுப் பார்க்கும்போது நீங்கள் சொல்வது சரியாகவிருக்கலாம். என்னைவிட நீங்கள் பசியாயிருக்கிறீர்கள். இப்போது எனக்குப் பசியில்லை. ஆனால் எனக்குப் பசியெடுப்பதில்லை.என்று பொருளல்ல. தற்போது பசியில்லாமல் இருக்கலாம். நாளை பசிக்கலாம்.

பாப்: நான் சொல்வது-எப்படியோ இந்த மக்கள்-அவர்களைச் சுற்றியுள்ளவர்கள். திருடும்போதும் அவர்கள் திருடாமல் நிமிர்ந்து நிற்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு எப்படியாவது நன்மை பிறக்க வேண்டும்.

ஸ்ரீல பிரபு பாதா: ஆனால், தான் திருடுவதில்லையென்று எண்ணுபவனும் திருடத்தான் செய்கிறான். ஏனென்றால், எல்லாம் கிருஷ்ணரைச் சேர்ந்ததென்று அவன் அறியாமலிருக்கிறான். எனவே அவன் பெற்றுக் கொள் ளும் எதையும் அவன் திருடுவதாகவே ஆகும்.

பாப்: அவன் குறைந்த அளவிலான திருடனா?

ஸ்ரீல பிரபு பாதா: இந்த அட்டை எனக்குச் சொந்தமானதென்று நீங்கள் அறியாமலிருக்கலாம். ஆனால் அதை நீங்கள் எடுத்துச் சென்றால் திருடியதாகாதா?

பாப்: தங்களது என்று தெரியாமல் எடுப்பதைவிட தெரிந்து எடுக்கும் போது என் திருட்டுக் குற்றம் அதிகமாகிறது. யாருடையதுமல்ல என்று நினைக்கிறேன். எடுக்கிறேன்.

ஸ்ரீல பிரபு பாதா: அதுவும் திருட்டுத்தான். ஏனென்றால் அது யாருக்காவது சொந்தமானதாக இருக்க வேண்டும். அவரின் அனுமதியின்றி நீங்கள் எடுக்கிறீர்கள். அது யாருடைய தென்று உங்களுக்குச் சரியாகத் தெரியாமலிருக்கலாம். ஆனால் யாருக்காவது சொந்தமாகவிருக்க் வேண்டுமென் பது உங்களுக்குத் தெரியும். அது அறிவு. வழியில் எத்தனையோ விலையுயர்ந்த பொருட்கள் கிடைப்பதை நாம் சிலவேளைகளில் காண்கிறோம். சாலைகளைச் செப் பணிடுவதற்காக அரசாங்கத்தினர் விட்டுச் சென்றிருப் பவை. அல்லது மின் இலாகாவினரின் பணிக்காகப் போடப்பட்டிருப்பவையாக இருக்கலாம். அதை பார்க்கும் போது ஒருவன், 'ஓ, என் அதிஷ்டம், இது இங்கே கடக்கிறது நான் எடுத்துக் கொள்ளலாம்.' என்று எண்ணி னால் அது திருட்டாகாதா?

பாப்: திருட்டுத்தான்.

ஸ்ரீல பிரபு பாதா: ஆம். அரசாங்கத்தின் சொத்து என்பது அவனுக்குத் தெரியாது. அவன் எடுத்துச் செல்கிறான். அது திருட்டு. பிடிபடும்போது அவன் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்படுகிறான். அதுபோலவே, எதையெடுத்தாலும் -நதியிலிருந்து நீரைக் குடிக்கிறீர்கள். நதி உங்கள் சொத்தா?

பாப்: இல்லை.

ஸ்ரீல பிரபு பாதா: பிறகு? அதுவும் திருடுவதே. நீங்கள் நதியை உண்டாக்கவில்லை. அதன் உடைமையாளர் யாரென்பது உங்களுக்குத் தெரியாது. அது உங்கள் சொத்தல்ல. எனவே, யாருக்குச் சொந்தமென்பது தெரியாமல் ஒரு லோட்டா நீரை எடுத்துக் குடித்தாலும் நீங்கள் திருடர்தான், நீங்கள் நினைக்கலாம். 'நான் நேர்மையானவன்' என்று ஆனால், உண்மையில் நீங்கள் திருடன். நீங்கள் கிருஷ்ணரை நினைக்க வேண்டும். 'கிருஷ்ணா, இது உமது படைப்பு. எனவே இதன் நீரைக் குடிப்பதற்கு அனுமதியுங்கள்' என்று எண்ணவேண்டும். அது நேர்மை. எனவே பக்தன் எப் போதும் கிருஷ்ணரை நினைவில் கொண்டு செயல்படு கிறான். அவன் எல்லாச் செயல்களிலும், 'ஓ, இது கிருஷ்ண ருடையது என்று எண்ணிச்செய்கிறான். அது நேர்மை. கிருஷ்ண உணர்வில்லாத ஒருவன் போக்கிரி, திருடன், கயவன் கொள்ளைக்காரன். இவையே இவனது தன்மைகள். கிருஷ்ணரை அறியாத எவரும் நல்ல தகுதிகளைப் பெற்ற வர்களல்ல.' எனவே அவன் மூன்றாந்தர மனிதன். சரியா என்ன சொல்கிறீர்கள்- கிரிராஜா?

கிரிராஜ்: ஆம்.

ஸ்ரீல பிரபு பாதா: இது பிடிவாதமான கொள்கையாகாது. இது உண்மை. (சிறிது நேரம் கழிகிறது) ஆக, நீங்கள் அறிவு என்றால் என்ன, நேர்மையென்றால் என்னவென்று புரிந்து கொண்டீர்களா?

பாப்: ஒரு வகையாக... ஒரு வகையாக.

ஸ்ரீல பிரபு பாதா: வேறு ஏதாவது வகை இருக்கிறதா? (பாப் சிரிக்கிறார்). வேறு வகை இருந்தால் அதைப் புறக்கணி யுங்கள். (பாப் மீண்டும் சிரிக்கிறார். ஸ்ரீல பிரபு பாதாவும் சிரிக்கிறார்.) வேறு என்ன வகை கிரிராஜ்?

கிரிராஜ்: இல்லை.

ஸ்ரீல பிரபு பாதா: மாற்று வழி இருக்கிறதா? யாரும் எதிர்க்கக் கூடிய எதையும் நாம் சொல்வதில்லை. அதற்கான அனுப வம் நமக்கு உண்டு. சொல்லப் போனால் நாம் எல்லா

ரையும் எதிர்க்கொண்டழைக்கிறோம். - 'கேள்விகள் உண்டா' என்று கேட்கிறோம். இதுவரை கிருஷ்ணர் நமக்குப் பாதுகாப்பு அளித்து வந்திருக்கிறார். பெரிய பெரிய கூட்டங்களில், பெரிய பெரிய நாடுகளில் பேசிய பிறகு 'கேள்விகள் உண்டா' என்று கேட்டிருக்கிறேன்.

பாப்: இப்போது எனக்குக் கேள்விகள் எதுவுமில்லை.

ஸ்ரீல பிரபு பாதா: லண்டனில்... அந்த இடத்தில் எத்தனை பிரசங்கங்கள்?... எந்த இடம்? கான்வே ஹால்?

ஒரு பக்தர்: பன்னிரண்டு நாட்கள். கான்வே ஹாலில்.

ஸ்ரீல பிரபு பாதா: கான்வே ஹால்.

ஒரு பக்தர்: பன்னிரண்டு நாட்கள்.

ஸ்ரீல பிரபுபாதா: ஆம். ஒவ்வொரு கூட்டத்திலும் முடிவில், "கேள்விகள் உண்டா?" என்று கேட்டிருக்கிறேன்..

பாப்: உங்களைக் கேள்விகள் கேட்டார்களா?

ஸ்ரீல பிரபு பாதா: ஓ; ஆம். பல முட்டாள்தனமான கேள்விகள். (எல்லோரும் சிரிக்கிறார்கள்)

பாப்: இன்னொரு கேள்வி கேட்கிறேன். முட்டாள்தனமாக விருப்பதென்றால் என்ன?

ஸ்ரீல பிரபு பாதா:அறிவில்லாமலிருப்பது முட்டாள்தனம்.

ஒரு இந்திய கனவான்:ஸ்ரீல பிரபு பாதா! நான் ஒரு கேள்வி கேட்கலாமா?

ஸ்ரீல பிரபு பாதா: சரி.

இந்தியக் கணவான்: சிறிது காலத்திற்கு முன்பு கல்கத்தாவில் 'பிராணிகளை இம்சிப்பதைத் தடுக்கும் வாரம்' என்று அனுசரித்தார்கள்.

ஸ்ரீல பிரபு பாதா: (உடனே சிரித்து விடுகிறார்) இது மற்றுமொரு முட்டாள்தனம். இம்சையைத் தடுப்பது என்று விளம்பரப்படுத்திக் கொண்டு பிராணிகளைக் கொல்லும் ஆயிரகணக்கான களங்களை வைத்திருக்கிறார்கள். பார்த்தீர்களா? இது இன்னொரு முட்டாள்தனம்.

இந்திய கனவான்: நான் கேட்க விரும்பியது...

ஸ்ரீல பிரபு பாதா: கேட்பதென்ன?... நீங்கள் கேட்பதற்கு முன்பாகவே நான் பதில் சொல்கிறேன். (எல்லோரும் சிரிக்கிறார்கள்) அது மற்றுமொரு முட்டாள்தனம். அவர் கள் தொடர்ந்து விலங்குகளுக்குத் தீங்கிழைத்துக் கொண்டு கழகங்களும் அமைக்கிறார்கள்...

பாப. ஒரு வேளை அது...

ஸ்ரீல பிரபு பாதா: திருடர்களின் கூட்டமொன்று 'நல்லவர்கள் கழகம்' (Good man and Company) என்று பெயர் பலகை வைத்துக் கொள்கிறார்கள் என்றால் - இப்படிப் பட்ட பெயர்ப்பலகைகளை நீங்கள் காணலாம்.

சியாம சுந்தர்: நமது சான்பிரான்ஸிஸ்கோ ஆலயத்தின் சொந்தக் காரரின் பெயர் Goodman.

ஸ்ரீல பிரபு பாதா: இவர்களின் தத்துவம் என்னவென்றால், ஒரு விலங்குக்கு போதுமான உணவு கொடுக்காமலிருப்பது கொடுமை. எனவே, அதை பட்டினி போடுவதை விடக் கொல்வதே மேல். இது இவர்களின் கோட்பாடு.

பாப்: ஆம்.

ஸ்ரீல பிரபு பாதா: அதற்குத் துன்பம் தருவதைவிடக் கொல் வதே மேலென்று அவர்கள் சொல்கிறார்கள். அந்தக் கோட்பாடு கம்யூனிச நாடுகளில் பரவி வருகிறது. பாட் டனார்-வயதானவர்-தாளமாட்டாமல் துன்பப்படுகிறார். அவரின் உயிரைப் போக்கிவிடுவதே நல்லது என்கிறார் கள். அங்கே ஆப்பிரிக்காவில்- முப்பாட்டனார்களைக் கொல்வதற் கென்றே விழாஏற்பாடு செய்யும் ஒரு வகை மனிதர்கள் இருக்கிறார்கள். இல்லையா? ஆம்.

சியாம்: அவர்களைக் கொன்று சாப்பிடுகிறார்களா?

ஸ்ரீல பிரபு பாதா: ஆம். (சியாம் சிரிக்கிறார்). இல்லையா?

ஒரு பக்தர்: எனக்கு ஒரு மாமாவும், மாமியும் இருந்தார்கள். பட்டாளத்தில் வேலை பார்த்தார்கள். அவர்கள் வெளி நாட்டிற்குப் போனபோது தங்கள் நாயைத் தங்களுடன் கூட்டிச் செல்ல முடியவில்லை. 'பாவம், நாய்- நம்மை விட்டுப் பிரிந்தால் அதற்குத் துக்கம் தாங்காது' என்று

சொல்லி அதைத் 'தூங்க வைத்து' விட்டார்கள்— அதாவது கொன்றுவிட்டார்கள்.

ஸ்ரீல பிரபு பாதா: காந்தியின் வாழ்க்கையிலும் ஒரு சம்பவம். அவர் ஒரு முறை ஒரு பசுவையோ, கன்றையோ கொன்று விட்டார். அது நோயால் வருந்திக் கொண்டிருந்தது. "அதை துன்பப்பட விடுவதைவிடக் கொன்றுவிடலாம்" என்று கட்டளையிட்டார்.

கிரிராஜ் : தனது சிஷ்யர்களின் பாவச் செயல்களால்குருநாதர் துன்பப்பட நேரிடலாமென்று நீங்கள் நேற்று சொன்னீர்கள். பாவச் செயல்கள் என்றால் என்ன?

ஸ்ரீல பிரபு பாதா: பாவச் செயல்களென்றால், "நான் நியமங்களை அனுசரிக்கிறேன்" என்று நீ வாக்களித்திருக்கிறாய். அப்படி அனுசரிக்காவிட்டால் அது பாவச் செயல்-வாக்களித்துவிட்டு அதை மீறி பல அபத்தமான காரியங்களைச் செய்கிறாய் என்றால் அது பாவகரமானதல்லவா?

கிரிராஜ்: ஆம் (இடைவெளி) ஆனால், நாங்கள் சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீல பிரபு பாதா: ஹ்-ம்?

கிரிராஜ்: நாங்கள் சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்று எங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. எவ்வளவு முயன்றாலும் சிலவற்றைச் சரியாக இன்னும் செய்ய முடியவில்லை.

ஸ்ரீல பிரபு பாதா: அதெப்படி? முயன்றாலும் முடியாதா?

கிரிராஜ்: கருத்தோடு கீர்த்தனம் செய்வதுபோல். சில சமயம் நாங்கள் முயற்சி செய்தும்...

ஸ்ரீல பிரபு பாதா: அது குற்றமாகாது. நீங்கள் ஏதோ செய்ய முயற்சிப்பதாக வைத்துக் கொள்வோம். அனுபவக் குறைவு காரணமாக சில வேளைகளில் நீங்கள் தவறி விட்டால் அது குற்றமாகாது. நீங்கள் முயற்சிக்கிறீர்கள். பாகவதத்தில் ஒரு பதம் வருகிறது. அதாவது, ஒரு பக்தன்

முடிந்த அளவு முயற்சித்தும் திறமைக்குறைவு காரணமாக சில சமயம் தவறுகிறான். அப்போது கிருஷ்ணர் அவனை மன்னிக்கிறார். பகவத்கீதையிலும் சொல்லப்பட்டிருக் கிறது.

"அபி சேத் ஸுதுராசாரோ
பஜதே மாம் அனன்ய-பாக்"

சில வேளைகளில் தன்னிச்சையாகவல்லாமல் முந்தைய பழக்கங்களின் காரணமாக-பழக்கம் இரண்டாவது இயற்கை-ஒருவன் அபத்தமாக ஏதாவதுசெய்துவிடுகிறான். அதனால் அவன் தவறு செய்துவிட்டதாக ஆகாது. ஆனால் அவன், "நான் இப்படி செய்துவிட்டேன்" என்று மனம் வருந்த வேண்டும். மீண்டும் அதை செய்யாமலிருக்க இயன்றவரை முயலவேண்டும். ஆனால், பழக்கம் இரண் டாவது இயற்கையால், சில வேளைகளில் கடினமாக முயற்சித்தும் மாயை தனது முழுபலத்தோடு உங்களைப் பிடித்துத் தள்ளுகிறது. குழியில் விழச்செய்கிறது. அது மன்னிக்கப்படலாம். கிருஷ்ணர் அதை மன்னிக்கிறார். ஆனால் தன்னிச்சையாக செய்பவர்கள் மன்னிக்கப்படு வதில்லை. "நான ஒரு பக்தன் என்ற பலத்தில், " நான் கீர்த்தனம் செய்கிறேன், எனவே எல்லா அபத்தங்களையும் செய்யலாம் அவை இல்லையென்றாக்கப்படும்" என்று நான் எண்ணினால் அது மிகப் பெரிய குற்றமாகும்.

கிருஷ்ண உணர்வில் முன்னேறுதல்

(கடிதப் பரிமாற்றம்)

ஸ்பிரிங் பீல்ட்,

ஜூன் 12, 1972.

அன்புள்ளபிரபு பாதா அவர்கட்கு,

என் பணிவான வணக்கங்களை சமர்க்கிறேன்.

நான் நியூயார்க் ஆலய பக்தர்களோடு தொடர்புகொண்டிருக்கிறேன். இவ்வளவு நேர்த்தியான முதிர்ந்த பக்தர்களின் தொடர்பால் நானும் கிருஷ்ண உணர்வில் சற்று முன்னேற்றம் காணவியலுமென நம்புகிறேன். என் காதலியும் ஆலயத்துக்கு வர ஆரம்பித்திருக்கிறாள். ஒரு சிறிது கீர்த்தனமும் செய்கிறாள். இந்தியாவிலிருந்து நான் அவளுக்கு எழுதும் வரை கிருஷ்ண உணர்வைப் பற்றி எதுவும் அறியாமலிருந்தாள். ஆத்ரேய ரிஷி எங்களை அன்புடன் அவருடைய இல்லத்திற்கு அழைத்திருந்தார். ஒரு லட்சியக் குடும்பத்தினரின் வாழ்க்கை எப்படி அமைந்துள்ளது என்பதை நாங்கள் பார்க்க முடிந்தது.

அமைதிப் படையிலிருந்து விலகுவதற்காக நான் ஏப்ரல் இறுதியில் பம்பாய்க்குப் போயிருநதேன். அப்போது ஒரு சிறு நோய் என்னை வந்தடைந்ததை நான் என் அதிஷ்டமாகவே கருதுகிறேன். அதனால் நான் பம்பாயில் இரண்டு வாரங்கள் தங்க நேரிட்டது; அந்தப் பொழுதை ஜூஹுவிலுள்ள அன்பான, முதிர்ந்த பக்தர்களுடன் கழித்தேன். ஆனால், என் துரதிஷ்டம், தாங்கள் அதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பு அங்கிருந்து சென்றுவிட்டீர்கள்.

நான் புரிந்து கொள்வது மிகவும் சொல்பம். ஆனால் கிருஷ்ண உணர்வு முறையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அதை மேலும் மேலும் மேற்கொள்வேனென்ற நம்பிக்கையிருக்கிறது.

லாஸ் ஏஞ்சல்ஸ் நகர ஆலயம் பற்றிய வர்ணனையை ஆத்ரேய ருஷியிடமிருந்து எதிர்பார்க்கிறேன். நியூயார்க்கில் தங்களை நேரில் கேட்கும் வாய்ப்பும கிடைக்குமென்று நம்பு கிறேன்.

சற்றும் தகுதியில்லாத ஒரு சிறுவனிடம் தாங்கள் காட்டிய பரிவுக்கு மிக்க நன்றி.

உண்மையுடன்.
பாப் கோஹென்

அ.ச. பக்திவேதாந்தஸ்வாமி
Iskcon, லாஸ்ஏஞ்சல்ஸ்,
ஜூன்16, 1972.

பாப்கோஹென்,

ஸ்பிரிங்பீல்ட், நியூ ஜெர்ஸி,

அன்புள்ள பாப்.

என் வாழ்த்துக்கள். உங்கள் ஜூன்12, 1972 தேதியிட்ட கடிதத்திற்கு மிக்க நன்றி. நீங்கள் தெரிவித்துள்ள உணர்ச்சிகள் எனக்கு மிகுந்த மகிழ் ச்சியைத் தருகின்றன. எங்களோடு நீங்கள் தொர்டர்பு கொண்டிருப்பதை அறிந்து மிகவும் மகிழ்கிறேன். நீங்கள் நல்ல இளைஞர் மிகுந்த புத்திசாலி, மென்மையான நடத்தையுள்ளவர் என்பது எனக்குத் தெரியும். எனவே வெகு விரைவில் கிருஷ்ணர் தமது ஆசிகளையெல்லாம் உங்களுக்கு வழங்குவார். கிருஷ்ண உணர்வைப் பெற்று முழுமையான மகிழ்ச்சியை நீங்கள் பெறுவீர்களென்ற நிச்சயம் எனக்குண்டு. ஜட இயற்கையில் (அதாவது மாயையில்) கொண்டுள்ள பற்றுதலைச் சன்னிச்சையாக விட்டுவிடுவதன் மூலம் ஒருவன் கிருஷ்ண உணர்வில் முன்னேறுகிறான். இப்படிப்பட்ட துறவு தவம் எனப்படும். ஆனால் நாம் தகுந்த காரணமில்லாமல் கடினங்களை மேற்கொள்ள விரும்புவதில்லை. எனவே உங்க

ளைப்போல் நல்ல, விஞ்ஞானம் மற்றும் தத்வபூர்வமான மனமுள்ளவர்கள் முதலாவதாக பரமான அறிவு என்றால் என்ன என்பதை உணரவேண்டும்.அந்த அறிவு வந்தால் தவம் தானே தொடரும். அப்போது ஆன்மீக வாழ்வில் முன்னேற்றம் காண்பீர்கள். அந்த அறிவைப் பெறுவது வாழ்வில் பக்குவ நிலையை அடைய விரும்பும் ஒவ்வொருவருக்கும் முதல்படி. எனவே, இயன்றவரை தினமும் எங்கள் நூல்களைப் படித்து, நியூயார்க் ஆலயத்திலுள்ள பக்தர்களோடு உரையாடி, விஷயத்தைப் பலகோணத்திலிருந்தும் புரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டுமென்று நான் உங்களுக்குப் பரிந்துரைக்கிறேன். அவ்வாறு செய்துவந்தால் படிப்படியாக உங்களுக்கு நம்பிக்கையேற்பட்டு, உங்கள் உண்மையான ஆவலாலும், பக்தி தொண்டாலும் முன்னேற்றம் காண்பீர்கள்.

ஆம். என்னுமிடத்திலும், கிருஷ்ண உறவு முறையிலும் நமபிக்கை கொள்வது உண்மையான அறிவைப் பெறுவதற்கான முதல் தேவை, ஒரே தேவையென்பது சரிதான். நம்பிக்கையிருந்தால் அறிவுதானே வரும். அறிவு அதிகரிக்கும் போது மாயையில் ஏற்படும் வெறுப்பும் அதிகரிக்கும். தன்னிச்சையாக ஜடச்சிக்கல்களைக் கைவிடும்போது முன்னேற்றம் ஏற்படுவது திண்ணம்.

மாயாப்பூரில் நாம் நடத்திய உரையாடல்களை இப்போது டேப்களிலிருந்து டைப் செய்து கொண்டிருக்கிறார்களென்று எண்ணுகிறேன். அதை ஒரு புத்தகமாக வெளியிடுகிறோம். ("Perfect Questions Perfect Answers" பக்குவமான கேள்விகள், பக்குவமான பதில்கள்) என்பது அதன் தலைப்பாகும. அதன் பிரதி ஒன்றை விநியோகத்திற்கு தயாரானதும் அனுப்பி வைக்கிறேன். ரத யாத்திரை விழாவிற்காக லண்டனுக்குச் செல்லும் வழியில் நியூயார்க்கில் இரண்டு 'மூன்று நாட்கள் தங்க விரும்புகிறேன். நியூயார்க்கை எப்போது வந்தடைவேன் என்பது தற்போது நிச்சயமில்லாமல் இருக்கிறது. ஜூலை முதற்பகுதியாயிருக்கும். நான் வந்து சேரும் தேதி பற்றி பலிமர்த்னாவுடன் தொடர்பு கொண்டிருங்கள். மீண்டும் நியூயார்க்கில் உங்களைச் சந்தித்து மகிழ விரும்புகிறேன்.

உங்களுக்கு ஏதாவது கேள்விகளிருக்குமானால் நாம் மீண்டும் பேசலாம்.

இந்தக் கடிதம் உங்களை வந்தடையும்போது நல்ல உடல் நிலையிலும் மகிழ்வான மனநிலையிலும் இருப்பீர்களென நம்புகிறேன்.

என்றும் தங்கள் நலனை விரும்பும்
அ.ச.பக்திவேதாந்தஸ்வாமி.

வருங்காலத்துக்காக முடிவெடுத்தல்

நியூயார்க் - ஜூலை 4, 1972

பாப்: உங்கள் அன்பான கடிதம் கிடைத்தது.

ஸ்ரீல பிரபுபாதா: ஓ.

பாப்: ஒரு வாரத்திற்கு முன்பு.

ஸ்ரீல பிரபுபாதா: நீங்கள் மிகப் புத்திசாலியான இளைஞர். இந்த தத்துவத்தைப் புரிந்துகொள்ள நீங்கள் முயற்சிக்கலாம். அது மிகவும் முக்கியமானது. புலன்களைத் திருப்தி செய்வதில் மக்கள் எவ்வளவோ சக்தியை வீணாக்குகிறார்கள். அடுத்த பிறவியில் நடக்கப்போவதென்ன என்பதை அவர்கள் அறியாமலிருக்கிறார்கள். அடுத்த பிறவி நிச்சயம் உண்டு. ஆனால் அறிவில்லாதவர்கள் அதை உணராமலிருக்கிறார்கள். இந்த வாழ்வு அடுத்து வரும் வாழ்விற்கான ஆயத்தமேயாகும் என்பதை அவர்கள் அறியாமலிருக்கிறார்கள். தற்போதைய கல்விமுறையும் பலகலைக் கழகங்களும் இந்த எளிதான அறிவைப் பெறாமல் இருளில் உள்ளன. ஒவ்வொரு நொடியும் நாம் உடலை மாற்றிக் கொண்டிருக்கிறோம்.- இது மருத்துவரீதியிலான உண்மை. இந்த உடலைவிட்ட பிறகு வேறொரு உடலை நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். அந்த உடலை எப்படி ஏற்றுக்கொள்ளபோகிறோம்? எப்படிபட்ட உடல்? இதை

யும் நாம் அறிய முடியும். உதாரணமாக, ஒருவன் பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும்போது பரிட்சையில் தேறினால் ஒரு என்ஜினீயராகவோ, டாக்டராகவோ, ஆகலாம். என்பதை அறிந்திருக்கிறான். அதுபோலவே, அடுத்த வாழ்வில் குறிப்பாக ஏதாவதொரு நிலையை அடைவதற்கு இந்த வாழ்விலேயே தயார் செய்துகொள்ளலாம்.

பார்பரா: (பாபின் மனைவி): மறுபிறவியில் என்னவாக ஆகவேண்டும் என்று இப்போதே முடிவுசெய்துகொள்ள இயலுமா?

ஸ்ரீல பிரபுபாதா: ஆம், முடிவு செய்யலாம். அடுத்த பிறவியில் நாம் கிருஷ்ணரிடம் செல்வதென்று முடிவு செய்துள்ளோம். இது எங்கள் தீர்மானம் - மீண்டும் வீடு சென்றடைவது, இறைவனிடம் திரும்பிச் செல்வது. நீங்கள் ஒரு என்ஜினியராகவோ, டாக்டராகவோ ஆவது என்று முடிவு செய்த பிறகு அந்த லட்சியத்தை அடைவதற்கான கல்வி யைப் பெற முற்படுகிறீர்கள். அதுபோலவே அடுத்த பிறவியில் என்ன ஆவது என்று நீங்கள் முடிவெடுக்க வேண்டும். அதை நீங்கள் தீர்மானிக்காவிடில் ஜட இயற்கை முடிவு செய்யும்.

பார்பரா: முந்திய பிறவியில் நான் கிருஷ்ண உணர்வுள்ளவளாக இருந்திருக்கக் கூடுமா?

ஸ்ரீல பிரபுபாதா: அது பொருட்டல்ல. ஆனால் நீங்கள் ஆகலாம். எங்கள் கிருஷ்ண உணர்வு இயக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

ஒரு பக்தர்: தனது முந்திய பிறவியில் கிருஷ்ண பக்தராயிருந்து மீண்டும் அப்படியே வந்திருக்கக் கூடுமோவென்று அவர்கள் கேட்கிறார்கள்.

ஸ்ரீல பிரபுபாதா: ஒருவர் முழுமையான பக்தராக இருந்தால் அவர் மறுபடியும் வருவதில்லை. ஆனால், சிறிது குறையிருந்தால் மீண்டும் வருவது சாத்தியம். ஆனால் குறையிருந்தாலும் நேர்த்தியானதொரு குடும்பத்திலேயே அவர் பிறக்கிறார். "சுசீ னாம் ஸ்ரீமதாம் கேஹேயோக ப்ரஷ்யோ"

பிஜாயதே. ('முழுமை பெறாத யோகி கடவுள் நம்பிக்கையுள்ள குடும்பத்திலோ, செல்வம் மிகுந்த உயர் குடும்பத்திலோ சென்று பிறக்கிறான்') அறிவு படைத்த மனிதனால் தன் வருங்காலத்தை நிர்ணயம் செய்துகொள்ள இயலும். மனித அறிவின் திறன் அது. அப்படி முடிவெடுக்க விலங்கால் இயலாது. நமக்குப் பகுத்தறியும் திறன் உண்டு. இப்படி செய்தால் நன்மை. அப்படிச் செய்தால் கெடுதி என்று நமக்குத் தெரியும். இது நமது மனித வாழ்விலுள்ள திறமை. இதைச் சரிவர பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

அதுவே மனித நாகரீகம்...

பார்பாரா: நீங்கள் எப்போதாவது கிருஷ்ணரைப் பார்த்திருக்கிறீர்களா?

ஸ்ரீல பிரபு பாதா: ஆம்.

பார் பாரா: நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

ஸ்ரீல பிரபு பாதா: தினமும், ஒவ்வொரு கணமும் பார்க்கிறேன்.

பார் பாரா: இந்த ஜட உடலிலா?

ஸ்ரீல பிரபு பாதா: கிருஷ்ணருக்கு ஜடவுடல் எதுவுமில்லை.

பார் பாரா: ஆலயத்தில் கிருஷ்ணரின் படங்களிருக்கின்றன.

ஸ்ரீல பிரபு பாதா: அது ஜடவுடலல்ல. உங்களுக்கு ஜடக்கண்களிருப்பதால் அதை ஜடமாகக் காண்கிறீர்கள். உங்கள் கண்கள் ஜடமானவையாகையால் ஆன்மீக வடிவை உங்களால் காண முடிவதில்லை. எனவே அவர் கிருபை கூர்ந்து, நீங்கள் பார்ப்பதற்காக ஜடவுடலில் இருப்பதாகத் தோன்றுகிறார். கருணை காரணமாக நீங்கள் பார்ப்பதற்கு வசதியான தோற்றத்தை வேற்கொண்டார் என்பதால் அவருக்கு ஜடவுடல் என்பதல்ல. அமெரிக்க ஜனாதிபதி அன்பு காரணமாக உங்கள் இல்லத்திற்கு வருகிறாரென்று வைத்துக்கொள்வோம். அதனால் அவர் தகுதியும், உங்கள் தகுதியும் ஒன்றாகிவிடுகிறது என்பதல்ல. அது அவரது அன்பைக் காட்டுகிறது. அன்பின் காரணமாக அவர் உங்கள் வீட்டிற்கு வரலாம். அதனால் நீங்களும் அவரும் சமமென்றாகிவிடாது. அதுபோலவே, நமது ஊனக்கண்

கொண்டு கிருஷ்ணரைக் காணமுடியாதென்பதால், அவர் நமக்கு ஒரு சித்திரமாகவோ, கல் அல்லது மரத்தாலான சிலையாகவோ தோன்றுகிறார். கிருஷ்ணர் இந்த சித்திரங் களினின்றோ, மரச்சிலையினின்றோ வேறுபட்டவரல்ல; ஏனென்றால் எல்லாம் கிருஷ்ணரே.

பார்பரா: நாம் இறந்த பிறகு நமது ஆவி என்னவாகிறது?

ஸ்ரீல பிரபு பாதா: அது வேறொரு உடலை ஏற்கிறது.

பார்பரா:உடனேயா?

ஸ்ரீல பிரபு பாதா: ஆம். நீங்கள் வீடு மாற்றுவதற்கு முன் புதிய வீடு ஒன்றை முன்கூட்டியே ஏற்பாடு செய்துவைத்துக் கொண்டு பின்பு இதைவிட்டு அங்கு செல்வதுபோல்.

பார்பரா: அப்படியானால் எந்த மாதிரியான உடல் நமக்கு கிடைக்குமென்று முன்கூட்டியே நாம் அறியமுடியுமா?

ஸ்ரீல பிரபு பாதா: ஆம். ஆனால் அதற்கான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். இல்லாவிடில் இயற்கை அந்த ஏற்பாட்டைச் செய்யும். அறிந்தவர்கள் அங்குள்ளதை அறிவார்கள். அறியாதவர்களுக்கு இயற்கை வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும். இதை நீங்கள் அறியாவிட்டால் நீங்கள் பக்குவமடையவில்லையென்று பொருள். எனவே, சந்தர்ப்பவசமாக, இறக்கும் தருவாயில், உங்கள் மனப்பாங்கு வேறொரு உடலை உருவாக்கும்; இயற்கை அதை ஏற்பாடு செய்துதரும்.

பார்பரா: கீர்த்தனம்-கீர்த்தனம் எவ்வகையில் பயன்படுகிறது?

ஸ்ரீலபிரபுபாதா: அதை நீங்கள் இந்தச் சிறுவர்களைக் (சிஷ்யர்களை) கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். அவர்க்ள் விளக்கம் சொல்வார்கள்.

பாப்: கிருஷ்ணர் எல்லாவற்றையும் ஆள்கிறார் என்றால் பக்த னல்லாத ஒருவனை அவர் எப்படிக் கட்டுப்படுத்துகிறார்?

ஸ்ரீலபிரபுபாதா: மாயையால். அரசாங்கம் எல்லாவற்றையும் ஆள்வது போல்; அரசனின் பல்வேறு. இலாக்காக்கள் நாட்டை ஆள்வதுபோல்.

பாப்: கிருஷ்ணர் ஒரு பக்தரை எவ்வாறு ஆள்கிறார்?

ஸ்ரீலபிரபுபாதா: நீங்கள் உங்களுக்குப் பிரியமானவரைக் கட்டு படுத்துவதுபோல். உதாரணமாக, உங்களுக்குப் பிரியமான குழந்தையை அவனுடைய நன்மைக்காக கட்டுபாட்டில் 'வைத்திருக்கிறீர்கள். அவன் நெருப்பைத் தொடப்போ னால் நீங்கள் உடனேயே, 'டேய் கண்ணா,' அதைத் தொடாதே' என்று தடுப்பீர்கள் அதுபோலவே, கிருஷ்ண உணர்விலிருநது பக்தன் எப்போதுமே தவறான வழியில் செல்லவிடப்படமாட்டான். ஏனென்றால், கிருஷ்ணர் எப் போதும் அவனை வழிநடத்திக் கொண்டிருக்கிறார். கிரு ஷ்ண உணர்வில்லாதவர்கள் மாயையின் வசப்பட்டிருக் கிறார்கள் - மாயை வேண்டியதைச் செய்யும்; நீங்கள் அதைக் கண்டிருக்கிறீர்கள்.

பாப்: நாம் எப்போது பிறப்போம், எப்போது இறப்போ மென்று முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டுள்ளதா? நான் பிறக்கும்போது என் வாழ்நாள் இவ்வளவு என்று குறிப் பிடப்பட்டுள்ளதா?

ஸ்ரீல பிரபுபாதா: ஆம்.

ஒரு பக்தன்: அதை அவர் மாற்ற முடியாதா?

ஸ்ரீலபிரபு பாதா: இல்லை. அவ்ர் மாற்றமுடியாது. ஆனால் கிருஷ்ணர் மாற்ற முடியும்.

பக்தர்: அவர் தற்கொலை செய்துகொண்டால்; அதுவும் முன்பே நிர்ணயிக்கப்படுகிறதா?

ஸ்ரீலபிரபு பாதா:முன்பே நிர்ணயிக்கப்படுவதில்லை. உங்க ளுக்கு ஒரு சிறிது சுதந்திரம் இருப்பதால் நீங்கள் அப்படி செய்யலாம். தற்கொலை செய்வது இயல்பான காரிய மல்ல. அது இயற்கைக்குப் புறம்பானது. நமக்குச் சுதந்திர மிருப்பதால் இயற்கையிலிருந்து இயற்கை அற்ற நிலைக் குச் செல்லலாம். ஒரு கைதி இயல்பாகச் சிறையிலிருந்து வெளியே செல்ல முடியாது. ஆனால் எப்படியோ ஒரு வழியில் சிறைச் சுவரைத்தாண்டிக் குதித்து வெளியேறி விடுகிறான். அப்போது அவன் திரும்பவும்

குற்றவாளியாகி சிறை தண்டனை அடைகிறான். அவன் கைது செய்யப்படுகிறான். அவனது தண்டனைக்காலம் மேலும் நீடிக்கிறது. எனவே, இயல்பான முறையில் நாம் விதியை மீறமுடியாது. அப்படிச்செய்தால் தண்டனை யடைவோம். ஆனால், நாம் கிருஷ்ண உணர்வில் இருந் தால் நமது விதியைக் கிருஷ்ணர் மாற்ற முடியும். நாம் செய்வதல்ல. கிருஷ்ணர் செய்வார். கிருஷ்ணர் சொல் கிறார்: "அஹம் த்வாம் ஸர்வபாபேப்யோ மோக் ஷயிஸ்யாமி" "நான் உனக்குப் பாதுகாப்பு அளிக்கிறேன். அந்த மாறுதல் எனது பாதுகாப்பிற்காக ஏற்படுகிறது. இரு நிலைகள் உள்ளன. பக்தனல்லாதவன், பக்தன், பக்தனல் லாதவன் ஜட இயற்கையின் கட்டுப்பாட்டிலிருக்கிறான். பக்தன் கிருஷ்ணரின் நேரடியான ஆளுகையில் இருக் கிறான். ஒரு பெரிய ஸ்தாபனத்தின் நிர்வாகியின் அலுவ லகத்தில் பல அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர்களெல் லாம் பல இலாக்காக்களின் வேற்பார்வையாளர்களின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறார்கள். அந்த நிர்வாகி தன் வீட்டிற்கு வெளியில் நேரடியாக ஆட்சி நடத்தாவிட் டாலும் அதே மனிதர் தன் வீட்டில் தன் குழந்தைகளை நேரடியாகக் கண்காணிக்கிறார். ஆக, வீட்டிலும், வெளி யிலும், எப்போதும் அவர் ஆளுநரே. அதுபோலவே, கடவுள் எப்போதும் ஆளுளராகவே விளங்குகிறார். ஒரு வர் பக்தராகும்போது அவர் கடவுளால் ஆளப்படுகிறார். பக்தரல்லாதபோது கடவுளின் செயலாளரான மாயையால் ஆளப்படுகிறார். எவரும் ஆட்சிக்குட்பட வேண்டும். உதா ரணமாக, ஒவ்வொரு அமெரிக்க குடிமகனும் அரசா ங்கத்தின் ஆட்சிக்குட்பட்டவன். அவன் ஒழுங்காக நடந்து கொள்ளும் வரை சிவில் இலாகா அவனை ஆள்கிறது. அவன் ஒழுங்கற்றவனாக ஆகும்போது குற்றவியல் இலாகா அவன் மீது ஆட்சி செலுத்துகிறது. "என்னை யாரும் கட்டுபடுத்தமுடியாது." என்று அவன் சொல்ல முடியாது. அது சாத்தியமில்லை. எல்லாரும் ஆட்சிக்குட் பட்டவர்களே. ஒருவன் "நான் ஆட்சிக்குக் கட்டுப்பட் டவனல்ல" என்று சொன்னால் அவன் அறிவிழந்தவன்;

பைத்தியக்காரன் - எல்லாரும் கட்டுப்பாட்டுக்குட்பட்ட வர்கள். ஒன்று நேராகக் கடவுளின் ஆட்சிக்கு உட்பட் டிருக்க வேண்டும். அல்லது கடவுளின் செயற்பிரிவான மாயைக்கு உட்பட்டிருக்க வேண்டும். மாயையால் ஆளப் படும்போது உங்கள் வாழ்வு வீணாகிறது. பல பிறவி களடுத்து உடல்களை மாற்றிக்கொண்டு ஜட நிலை யிலேயே இருக்க வேண்டி வரும். ஆனால் கடவுளின் ஆட்சிக்கு வருவதென்று நீங்கள் முடிவெடுத்தால் இந்த உடலுக்குபின் நீங்கள் வீடு திரும்புகிறீர்கள். மீண்டும் முழுமுதற் கடவுளை அடைகிறீர்கள். அப்போது உங்கள் வாழ்வு கடைத்தேறுகிறது. கட்டுப்பாடில்லாமல் நீங்கள் வாழ முடியாது.அது சாத்தியமில்லை என்பது அறிவு. அதைப்பற்றி பகவத்கீதையில் சொல்லப்பட்டிருப்ப தாவது : "பஹூனாம் ஜன்மனாம் அந்தே ஞானவான்மாம் ப்ரபத்யத்தே." "பல பிறவிகளெடுத்து ஆராய்ச்சி செய்து ஞானவான் என்னை சரணடைகிறான்." "வாசுதேவ: ஸர்வம் இதி: "கிருஷ்ணா, நீரே எல்லாம்." எனவே நான் உம்மிடம் வந்திருக்கிறேன். என்னை ஏற்றுக்கொள்ளும். நான் உம்மை முழுவதுமாக சரணடைந்திருக்கிறேன். நீர் என்னை ஆட் கொள்வீராக. இது வரை நான் இந்த கயவர்களால் ஆளப்பட்டு வந்திருக்கிறேன். அதில் எனக்கு எவ்வித பயனும் இல்லை. என்னுடைய புலன்களால்கட்டப் பட்டிருந்தேன். புலன்களின்ஆளுகையில் நான் குடும்பம் சமுதாயம். நாடுஎன்று சொல்லப்படுவனவற்றிற்கெல்லாம் சேவை செய்திருக்கின்றேன். ஆனால் எதுவும் எனக்கு திருப்தி அளிக்கவில்லை. இப்போது எனக்கு நல்லுணர்வு ஏற்பட்டிருக்கிறது. உங்கள் ஆளுகைக்கு என்னை உட்ப டுத்துகிறேன். புலன்களாகிய நாய்க்கு கட்டுப்படுவதற்கு பதிலாக கடவுளால் ஆளப்படுவதையே நான் விரும்பு கிறேன." இது கிருஷண உணர்வு. மனிதன் ஒரு நாயால் எப்படி ஆளப்படுகிறான் என்பதை நீங்கள் பார்த்திருக் கிறீர்களா? தெருவில் நாய் நின்று மலத்தை வெளிப்படுத்து கிறது. அதுவரை அதன் எஜமானன் காத்திருக்கிறான் இல்லையா? அது மலமும் மூத்திரம் கழிக்கிறது. அதற்காக காத்திருப்பவன் "நானே எஜமானன்" என்று எண்ணுகிறான்.

ஆனால் நாயால் கட்டுப்படுத்தப்படுபவன் அவனே அது மாயை. அவன் நாயின் சேவகனாக ஆகிறான். ஆனால் 'நானே எஜமானன்' என்று எண்ணிக் கொண்டிருக்கிறான். எனவே, ஒருவன் கிருஷ்ண உணர்வை பெற்றாலன்றி அவனுக்கு அறிவு ஏற்படாது. இந்தக் கயவன் தன் நாய்க்கு கட்டுப்பட்டவன் என்பது நமக்குத் தெரியும். ஆனால் அவன் தானே எஜமானன் என்று எண்ணிக்கொண்டிருக்கிறான். நமக்குப் புரிகிறது.-நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

அவன் நாய்க்குக்கட்டுப்பட்ட வனல்லவா?

பாப்: ஆம். அப்படித்தான்.

ஸ்ரீல பிரபு பாதா: ஆனால் அவனோ, 'நான் நாயின் எஜமானன்' என்றெண்ணுகிறான். குடும்பஸ்தன் தன் மனைவி, குழந்தைகள், வேலைக்காரர்கள், எல்லோருடைய ஆளுகைக்கும் உட்பட்டிருக்கிறான். ஆனால் அவன் தன்னை குடும்பத்தின் எஜமானனாக நினைக்கிறான். ஜனாதிபதி நிக்ஷன் தன்னை நாட்டின் அதிகாரியாக கருதுகிறார். ஆனால் அவருக்கும் கட்டுப்பாடுகள் உண்டு. பொது மக்கள் - அவருடைய ஆட்சிக்கு உட்பட்டவர்கள், - அவரை உடனடியாக பதவிநீக்கம் செய்யலாம். அப்போது அவர், 'நான் உங்களுக்கு மிகச் சிறந்த சேவையை அளிக்க தயாராக இருக்கிறேன். உங்களது முதல்தர சேவகனாக விளங்குவேன்' என்று உறுதி கூறுவார். அதனால் மக்கள் அவருக்குத் தேர்தலில் வாக்களிப்பார்கள். 'சரி, நீங்கள் ஜனாதிபதியாகவிருங்கள்' என்பார்கள். 'என்னை மீண்டும் தேர்ந்தெடுங்கள். என்று அவர் விளம்பரப்படுத்துகொண்டிருக்கிறார். அதாவது அவர் சேவகர் என்று பொருள். ஆனால் அவர் தன்னை தலைவனாக எண்ணுகிறார். அதுவே உள்ள நிலை. மாயை. மாயையின் வசப்பட்டவன் தன்னை எஜமானனாக எண்ணிக் கொள்கிறான். ஆனால் அவன் சேவகனே. ஒரு பக்தன் தன்னை எஜமானனாக கருதுவதில்லை. சேவகன் எ ன்றே எண்ணுகிறான்.சேவகன் தன்னை எஜமானனாக எண்ணுவது மாயை-ஆனால் சேவகன் தன்னை எஜமானனாக எண்ணாதபோது மாயையிலிருந்து விடுபடுகிறான். அது

முக்தி'-விடுதலை. பொய்யான எண்ணங்களின் பிடியில் அவன் இனியும் இல்லை. இந்த விஷயத்தைப்பற்றி நன் றாக சிந்தித்துப்பாருங்கள். பக்தன் எப்போதுமே பொய் யான எண்ணங்களுக்கு கட்டுப்படுவதில்லை. அவன் தன் நிலலயை உணர்ந்தவன். 'ஸ்வரூபேண வ்யவஸ்திதி: முக்தி (விடுதலை) என்றால் தன் சுயமான நிலையில் அமர்தல் என்று பொருள். நான் சேவகன். நான் சேவகன் என்பதை நான் உணர்ந்தால் அது எனக்கு விடுதலை. நான் எஜமா னன் என்றெண்ணினால் அது அடிமைத்தளை. இதுவே கட்டுண்ட வாழ்விற்கும் விடுதலையடைந்த வாழ்விற்கு மிடையே உண்டான வேறுபாடு. கிருஷ்ண உணர் விலுள்ள பக்தரெல்லாம் எப்போதும் தம்மை கிருஷ்ணரின் சேவகர்களாகவே கருதுகிறார்கள். எனவே அவர்களெல் லாம் முக்தி பெற்றவர்கள். அவர்கள் முக்தி பெறுவதற்காக முயற்சிப்பதில்லை. தமது சுயநிலையில் அமர்ந்தவர்களாத லால் ஏற்கெனவே முக்தியடைந்தவர்களாகிறார்கள். 'நான் எஜமானன்' என்ற பொய்யான எண்ணம் அவர்களுக் கில்லை. மற்றவர்கள் 'நானே எஜமானன்' என்று எண்ணு பவர்கள் அது மாயை .உங்கள் வாழ்வின் எந்த நிலை யிலும் நீங்கள் எஜமானனாக ஆகமுடியாது. சேவகனா கவே இருக்கவேண்டும். அதுவே உங்கள் நிலை. தானே எஜமானன் என்று செயற்கையாக ஒருவர் எண்ணக்கூடாது. அது கட்டுண்ட வாழ்வாகிறது. மேன்மையாளரான எஜமா னிடம் தன்னிச்சையாக சரணடையும்போது அது முக்தி.

முக்தியடைவதற்கென்று தனியாக ஒரு பக்தன் முயற்சிப்ப தில்லை. கிருஷ்ணரிடமோ, கிருஷ்ணரின் பிரதிநிதி யிடமோ, அவன் சரணடையும்போது முக்தியடைகிறான்.

பாப்: பிரபுபாதா அவர்களே: மத விஷயங்களில் ஈடுபடு பவர்கள், இந்த 'ஜீஸஸ் ப்ரீக்ஸ்', இன்னும் சிலரைப் போன்றவர்கள், ஏசு தங்களை வழிகாட்டிச் செல்வதாக உரிமை கொண்டாடுகிறார்கள். அப்படியிருக்க முடியுமா?

ஸ்ரீல பிரபுபாதா: ஆம். ஆனால் உண்மையில் அவர்கள் துணையை நாடுபவர்கள் அல்லர். கிறிஸ்தவர்கள் ஏசு தங்களை வழிநடத்துவதாகச் சொல்கிறார்கள் 'கொலை

செய்யாதிருப்பாயாக' என்று ஏசு சொல்கிறார். ஆனால் அவர்கள் கொலை செய்துகொண்டுதானிருக்கிறார்கள். இது இயேசு வழிநடத்துவதாக எப்படியாகும்? "நான் இயேசுவின் வழிநடக்கிறேன்' என்று சொன்னால் மட்டும் போதுமா?" ஆனால் நான் அவரின் வார்த்தைகளை மதிப்ப தில்லை"-இது வழி நடப்பதாகுமா? யாரும் ஏசு கிறிஸ்து வைப் பின்பற்றுபவர்களல்லர். ஏசு கிறிஸ்துவின் துணை கிடைக்கும். ஆனால் யாரும் அவரைச் சட்டை செய்வ தில்லை. தங்கள் பாவங்களைச் சுமக்கும் ஒரு ஒப்பந்தக் காரராகவே அவர்கள் ஏசுவை மதிக்கிறார்கள். அதுவே அவர்களின் தத்துவம். எல்லாதீயச் செயல்களையும் அவர் கள் செய்கிறார்கள். பாவம், ஏசு அதற்குப் பொறுப்பா கிறார். அது அவர்களின் மதம். எனவே அவர்கள் "எங்கள் மதம் மிகச் சிறந்தது. எங்களுடைய பாவங்களுக்காக ஏசு மரிக்கிறார்" என்கிறார்கள். இது நல்ல மதமா? ஏசுவிடம் அவர்களுக்கு அனுதாபம் இல்லை. அவர் எங்களது பாவ ங்களுக்காக மரணமடைந்திருக்கும்போது மீண்டும் நாம் ஏன் பாவங்களைச் செய்கிறோம்? அவ்வளவு உன்னதமான வாழ்வு நம்முடைய பாவங்களுக்காகத் தியாகம் செய்யப் பட்டது. எனவே நாம் ஏசுவைப் பின் பற்றவேண்டும், என்று அவர்கள் எண்ண வேண்டும். ஆனால் அதை வேறு விதமாகப் புரிந்துகொண்டு, "நாம் பாவங்களைத் தொட ர்ந்து செய்வோம்; நம்முடைய பாவங்களையெல்லாம் போக்க ஏசு கிறிஸ்து நம்மோடு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார். நான் செய்ய வேண்டியதெல்லாம், கோயிலுக்குச் சென்று பாவங்களை ஒப்புக் கொண்டு விட்டுத் திரும்பிவந்து எல்லா அபத்தங்களையும் செய்ய லாம்' என்று எண்ணினால், அது அறிவுடைய செயலா குமா?

பாப்: இல்லை.

ஸ்ரீல பிரபுபாதா: உண்மையில் ஏசு கிறிஸ்துவின் வழி நடப்ப வன் நிச்சயமாக விடுதலைபெறுவான். ஆனால் ஏசுவை உண்மையாகவே பின்பற்றுபவனைக் காண்பது அரிது.

ஸ்ரீல பிரபுபாதா: உண்மையில் ஏசு கிறிஸ்துவின் வழி நடப்ப வன் நிச்சயமாக விடுதலைபெறுவான். ஆனால் ஏசுவை உண்மையாகவே பின்பற்றுபவனைக் காண்பது அரிது.

பாப்: "ஜீஸஸ் ப்ரீக்ஸ்" என்ற இயக்கத்தில் சேர்ந்திருக்கும் இளைஞர்களைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்? அவர்கள் பைபிளை அடிக்கடி படிக்கிறார்கள்.

ஸ்ரீல பிரபுபாதா: ஆனால் வன்முறை பைபிளின் கட்டளை களுக்கு எதிரானது. பைபிளைப் பின்பற்றுகிறவர்கள் எப் படி கொலை செய்யலாம்?

பாப்: அவர்களில் ஒருவரை நான் இதைப் பற்றி கேட்டேன். ஏசுவும் மாமிசம் சாப்பிட்டதாக அவர் சொல்கிறார்.

ஸ்ரீல பிரபுபாதா; அது சரி. ஏசு எதை வேண்டுமானாலும் சாப் பிடலாம். அவர் வல்லமை மிக்கவர், ஆனால் கொலை செய்யாதிருப்பாயாக; கொல்வதை நிறுத்த வேண்டும்" என்று கட்டளையிட்டிருக்கிறார். அவர் வல்லமை மிக் கவர். அவர் இந்த உலகம் முழுவதையும் சாப்பிடலாம். ஏசுவோடு உங்களை ஒப்பிடமுடியாது. ஏசுகிறிஸ்துவாக உங்களை நீங்கள் பாவனை செய்துகொள்ள முடியாது. அவரது கட்டளைப்படி நடப்பதே உங்கள் கடமை. அப்போது நீங்கள் இயேசுவால் வழிநடத்தப்படுவதாகச் சொல்லிக்கொள்ளலாம். அதுதான் உண்மையான கீழ்படிதல். பகவத் கீதையில் அது விளக்கப்பட்டிருக் கிறது. ஈச்வரனாக இருப்பவர் வல்லமைகளைப் பெற்றுள் ளவர். எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் நாம் அவரைப்போல் நடக்க முயற்சிக்கக் கூடாது. அவர் கட்டளைப்படி நாம் நடக்கவேண்டும். "அவர் சொல் கிறபடி நான் செய்வேன்" என்றிருக்க வேண்டும். ஏசு மாமிசம் சாப்பிட்டதாகச் செல்கிறீர்கள். அப்படியே ஆனாலும் அவர் எந்த நிலையில் மாமிசம் உண்டார் என்று உங்களுக்குத் தெரியாது. அவர் மாமிசம் சாப்பிடு கிறவராயிருந்தும் மற்றவர்கள் கொலை செய்யக்கூடா தென்று புத்தி சொன்னார். அப்படியானால் முரண் பாடாகப்பேசினார் என்கிறீர்களா?

யானால் ஏன் மாமிசம் உண்டார்? அது அவருக்குத் தெரியும். ஆனால் நாம் மாமிசம் உண்ணக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். அதை நாம் பின்பற்றவேண்டும். அதுதான் சரியானது. நீங்கள் ஏசுவல்ல-நீங்கள் அவராக முடியாது. அவர் கடவுளுக்காகத் தன்னை தியாகம் செய்திருக்கிறார். உங்களால் அப்படி செய்ய முடியுமா? எனவே, நீங்கள் எப்படி அவர் போலவே செய்ய முற்படலாம்? மாமிசம் உண்பதில் மட்டும் ஏசுவைப் போல் நடக்கவிரும்பு கிறீர்கள். அவரைப்போலவே நீங்களும் கடவுள் உணர்வைப் பரப்புவதற்காக ஏன் உங்கள் உயிரைத் தியாகம் செய்யக்கூடாது? என்ன நினைக்கிறீர்கள்? அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள்-ஆனால் கடவுளுக்காக என்ன செய்கிறார்கள்? சூரியன் மூத்திரத்தை கிரகிக்கிறான். உங்களால் முடியுமா? சூரியனைப்போல் நீங்களும் நடக்கவிரும்பினால், சூரியன் மூத்திரத்தை கிரகிக்கிறான். நானும் குடிக்கிறேன்" என்று செய்வீர்களா? ஏசு கிறிஸ்து வல்லமை வாய்ந்தவர். அவர் எதுவும் செய்யலாம். ஆனால் நாம் அவராக முடியாது. அவரது கட்டளையை நிறைவேற்றுவது மட்டுமே நம் கடமை. அதுவே உண்மையான கிறிஸ்துவம். வல்லமைமிக்க ஒருவரைப் போல் நாமும் நடக்கமுடியாது. அது தவறு. வேதிலக்கியத்தில் வருகிறது: விஷம்மிக்க ஒரு சமுத்திரம் இருந்தது. அதை என்ன செய்வதென்று தெரியாமல் மக்கள் திகைத்தார்கள். உடனே சிவபெருமான் நான் அதைக் குடித்து விடுகிறேன் என்றார். விஷம் முழுவதையும் குடித்துத் தொண்டையில் நிறுத்திக்கொண்டார் உங்களால் விஷம் குடிக்க முடியுமா? சமுத்திரம் முழுவதுமில்லாவிட்டாலும் ஒரு லோட்டாவாவது? ஆக நம்மால் சிவனாக ஆக முடியுமா? நாம் விஷம் குடிக்கவேண்டுமென்று சிவன் நமக்குச் சொல்லவில்லை. சிவன் கஞ்சாப்புகைப் பிடித்ததாக இந்த L.S.D., கஞ்சாக் குடியர்கள் சொல்கிறார்கள். ஆனால் சிவன் விஷம் நிறைந்த சமுத்திரம் முழுவதையும் குடித்தார். உங்களால் முடியுமா? சிவபெருமானின் கட்டளைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். வழிபாடுகளி

ஆனால் சிவன் விஷம் நிறைந்த சமுத்திரம் முழுவதையும் குடித்தார். உங்களால் முடியுமா? சிவபெருமானின் கட்டளைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். வழிபாடுகளிலெல்லாம் சிறந்தது விஷ்ணு வழிபாடேயென்று சிவன் சொல்லியிருக்கிறார். "விஷ்ணோர் ஆராதனம் பரம்" எந்த வழிபாடு முறை மிகச் சிறந்தது என்று பார்வதி அவரைக் கேட்டபோது அவர் மிகச் சிறந்த வழிபாடு விஷ்ணுவை வழிபடுவதே என்றார். எத்தனையோ தேவதைகளிருக்கிறார்கள். ஆனால் அவர் விஷ்ணு பூஜை சிறந்ததென்று பரிந்துரைத்தார். விஷ்ணுவை வணங்குவதைவிட விஷ்ணு பக்தனை வழிபடுவது மேலும் சிறந்தது. விஷ்ணுவின் சேவகர்களை, அல்லது விஷ்ணுவோடு சம்மந்தப்பட்டவர்களை வணங்குவது. உதாரணமாக, இந்தத் துளசிச் செடியை வணங்குகிறோம். நாம் எல்லாச் செடியையும் பூஜிப்பதில்லை. ஆனால் துளசி கிருஷ்ணரோடு (விஷ்ணுவோடு) மிக நெருங்கிய தொடர்புள்ளவராகையால் அவளைப் பூஜிக்கிறோம். அதுபோலவே, கிருஷ்ணரோடு மிக நெருங்கிய தொடர்புள்ள எதுவானாலும் அதைப் பூஜிப்பது விஷ்ணுவை வணங்குவதை விட மேலானது.

பாப்: ஏன் அப்படி?

ஸ்ரீல பிரபுபாதா; ஏனென்றால் கிருஷ்ணரை அது மகிழ்விக்கும். உங்களிடம் ஒரு நாய் இருந்து அதை உங்கள் நண்பர்கள் தட்டிக்கொடுத்தால் (ஸ்ரீல பிரபுபாதா தட்டிக் கொடுப்பது போல் செய்துகாட்டுகிறார்) நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள். "ஓ, என் நண்பன் நல்லவன்" என்று எண்ணுகிறீர்கள். எண் ணம் எப்படி போகிறது பார்த்தீர்களா? "ஆ, உங்கள் நாய் எவ்வளவு நேர்த்தியாயிருக்கிறது" என்று நண்பர்கள் சொல்லும்போது நாம் இதைப் பார்க்கிறோம்.

(சிரிக்கிறார்கள்.)

(சில இந்திய விருந்தினர்கள் அறைக்குள் வருகிறார்கள்.)

ஸ்ரீல பிரபுபாதா: பிரசாதம் எடுத்துக்கொள்ளுங்கள். (ஸ்ரீல பிரபுபாதா விருந்தினருடன் பேசிக்கொண்டிருக்கிறார். சில வேளைகளில் ஆங்கிலததில் சில வேளைகளில் ஹிந்தியில். நியூயார்க்கில் அவர் அன்று இருப்பது இறுதிநாள்.

கொண்டுவந்திருக்கிறார். அவருடைய சாமான்களைப் பக்தர்கள் காருக்கு எடுத்துச் செல்கிறார்கள். சிலர் பிரபுபாதாவின் அண்மைக்கால மொழிப் பெயர்ப்புப் பிரதிகளை ஒழுங்குப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். சிலர் மற்ற கடைசி நிமிச ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.)

சியாம சுந்தர்: எல்லாம் தயாராக இருக்கிறது. ஸ்ரீலபிரபுபாதா அவர்களே கார் நமக்காகக் காத்திருக்கிறது.

ஸ்ரீலபிரபுபாதா: நாம் புறப்படலாமா? சரி. ஹரேகிருஷ்ண!

முடிவுரை

ஜூலை19, 1976 அன்று தெய்வத் திரு.ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் என் மனைவியையும் என்னையும் தனது சிஷ்யர்களாகத் தீட்சை கொடுத்து ஏற்றுக் கொண்டு, பக்தி தேவி தாஸி, ப்ரஹ்ம தீர்த்த தாஸா, என்று எங்களுக்கு நாமகரணம் செய்தார்கள். அன்றைய நாளைப் பற்றி எண்ணிப்பார்க்கும்போது தெய்வத்திரு அவர்களையும் ஹரே கிருஷ்ண இயக்கத்திலுள்ள என் பக்த சகோதரர்களையும் சந்தித்ததற்கு நான் எவ்வளவு பாக்கியம் செய்திருக்க வேண்டுமென்பதை உணர்கிறேன். தீட்சையில் எனக்கு ஜபமாலை தரப்பட்டபோது நியமங்களை அனுஷ்டிப்பதென்றும் தினமும் பகவந்நாமாவை உச்சாடனம் செய்வதென்றும் வாக்களித்தேன். நான்கு வருஷங்களுக்கு முன்பு இந்த நியமங்களை மேற்கொள்ளும்படி ஸ்ரீல பிரபுபாதா எனக்கு அறிவுரை வழங்கியிருந்தார். ஆறே மாதங்களில் நான் பக்தர்களைபோல் ஆகிவிடுவேனென்றும், உலக ஆசைகள் பற்றிய திரைப்படங்கள், உணவு விடுதிகள் போன்ற அவசியமில்லாத அனர்த்தங்கள் என்னை வசிகரீக்கமாட் டா என்றும் அவர் சொல்லியிருந்தார். மனித வாழ்வு முழுவதுமே புனிதமடைவதற்காக ஏற்பட்டதென்று அவர் கூறியிருந்தார். புனிதமடைவதென்றால் என்னவென்று எனக்குத் தெரியாவிட்டாலும் அதில் எனக்கு அக்கறை ஏற்பட்டது. உயர்மட்ட உணர்வைப் பெறும் நம்பிக்கையோடு நான் அமை திப்படையில் சேர்ந்து இந்தியாவிற்குச் சென்றிருந்தேன். புலன்களை திருப்திசெய்வதே

எல்லாமாயிருக்க முடியாதென்று எனக்குத் தெரிந்திருந்தும் நான் புலன்களால் கட்டப்பட்டிருந்தேன். பின்னர், யோகம் என்றால் புலன்களின் தூண்டுதல்களிருந்து விடுதலை பெறுதல் என்று புரிந்துகொண்டேன். அமெரிக்காவிற்குத் திரும்பிய பிறகு புவியியல் பட்டபடிப்புப் பள்ளியைத் துவக்கினேன். எனக்குத் திருமணமாயிற்று; குடும்பப் பொறுப்புகளில் சிறிது சிக்கி னேன். ஆனாலும் ஸ்ரீலபிரபு பாதா அவர்களோடு உரையாடி யதையெல்லாம் அடிக்கடி நினைத்துக்கொள்வேன். அவர் களுடைய அடிப்படைக் கட்டளைகளில் ஒன்று பக்தர்களோடு கலந்து பழகவேண்டு மென்பது. இதை நான் மகிழ்ச்சியோடு செய்து வந்தேன். பக்தர்கள் நம்மின்று வேறுபட்டவர்கள். பரம புருஷனான கடவுளுக்கு அன்புத்தொண்டு செய்வதே வாழ் வின் நோக்க மென்றறிந்து புலன் திருப்திக்கான அல்ப விஷயங்களிலும் பொய்யான அகங்காரத்திலும் பிடிபடாமல் ஒதுங்கிநிற்பவர்கள். ஆலயத்திற்குச் செல்லும்போது புத்து ணர்வு பெறுவதை உணர்ந்தேன். படிப்படியாக என் மனைவியும் நானும் பல பக்தர்களின் நட்பைப் பெற்றோம். இயக்கத்திற்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற உணர்வு ஏற்பட ஆரம்பித்து. பல்கலைக் கழகத்தில் பக்தி-யோக சங்கத் தைத் துவக்கினேன். பிராயணமாக வரும் பக்தர்களுக்கு என் வீடு வழி தங்கும் இடமாகப் பயன்பட்டது.நாங்கள் ஸ்ரீலபிரபு பாதாவின் கட்டளைகளைப் பின்பற்றி வந்தபோது எங்கள் உணவில்கூடத் தூய்மை ஏற்பட்டது. இந்தியாவில் கிருஷ்ணரே கடவுள் என்று நான் உணராததால் பக்தர்களைபோல் என் உணர்வை அர்ப்பணம் செய்ய என்னால் இயலவில்லையென்று ஸ்ரீல பிரபுபாதாவிடம் சொல்லியிருந்தேன். எனவே அவர், உணவுண்பதற்கு முன் கடவுளுக்கு நன்றி சொன்னால் போது மென்று சொல்லி யிருந்தார். இதை நாங்கள் செய்துவந்தோம். இறுதியில் எங்கள் பக்தி முதிர்ச்சியடைந்தது. நாங்களும் எங்கள் உணவைப் பரம புருஷனுக்கு அர்ப்பணம் செய்யத் தொடங் கினோம். உன்னதமான பிரபுவுக்காக சமையல் செய்வது அற்புதமான அனுபவம்! உண்மையில் இது எங்களை நாக்கின் பிடியிலிருந்து விடுவித்தது. இறுதியாக, ஆலய வாழ்வில் முழுவது மாக ஈடுபட நாங்கள் ஆயத்தமாகவிருந்தோம். கிருஷ் ணரின் அருளால் டெக்ஸாஸில் ஒரு ஆலயத்திற்கருகிலிருந்த

இடத்தில் எனக்கு வேலை கிடைத்து. ஆலய நிகழ்ச்சிகளி லெல்லாம் பங்கு பெறத் துவங்கினேன். இப்படியாக ஸ்ரீலபிரபு பாதா முன்பு கூறியதுபோல் எல்லா அனர்த்தங்களும் எங்களை விட்டு மறைந்தன. ஏதோ ஒரு பாரத்தை எங்களின் தோள் களிலிருந்து இறக்கிவிட்டதுபோல் உணர்ந்தோம். இனியும் நாங்கள் எங்கள் புலன்களின் சேவகர்களாக இருக்கவில்லை. கடவுளுக்கும் அவர்களின் பக்தர்களுக்கும் சேவை செய்பவர் களானோம். ஸ்ரீலபிரபு பாதா அவர்களின் கட்டளைகளின் உயர்வு அப்போது தெளிவாகியது. மனிதன் கழுதையைப் போல் உழைத்து நாயைப் போல் அனுபவிக்கப் பிறந்த வனல்ல. புனிதமடைதலென்றால் உயர்நிலையிலான உணர் வைப் பெறுதல் என்று பொருள். நானும் தீட்சை பெற்றவ னென்றாலும் என் பக்த சகோதரர்களின் ஆன்மீக உணர்வு நிலையை இன்னும் வியந்து பாராட்டுகிறேன். மேலும் முன்னேற்றமடைய விரும்புகிறேன்.

ப்ரஹ்மதீர்த்தாஸ அதிகாரி

(பாப்கோஹென்)

ஹ்யூஸ்டன், டெக்ஸாஸ்

அக்டோபர்16, 1976

உச்சாடனம் செய்யவும்!
ஹரே கிருஷ்ண
ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண
ஹரே ஹரே

ஹரே ராம
ஹரே ராம
ராம ராம
ஹரே ஹரே
உங்கள் வாழ்வு புனிதமடையும்.

கிருஷ்ணரின் தொண்டிற்காக
பரிந்துரைக்கும் நன்கொடை

Rs 30=-

தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா

ஸ்தாபக ஆச்சாரியர் : அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம்